Registered as a Newspaper

பக்கங்கள் – 16+8

விலை – ரூபா 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 308

ஞாயிற்றுக்கிழமை
29 செப்ரெம்பர் 2024

புரட்டாதி 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"தேர்தல்காலத்தில
தான் ஒற்றுமையின்ர
அருமை தெரியுது
கண்டியளோ"

## அரச திணைக்களங்களில் 4,000 வாகனங்கள் மாயம்

கொழும்பு, செப். 29

அரச திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட நான்காயிரத்துக்கும் மேற்பட்ட சொகுசு வாகனங்கள் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்கறிக்கையின் அடிப்படையிலேயே இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அரச கணக்காய்வாளர் நாயகம் டபிள்யு.பி.சி.விக்ரமரத்ன இது தொடர்பில் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:-

தற்போது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து

# பிரிந்தோரே மீளிணைக; அழைக்கிறது தமிழரசு!

## வேட்பாளர் தெரிவுக்கு தனிக்குழு அமைப்பு

வவுனியா, செப்ரெம்பர் 29

கடந்த தேர்தலில் வீட்டுச் சின்னத்தில் கூட்டமைப்பாகப் போட்டியிட்ட பின்னர், பிரிந்து சென்றவர்களை மீண்டும் வந்து இணையுமாறு தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவால் நேற்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 14



## விரிவுரையாளர்கள் இருவர் பேராசிரியர்களாக உயர்வு!

யாழ்ப்பாணம், செப். 29

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இருவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமை 14

## காணாமலாக்கப்பட்டோருக்காக கிளிநொச்சியில் போராட்டம்

சிறுவர் தினத்தன்று முன்னெடுப்பு

கிளிநொச்சி, செப். 29

ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி காணாமலாக்கப்பட்டவர்களுக்கான நீதியை வலியுறுத்தி கிளிநொச்சியில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களால் இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் இறுதி நாளில் காணாமலாக்கப்பட்டோருக்கான 14

## நிறுத்தப்பட்டது யுக்திய



கொழும்பு, செப். 29

ஸ்ரீலங்காவில் கடந்த ஒரு வருடமாகச் செயற்படுத்தப்பட்டுவந்த யுக்திய சுற்றிவளைப்பு உடன் நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 14

## மேம்படும் சுற்றுலா

கொழும்பு, செப். 29

இலங்கையின் சுற்றுலா தற்போது மேம்பட்டு வருகின்றது என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அறிக்கையிட்டுள்ளது.

இந்த மாதத்தில் மட்டும் ஒரு இலட்சத் 14

## ஹிஸ்புல்லா தலைவர் நஸ்ரல்லா படுகொலை

பெய்ரூட், செப். 29

லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில் நேற்று இஸ்ரேல் நடத்திய தீவிரமான வான் தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் நஸ்ரல்லா படுகொலை செய்யப்பட்டுள்ளார். 14

## தவறான முடிவெடுத்து ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், செப். 29

பிரான்ஸில் இருந்து வந்த நபரொருவர் தவறான முடிவெடுத்து நேற்று முன்தினம் 14

பாடசாலை நிகழ்வுகளுக்கு

## பெற்றோரிடமிருந்து பணம் வாங்காதீர்!

கல்வி அமைச்சு கண்டிப்பு

யாழ்ப்பாணம், செப். 29

பாடசாலைகளில் இடம்பெறும் விசேட நிகழ்வுகளுக்குப் பெற்றோரிடமிருந்து பணம் அறவிடக்கூடாது எனக் கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. 14

## சா/த பெறுபேறு நேற்றிரவு அவுட்!

கொழும்பு, செப். 29

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பெறுபேறுகள் நேற்று இரவு 1 மணியளவில் வெளியாகியுள்ளன. (ம)

புலமைப்பரிசில் பரீட்சை

## வினாத்தாள் கசிந்தமை விசாரிப்பதற்காகக் குழு

கொழும்பு, செப். 29

தரம் ஐந்து புலமைப்பரிசில் வினாத்தாள் கசிந்தமை தொடர்பில் ஆராய்வதற்காக ஏழு பேர் கொண்ட 14

## வெல்கம காலமானார்



கொழும்பு. செப். 29

இலங்கையின் முன்னாள் அமைச்சர் குமார வெல்கம காலமாகியுள்ளார். உடல்நலக் குறைவால் கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்றுவந்த அவர், தனது 74 ஆவது வயதில் நேற்றுக் காலமாகிவிட்டார் என்பதை அவருடைய குடும்பத்தினர் உறுதிப்படுத்தியுள்ளனர். (அ-ம-25-சி)

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஆயிரம் பில்லியன் கடன் வாங்கிய ரணில்

கொழும்பு, செப். 29


முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 26 மாதங்களுக்குள் குறைந்த பட்சம் 5 ஆயிரத்து 113 பில்லியன் ரூபா உள்நாட்டுக் கடன்களை பெற்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் கற்கைப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள நிகழ்ச்சியொன்றில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் மொத்த உள்நாட்டுக் கடன் அளவு 12 ஆயிரத்து 442 பில்லியன் ரூபாவாக காணப்பட்டது. 2024ஆம் ஆண்டு ஜூன் மாதமளவில் 17 ஆயிரத்து 555 பில்லியன் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பேராசிரியர் மேலும் கருத்து தெரிவித்ததாவது:-

5 ஆயிரத்து 113 பில்லியன் ரூபா உள்நாட்டுக் கடன் தேறியவகையில் அதிகரித்துள்ளமை தொடர்பில் அந்நிய செலாவணி விகித அதிகரிப்பு உள்ளிட்ட துணை நிலைக் காரணிகள் எதுவுமே தாக்கம் ஏற்படுத்துவதில்லையென தெளிவுபடுத்தினார். அதாவது நேரடியாகவே கடன்பெற்றமையால் இந்தக் கடன்தொகை அதிகரித்துள்ளது- என்றார். (ஒ-இ)



# 'நாட்டை தூய்மையாக்குவோம்' வடமராட்சியில் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், செப். 29

லயன்ஸ் கழகத்தின் 'நாட்டை தூய்மையாக்குவோம்' எனும் தொனிப்பொருளிலான கடற்கரையை சுத்தமாக்கும் சிரமதானப்பணி நேற்று சனிக்கிழமை வடமராட்சி பருத்தித்துறை தும்பளை கடற்கரையில் வட பிராந்திய லயன்ஸ் கழகத் தலைவர் வேலுப்பிள்ளை தவச்செல்வம் தலைமையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தின் ஏழு லயன்ஸ் கழகங்கள் இணைந்து இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுத்தன.

சிரமதானப்பணியில் பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க தலைமையிலான சுமார் 30க்கும் மேற்பட்ட பொலிஸாரும், தும்பளை கிழக்கு சமுர்த்தி குழுக்கள் ஆகியோர் பங்குபற்றினர். (ச-27)

# இணுவிலில் வசந்தவிழா

யாழ்ப்பாணம், செப். 29

இணுவைத் தமிழ்ச் சங்கம் நடத்தும் வசந்தவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.15 மணியளவில் இணுவில் அறிவாலயத்தில் இணுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப்புலவர் ச.முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழக மொழியியல் துறை பேராசிரியர் சுந்தையா ஸ்ரீகணேசன் சிறப்பு விருந்தினராகவும், முருங்கன் நெல் ஆராய்ச்சி நிலைய விவசாய ஆராய்ச்சிப் பிரிவு உதவி விவசாயப் பணிப்பாளர் கலாவித்தகர் அழகேசன் அமிர்தலோஜனன், உடுவில் பிரதேச செயலகக் கலாசார உத்தியோகத்தர் திருமதி விஜிதா செல்வகுமார் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-66)

# தேங்காய்த் திருடர்கள் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், செப்.29

காணி ஒன்றில் இருந்த தென்னை மரங்களிலிருந்து தேங்காய்களை பிடுங்கிக்கொண்டிருந்த திருடர்களை அயலவர்கள் விரட்டியடித்துள்ளனர். இந்தச்சம்பவம் கொழும்புத்துறை மேற்கு வளன்புரத்தில் இடம்பெற்றுள்ளது. திருடர்கள் தேங்காய்களை பறிப்பதைக் கண்ட அயலவர்கள் கத்திக் கூக்குரல் எழுப்பிய சமயம் தேங்காய்களை கைவிட்டு அவர்கள் தப்பி ஓடியுள்ளனர். இவ்வாறான தேங்காய்த் திருட்டுச் சம்பவங்கள் அதிகம் நிகழ்வதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஒ-25, 17)

# எரிபொருள் விலை குறைப்பு; விரைவில் தீர்மானம்

கொழும்பு, செப்.29

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர், அமைச்சர் விஜித ஹேரத் இடையில் ஒக்ரோபர் மாதத்துக்கான எரிபொருள் விலை திருத்தம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. இதில் ஜனாதிபதியின் செயலாளர் உள்ளிட்ட அமைச்சின் செயலாளர்களும் கலந்துகொண்டுள்ளனர். மக்களுக்கு சலுகை அடிப்படையில் எரிபொருளை வழங்குவதற்காக எரிபொருளின் விலையை குறைப்பது தொடர்பில் ஆராய்ந்து உடனடியாக அறிக்கையிடுமாறு அமைச்சின் செயலாளர்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். எரிபொருள் விலை குறைப்பு தொடர்பில் இன்று அல்லது நாளைய தினத்திற்குள் தீர்மானம் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-25, சி)

# நினைவஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 29

அண்மையில் காலமான மறுமலர்ச்சி மன்ற முன்னாள் இளைஞர் கழகத் தலைவர் சாயினி குபேந்தனின் நினைவு அஞ்சலி நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் பண்டத்தரிப்பில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்ற உள்ளரங்கில் இடம்பெறவுள்ளது. (ச-66)

# கலாசாலை தினவிழா

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நிறுவப்பட்டு 101 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில் அதனைக் கௌரவப்படுத்தும் வகையில் அமைந்த கலாசாலை தின விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசாலை முதல்வர் ச. லலீசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஜமுனா ராஜசீலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

கலாசாலை நிறுவுவதற்கு நிலத்தை வழங்கிய சேர் பொன்.இராமநாதனைக் கௌரவப்படுத்தும் வகையில் 'ஆசிரிய கல்வியியலாளர்களின் தத்துவ ஆராய்ச்சிப் பட்டங்கள் தொடர்பில் மேற்கிளம்பும் சவால்களும் அவற்றைத் தாண்டிப் பயணித்தலும்' எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழகக் கல்வியியல்துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா நினைவுப் பேருரை ஆற்றுவார். (ச-66)

# கணக்கில் வராத 4,000 வாகனங்கள்

சுகாதாரம், கல்வி, தபால், நீர்ப்பாசனம் மற்றும் ஜனாதிபதி செயலகம் உள்ளிட்ட அரச திணைக்களங்களின் சுமார் 4 ஆயிரம் வாகனங்கள் காணாமல் போயுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளதால் தேசிய கணக்காய்வு அலுவலகம் அனைத்து அரச வாகனங்களும் உள்ளடங்கும் வகையிலான விசேட கணக்காய்வை ஆரம்பித்துள்ளது. (ஒ-இ)

# எரிபொருளுக்கான வரி நீக்கம்: வாக்குறுதியை நிறைவேற்றுங்கள்

## முன்னாள் அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, செப். 29

எரிபொருளுக்கான வரியை நீக்குவதாக அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென முன்னாள் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகர வலியுறுத்தியுள்ளார்.

எரிபொருள் மீதான வரியை நீக்குவோம் என தற்போதைய அரசாங்கம் தேர்தல் பேரணிகளில் கூறியதை சுட்டிக்காட்டிய முன்னாள் அமைச்சர் நாளை இரவுக்குள் எரிபொருள் விலை திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வாக்குறுதி அளித்தபடி வரிகளை நீக்கினால், ஒரு லீற்றர் டீசலின் விலை 100 ரூபாவாகக் குறையும். ஜனாதிபதித் தேர்தலை கருத்திற் கொண்டு இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் உத்தரவின் பேரில் இடைநிறுத்தப்பட்டிருந்த கடந்த அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகளை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்கு நன்றி கூறுகின்றேன்.

மேலும் ஒக்ரோபர் மாதத்திற்கான மின்சார விலை திருத்தம் இலங்கை மின்சார சபையின் அதிகாரிகளால் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அதனை தாமதமின்றி இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதிக்கு அனுப்புமாறும் கோருகின்றேன் - என்றார். (ஒ-இ)

# 2, 941 மாணவர்கள் பல்கலை வாய்ப்பு இழப்பு

கொழும்பு, செப். 29

பல்கலைக்கழகத்தின் வெற்றிடங்களுக்கு மாணவர்களை மீண்டும் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்காத நிலையில், இரண்டு கல்வியாண்டுகளில் மட்டும் 2 ஆயிரத்து 941 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியை இழந்துள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக, 2020-2021 கல்வியாண்டில் ஆயிரத்து 857 மாணவர்களும், 2021-2022 கல்வியாண்டில் ஆயிரத்து 84 மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதியை இழந்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தொடர்பான 2023ஆம் ஆண்டுக்கான சுபீட்சிய கணக்காய்வு அறிக்கையின் கணக்காய்வு அவதானிப்புகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பதில் கணக்கு தணிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அந்தந்த கல்வியாண்டுகளில் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு மாணவர்கள் நியமிக்கப்பட்டிருந்தும் அந்த மாணவர்கள் சேர்க்கையை ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் மேற்படி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச விழாக்களுக்கு நிதியை வீண்விரயம் செய்யாதீர்

## பிரதமர் ஹரிணி பணிப்புரை



கொழும்பு, செப். 29

**ஒரு அரசாங்கம் என்ற வகையில், பொது நிதியை விரயம் செய்தல், துஷ்பிரயோகம் செய்தல் குறித்து நாங்கள் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறோம், செலவினங்களைக் கட்டுப்படுத்த நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். எனவே விழாக்களுக்கு செய்யும் வீண் விரயத்தை குறைக்கவேண்டும் - இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய பணிப்புரை விடுத்துள்ளார்.**

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் தலைவர்களுடன் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு கருத்து தெரிவித்த பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய,

பிரதமர் என்ற முறையில், எனது பொறுப்பில் உள்ள அனைத்து அமைச்சுகளிலும் செய்யப்பட வேண்டிய மற்றும் இதுவரை செய்யப்படாத முன்னுரிமைகள் அடையாளம் காணப்பட்டு வருகின்றன. குறிப்பாக விளையாட்டு அமைச்சில் பல முக்கிய விடயங்கள் தெரியவந்துள்ளன.

அரசாங்கத்திடமிருந்து கிடைத்த ஒதுக்கீடுகள் மற்றும் செலவழிக்கப்பட்ட தொகைகள் குறித்த புள்ளி விவரங்கள் அமைச்சிடம் உள்ளன. ஆனால் அந்த செலவினங்களின் முன்னேற்றம் குறித்து இதுவரை எந்த அவதானிப்பும் செய்யப்படவில்லை. செலவழித்த பணத்தில் என்ன நடந்தது என்பது பற்றி விரைவாக உள்ளகக் கணக்காய்வு ஒன்று செய்யப்பட வேண்டும்.

அரச நிறுவனங்களில் இடம்பெற்றுள்ள பல்வேறு மோசடிகள் மற்றும் ஊழல்கள் குறித்து கண்டறிய நிறுவன ரீதியாக குழுக்கள் நியமிக்கப்படுவதில்லை. அதற்கான முறையான வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரித்துள்ளது.

விளையாட்டு நடவடிக்கைகள் மற்றும் கடமைகளின் போது நிகழும் வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் குறித்து கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்கு விளையாட்டு அமைச்சிடம் முறையானதொரு திட்டம் இல்லை. எனவே, வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் குறித்து கண்டறிந்து விழிப்புணர்வை ஏற்படுத்த சரியான வேலைத்திட்டத்தை தயாரியுங்கள்- என்றார். (ஒ-இ)





சர்வதேச புத்தகக் கண்காட்சி; பார்வையிட்டார் ஜனாதிபதி

கொழும்பு,செப்.29

இலக்கிய மாதத்தையொட்டி 25 ஆவது தடவையாக கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்படும் 'கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சியை' ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று சனிக்கிழமை பார்வையிட்டார்.

இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படுகின்ற இந்தப் புத்தகக் கண்காட்சி எதிர்வரும் ஒக்ரோபர் 6 ஆம் திகதிவரை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் இடம்பெறும்.

இதன்போது, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் லியனகே அமரகீர்த்தி, கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் உதார திக்கும்புர, பணிப்பாளர் சமந்தி ஜயசூரிய, மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் இணை நிர்மாணப் பிரிவின் தலைவர் ருவன்திகா சேனநாயக்க உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ச)

## புரட்டாதிச்சனி விரத வழிபாடு

யாழ்ப்பாணம், செப்.29

இரண்டாவது புரட்டாதிச் சனி விரதத்தை முன்னிட்டு யாழ். குடாநாட்டில் உள்ள ஆலயங்களில் சிறப்பு பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. நல்லூர் சட்டநாதர் ஆலயம், வண்ணை சிவன்கோயில், வண்ணை வரதராஜப்பெருமான் ஆலயம் போன்ற அனேகமான சிவன் ஆலயங்களில் மக்கள் சட்டியில் எண்ணெய் விளக்கேற்றி வழிபாட்டில் ஈடுபட்டனர். (ஒ-25, 17)

## யாழ். முற்றவெளியில் பொலிஸ் கண்காணிப்பு

யாழ்ப்பாணம், செப்.29

யாழ்.நகர் முற்றவெளி பிரதேசத்தில் பொலிஸாரின் கண்காணிப்பு மற்றும் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

கோட்டையை சூழவுள்ள பகுதிகளில் இரவு வேளையில் பொலிஸாரின் கண்காணிப்பு இடம்பெற்றுவருகிறது. இங்கு போதைப்பொருள் விற்பனை அதிகளவில் இடம்பெறுவதோடு கலாசார சீர்கேடான விடயங்கள் நடைபெறுவதால் இவற்றைக் கட்டுப்படுத்த பொலிஸார் துரிதமாக செயற்பட வேண்டுமென்பதே பொதுமக்களின் கோரிக்கையாகவுள்ளது. (ஒ-25, 17)

# ஹரின் காலத்து கணக்கு; விசாரணைக்கு தயார்!

கொழும்பு, செப். 29

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவால் விளையாட்டு நிதியில் இருந்து பணம் செலவழித்து ஏற்பாடு செய்யப்பட்ட ஸ்போர்ட்ஸ் பீஸ்டா தொடர்பான கணக்காய்வைக் கோருவதற்கு விளையாட்டு அமைச்சின் அதிகாரிகள் தயாராகி வருகின்றனர். சுமார் 400 இலட்சம் ரூபா செலவில் நடைபெற்ற இந்த பிரம்மாண்ட விழாவின் போது நடத்தப்பட்ட இசை நிகழ்ச்சிகளுக்கு பெருமளவு பணம் செலவழிக்கப்பட்டதாகவும், விளையாட்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதி மோசடியான முறையில் செலவு செய்யப்பட்டதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

விளையாட்டு ஊக்குவிப்பு என்பதைத் தாண்டி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிம்பத்தை உயர்த்தும் அரசியல் செயற்திட்டமே இது என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)



## ஹக்கீம் - சந்தோஷ்ஜா இடையில் சந்திப்பு

கொழும்பு, செப். 29

இந்தியத் தூதுவர் சந்தோஷ்ஜா, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை நேற்றுமுன்தினம் சந்தித்தார். இலங்கையின் அரசியல் முன்னேற்றங்கள் மற்றும் இந்திய இலங்கை உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது. (ஒ-இ)

## தமிழ் எம்.பி.க்களில் சிறீதரனுக்கு முதலிடம்

கொழும்பு, செப். 29

நாடாளுமன்ற அமர்வுகளில் சிறப்பாக செயற்பட்ட உறுப்பினர்களின் தரவரிசை வெளியீட்டில், முதல் 15 இடத்துக்குள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2020 தொடக்கம் 2024 வரையான நாடாளுமன்றில், 52 தமிழ் பேசும் உறுப்பினர்கள் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்களுள் சிறப்பாக் செயல்பட்ட முதலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராக சிறீதரன் உள்ளார். (ஒ-இ)

## கட்சிக்கு மீண்டும் இணையவாருங்கள்

*கூவுகிறார் நாமல்*

கொழும்பு, செப். 29

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து கொண்ட மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளை மீண்டும் பொதுஜன பெரமுனவில் இணையுமாறு அதன் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச அழைப்பு விடுத்துள்ளார்.

அடுத்த பொதுத் தேர்தலுக்காக கட்சியை மறுசீரமைத்து, திறமையான இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என நாமல் ராஜபக்ச மேலும் தெரிவித்தார். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமை அமைதி விருது விண்ணப்பம் கோரல்



யாழ்ப்பாணம், செப்.29

இந்த ஆண்டுக்குரிய பசுமை அமைதி விருதுகளைத் தெரிவு செய்வதற்கான சூழல் பொதுஅறிவுப் பரீட்சை இணையவழியூடாக ஒக்ரோபர் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 8.30 மணி வரை நடைபெறவுள்ளது. இதனையடுத்து மாணவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

பரீட்சையில் தரம் -9 முதல் -13 வரை பயிலும் இலங்கையை வதிவிடமாகக் கொண்ட மாணவர்கள் தோற்ற முடியும். இலவசமாக நடைபெறவுள்ள இந்தப் பரீட்சையில் தோற்ற விரும்பும் மாணவர்கள் www.tamilnationalgreen.org இணையத்தளத்தின் ஊடாக 20ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னராக பதிவுகளைமேற்கொள்ளவேண்டும். பரீட்சையில்சித்தியடையும் அனைத்து மாணவர்களுக்கும் பசுமை அமைதிச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதுடன், முதல் 100 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு பசுமை அமைதிச் சான்றிதழோடு பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. சித்தியடைந்த முதல் 3 மாணவர்கள் பசுமை அமைதிச் சான்றிதழ், சிறப்புப் பரிசுகளுடன் சூழலியல் ஆசான் க. சி. குகதாசன் ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதும் வழங்கி வைக்கப்படவுள்ளன. (ரி-27)

## சமூக நல்லிணக்கப் போட்டி

யாழ்ப்பாணம், செப்.29

அச்சுவேலி சென்திரேசா கல்லூரியில் தரம் - 9 மாணவர்களுக்கு அயற் பாடசாலைகளான அச்சுவேலி மத்திய கல்லூரி, இடைக்காடு மகா வித்தியாலயம் இணைந்து நடத்திய நல்லிணக்கப் போட்டி யாழ். கல்வி வலயம் சமூகவிஞ்ஞான ஆசிரிய ஆலோசசர் திருமதி திரேசா மரியநாயகம் தலைமையில் கடந்த புதன்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்றது.

நிகழ்வில் மாணவர்கள் நாடகம், பாடல், பேச்சு, பாட்டு எனப் பலவிதமான செயற்பாடுகளை முன்வைத்தனர். இதில் குறிப்பாக அச்சுவேலி மத்திய கல்லூரியால் முன்வைக்கப்பட்ட 'மதத்தைத் தாண்டிய இலங்கையர்கள்' என்ற நாடகம் அரங்கேற்றப்பட்டது. (ச-45)

**2025 ஆம் ஆண்டின்**

தரம் 5, 4 மாணவர்களுக்கான (தற்போது தரம் 4, 3)

**மாதிரி வினாத்தாள் பரீட்சையும் சிறப்பான விளக்கமளித்தலும்**

ஆசிரியர்கள்

- திரு ப.பத்மநேசன் - யாழ்/ மகாஜனக் கல்லூரி
- திரு என்.எஸ்.தீபன் - யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை

**ஆரம்பம் 06.10.2024 ஞாயிறு**
**(அனுமதிகள் வழங்கப்படுகின்றன)**

தரம் 4, 3 மாணவர்களுக்கான வழிகாட்டல் வகுப்புகள் நடைபெறுகின்றன. புதிய பிரிவுகள் ஆரம்பம் 12.10.2024 சனி மாலை 3.00

(CS 1468) V-1

**N.B.A அக்கடமி**

முத்தொட்டு மட வீதி
கோண்டாவில் மேற்கு



தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியா சாலையின் 94 ஆவது நிறுவுநர் தினம் எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ச-45)

## ஆவணப்படத் திரையிடல்



யாழ்ப்பாணம், செப்.29

யாழ்ப்பாணம் குடிநீர்ப் பிரச்சினையைப் பேசுபொருளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட 'யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு வந்துவிட்ட தங்கத்திரவம்' எனும் ஆவணப் படத் திரையிடலும், சமகால சமூகப் போக்குகள் பற்றிய உரையாடலும் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் கைலாசபதி கலையரங்கில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

தாயகத்தின் உள்ளூர் நீர் மூலங்களின் முக்கியத்துவம், அவற்றுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல், அவற்றைப் பாதுகாப்பதில் அரசாங்கத்துக்கும், அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் உள்ள கடப்பாடு என்பவற்றை ஆவணப்படுத்துவதனூடாக சமூகத்தின் மத்தியில் கொண்டு செல்லும் நோக்கில் இந்தத் திரையிடல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ரி)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**இலங்கையின் முன்னணி பளுதூக்கல் வீராங்கனையான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி**

**சானியா அன்யுபிற்**

பெண்களுக்கான தேசிய பளுதூக்கல் போட்டியில் பங்குபற்றி
**தங்கப்பதக்கத்தினை வென்றுள்ளார்**

Best Wishes

பாராட்டி வாழ்த்துவோர்
குடும்பத்தினர்
மற்றும் உறவினர்

(CS 1470) A-1




## அனுபவப் பகிர்வு நிகழ்வு

காவேரி கலாமன்றம் மற்றும் மாற்று மக்கள் சபை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த 'பரிந்துரைப் பயணத்தின் கதைகள்' எனும் தலைப்பிலான அனுபவப் பகிர்வு நிகழ்வு காவேரி கலா மன்ற இயக்குநர் வண. டி.எஸ். யோசுவா தலைமையில் யாழிலுள்ள தனியார் விடுதியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் மாற்று மக்கள் சபை, காவேரி கலா மன்ற ஊழியர்கள், சமூக மட்டத்திலான அமைப்புகளான தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், தோல் பொருட்கள் உற்பத்தியாளர்கள், முச்சக்கர வண்டிச் சாரதிகள் சங்கம், சிகை அலங்கார நிலைய உரிமையாளர் சங்கம் என்பன கலந்து கொண்டன. (ச-25, 27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AIA ஸ்ரீலங்காவின் மிகச்சிறந்த வெல்த் பிளானர்கள் AIA குழுமத்திற்கு தொடர்ந்தும் 10 வது ஆண்டாக உலகின் நம்பர் 01 MDRT நிறுவனமாக தெரிவு செய்யப்படுவதில் முக்கிய பங்காற்றுகின்றார்கள்.

AIA ஸ்ரீலங்காவின் தாய் நிறுவனமான சர்வதேச AIA குழுமம், ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்தில் 18 நாடுகளுக்கு மத்தியில் வணிகத்தை நடாத்தும் ஒரு சர்வதேச நிறுவனமாகும், ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்தில் வணிகத்தை MDRT உறுப்பினர்களின் தனித்துவமான பங்களிப்போடு தொடர்ந்து 10 வது ஆண்டாக MDRT அங்கத்துவத்தில் உலகில் முதல் நிறுவனமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. குளோபல் டாப் 100 லைப் இன்சூரன்ஸ் கம்பனி தரவரிசையில் தொடர்ந்து 10 ஆண்டுகளாக முதலிடத்தைப் பெற்ற ஒரே ஒரு ஆயுள் காப்பீட்டு நிறுவனம் AIA குழுமம் ஆகும். மேலும் AIA குழுமம் 2024 ஆம் ஆண்டில் மொத்தம் 18,750 MDRT உறுப்பினர்களை உருவாக்கியுள்ளது.

ஆயுள் காப்புறுதி துறையில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாகவும், நம்பகமான நற்பெயருடன் விற்பனைப் படை உறுப்பினர்களை உருவாக்குவதே AIA நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்கு AIA நிறுவனத்தின் Premier Agency Circle ஆனது சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்நிறுவனமானது ஆசியா முழுவதும் செயல்படும் சந்தைகளுக்கு Premier Agency Circle மாதிரியை அறிமுகப்படுத்துவதன் மூலம் அதன் விற்பனைப் படையை அடுத்த கட்டத்திற்கு கொண்டு வர தொடர்ந்து முதலீடு செய்து வருகின்றது. AIA நிறுவனத்தின் விற்பனைப் படையானது வாடிக்கையாளர்களுடன் நம்பிக்கையான உறவுகளைப் பேணுவதற்கு உறுதிபூண்டுள்ளது. மேலும் அவர்களின் வாழ்க்கையில் ஒரு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துவதோடு, ஆரோக்கியமான, நீண்டகால மற்றும் சிறந்த வாழ்க்கை முறையை அடைவதில் அவர்களுக்கு உதவுகின்றது. அதனால் தான் அவர்கள் மிகப்பெரிய உறுப்பினர்களைக் கொண்ட நம்பர் 01 குழுவில் உள்ளனர்.

AIA ஸ்ரீலங்காவின் முகவர் விநியோக வலையமைப்பானது மிகவும் பிரபல்யமான ஒன்றாக காணப்படுகின்றது. (LMD மற்றும் NIELSEN தரப்படுத்தலினால் கௌரவிக்கப்பட்டுள்ளது) மற்றும் அனைவராலும் மிகவும் விரும்பப்படும் காப்புறுதி நிறுவனமாக (PepperCube ஆலோசகர்கள் கணக்கெடுப்புத் தரவுகளின் அடிப்படையில் LMD யினால்) கௌரவிக்கப்பட்டது. AIA நிறுவனத்தின் முகவர் மற்றும் வங்கிக் காப்புறுதி விநியோகப்பிரிவுகள் உயர்தரமான சேவையை உறுதி செய்யும் வகையில் அதிக அளவிலான தொழில்முறையுடன் தங்கள் வணிகத்தை நடாத்துவதில் தொடர்ந்து கவனம் செலுத்துகின்றனர். இத்தகைய அறிவு மற்றும் பயிற்சியுடன் கொண்ட AIA ஸ்ரீலங்காவின் முகவர்கள் வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு பரந்தளவிலான ஆயுள் காப்புறுதி, சுகாதார காப்புறுதி, ஓய்வுதியத்திட்டங்கள் மற்றும் முதலீட்டு தீர்வுகளை வழங்குவதன் மூலம் அவர்களின் எதிர்கால நிதிப்பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றனர்.

## COT வெற்றியாளர்கள்



**க பிரான்**
கிளிநொச்சி பிராந்திய அலுவலகம்
MDRT COT Member 2024
08 ஆண்டு கால அங்கத்துவம்

## MDRT ஆயுள் அங்கத்தவர்கள்



**அ மணிவண்ணன்**
கொழும்பு மெற்றோ பிராந்திய அலுவலகம்
MDRT Honor Roll Member
18 ஆண்டு கால அங்கத்துவம்

## AIA முகவர் விநியோகப்பிரிவு 2024 MDRT அங்கத்தவர்கள்



**து சிறீஸ்கரன்**
வவுனியா பிராந்திய அலுவலகம்



**தே வேணுகோபாலன்**
கிளிநொச்சி பிராந்திய அலுவலகம்



**த பிரதீபன்**
யாழ்ப்பாண பிராந்திய அலுவலகம்



**அ ஷோபனா**
யாழ்ப்பாணம் மெற்றோ பிராந்திய அலுவலகம்



**து தயாளினி**
கிளிநொச்சி பிராந்திய அலுவலகம்



**யோ ஜெயவாணி**
நெல்லியடி பிராந்திய அலுவலகம்



**ஆர் சன்மனோஜன்**
ஹட்டன் பிராந்திய அலுவலகம்

## AIA நிறுவனத்தினுடைய வங்கிக் காப்புறுதி பிரிவு 2024 MDRT அங்கத்தவர்கள்



**பாலகேந்தப்பிள்ளை சஞ்சையன்**
DFCC வங்கிக் காப்புறுதி
கொழும்பு பிராந்தியம்



**மனோகரன் கோகிலராஜன்**
NDB வங்கிக் காப்புறுதி
கொழும்பு பிராந்தியம்



**பிரியாஞ்சலி ஜான்சன்**
NDB வங்கிக் காப்புறுதி
வடக்கு பிராந்தியம்



**மிதுஜா சீவரத்தினம்**
Commercial வங்கிக் காப்புறுதி
வடக்கு பிராந்தியம்

**MDRT** (மில்லியன் டாலர் ரவுண்ட் டேபிள்) ஆயுள் காப்பீட்டு விற்பனையாளர் அடையக்கூடிய மிக உயர்ந்த சர்வதேச மதிப்பீடு.

**MDRT- (COT-Court of the Table):** MDRT மதிப்பீட்டிற்குத் தேவையான தகுதிகளை விட மூன்று மடங்கு அதிகமாக இருப்பவர்களுக்கு வழங்கப்படும் ஒரு கௌரவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள் தேவை

விசா வேலை கணினி வேலை ரிக்கட்டின் வேலை அனுபவம் உள்ளவர்கள் தேவை.
077 6040 373

## வேலையாட்கள் தேவை

சமையளாளர், ரொட்டி, அப்பம் தயாரிப்போர் தேவை. (வவுனியா)
076 4857 784

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக்கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.
**198, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
**(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்**
077 138 7596, 071 999 9306

## Apartment வீடு விற்பனைக்கு

PEREIRA LANE, வெள்ளவத்தையில் GALLE ROAD, DELMON HOSPITAL & MARKET க்கு மிக அருகாமையில் அமைந்துள்ள 2 BEDROOM WITH 1 BATHROOM உள்ள தொடர்மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

## 10 ACRE காணி விற்பனைக்கு

POINT - PEDRO மருதங்கேணி வத்திராயன் கிழக்கு கிராமசேவகர் அலுவலகத்திற்கு அருகாமையில் புதிய காப்பற் வீதியில் (& அரசடி வீதி) அமைந்துள்ள 10 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 0772680029
+14165560642 (WhatsApp)

## மரண அறிவித்தல்



மலர்வு 01 . 09 . 1952
உதிர்வு 27 . 09 . 2024

### திருமதி சபாரத்தினம் தேவயாணி

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சபாரத்தினம் தேவயாணி அவர்கள் நேற்றுமுன்தினம் (27.09.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற காளிமுத்து - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கண்ணன் - கன்னியம்மாள் தம்பதியரின் அன்பு மருமகளும், கண்ணன் சபாரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சண்முகவடிவேல், இந்திராணி, ராமு, செல்வநாயகம் (லண்டன்), காலஞ்சென்ற இராசதுரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பாகரன், பிரபாகரன், கருணாகரன் (Ran Ruwan முகாமையாளர், சாவகச்சேரி கிளை), வசீகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், குகனேஸ்வரி (கோவிலாக்கண்டி செல்வா முன்பள்ளி ஆசிரியர்), மைதிலி, தமிழினி ஆகியோரின் அன்பு மாமியும், நார்த்தனன், வாணவி, கிருஷ்ணவி, பிரித்தி, தஸ்விகா ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.09.2024) திங்கட்கிழமை காலை 08.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காந்தாளம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
021 492 1160
077 684 2765
(CR/43299) J-1

## பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டு

# பொறுப்பதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தயக்கம்?

யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் 25 வயதான ஆண் பொலிஸ் அலுவலரை பாலியல் ரீதியாக துன்புறுத்தி குற்றச்சாட்டுக்குள்ளான காங்கேசன்துறை விசேட பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு தயக்கம் காண்பிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் பதவி விலகவுள்ளதாக அறிவித்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 8ஆம் திகதி, காங்கேசன்துறை விசேட பொலிஸ் பிரிவில் கடமை புரியும் பொலிஸ் உத்தியோகத்தர்களை, அவர்களது பொறுப்பதிகாரி, சேந்தாங்குளம் கடற்கரைக்கு அழைத்துச் சென்று, அங்கு பொது நபர்கள் சிலருடன் இணைந்து மதுபான விருந்தில் ஈடுபட்டுள்ளார். அங்கு கடலில் குளிக்கும்போது 25 வயதான பொலிஸ் அலுவலருடன் பாலியல் சேட்டையில் ஈடுபட முயன்றுள்ளார். அதன்பின்னர், மதுபோதையில் இருந்த பொறுப்பதிகாரியை, பொலிஸ் உத்தியோகத்தர் அழைத்துச் சென்று மல்லாகத்திலுள்ள விடுதி அறையில் தங்க வைத்து விட்டு வெளியே வர முயற்சித்துள்ளார். பொறுப்பதிகாரி அறையைப் பூட்டிவிட்டு பொலிஸ் உத்தியோகத்தரை பாலியல் ரீதியாக துன்புறுத்தியுள்ளார்.

இதனால், கோபமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் அவரைத் தாக்கிவிட்டு வெளியே வந்துள்ளார். இந்த விடயத்தை சக உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தியவேளை, சக உத்தியோகத்தர் ஒருவர் அதை பொலிஸ் விசேட பிரிவினர் முறைப்பாடுகள் செய்யும் புத்தகத்தில் பதிவு செய்துள்ளார்.

இதனால், பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராக வழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.


இருப்பினும் அந்த விசாரணை முறையாக நடைபெறாமல், பொறுப்பதிகாரியை பாதுகாக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. விசாரணை என கூறி 25 வயதான பொலிஸ் உத்தியோகத்தரை காலை 8 மணிக்கு அழைப்பதாகவும், அந்த பொலிஸ் உத்தியோகத்தர் யாழ்ப்பாணத்தில் இருந்து அங்கு செல்வதற்கு சற்றுத் தாமதமாகியதால், விசாரணைகளை மேற்கொள்ளாமல் திருப்பி அனுப்பி இழுத்தடிப்பு செய்வதாகவும் தெரியவருகின்றது. அத்துடன், குறித்த விடயத்தை புத்தகத்தில் எழுதிய பொலிஸ் உத்தியோகத்தரும், பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரும், பொறுப்பதிகாரியால் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்பட்டு நெருக்கடிகளுக்கு உள்ளாகி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

(ஓ-20,27)

## காவலாளி Security Gurd தேவை

அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு இரவு நேர காவலாளி தேவை.
சம்பளம் 45000/=
தொடர்புகளுக்கு:
0777 111 999

## மரண அறிவித்தல்



தோற்றம் 20.11.1947 ✝ மறைவு 28.09.2024

### திரு.இராசரத்தினம் முத்துரட்ணானந்தன்

ஓய்வுபெற்ற பிரதிப் பொது முகாமையாளர் (CEB) திரு.இராசரத்தினம் முத்துரட்ணானந்தன். 2024 செப்டம்பர் 28 ஆம் திகதி காலமானதாக அன்னாரின் குடும்பத்தினர் அறிவிக்கின்றனர்.

அன்னார் ஜீவனீட்டாவின் அன்புக் கணவரும், நிரேஷின் பாசமிகு தந்தையும், ஜெமைமாவின் அன்பு மாமனாரும், ஜீவா, மறைந்த சின்னா, சுட்டி மற்றும் தங்கா ஆகியோரின் பாசமுள்ள சகோதரனும், பகிரதன், சுவேந்திரா, றுபேந்திரன் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவரான வண.ஈ.டி ராசரத்தினம், நேசமணி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு ஜோன் கனகரட்ணம், ரோஸ்மலர் ஆகியோரின் மருமகனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக 2024 அக்டோபர் 1 ஆம் திகதி காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை ஜயரத்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, இறுதிக்கிரியை ஆராதனை 2024 ஒக்டோபர் 2 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பிற்பகல் 4 மணிக்கு பொரளை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

## விசா ஆலோசனை சேவை

இத்தாலி 02 வாரங்களில் பயணம், UK, கங்கேரி, அல்பேனியா, Work விசா, விசிட் விசா.
077 6040 373

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் 6 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு:
077 674 8310

## வீடு வாடகைக்கு தேவை

நல்லூர், நாவலர் வீதி, கந்தர்மடம் பகுதியில் சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு:
076 705 8399, 077 264 8927

## அறை வாடகைக்குண்டு

A/L படிக்கும் மாணவர்களிற்கு யாழ்ப்பாணம் சயன்ஸ்ஹோல், சயன்ஸ் வேல்ட் இற்கு அருகாமையில் அறைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 076 387 1033, 071 310 6279

## THE ROYAL COLLEGE OF JAFFNA

தனியார் கல்வி நிறுவனம் சங்கானை 3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயிற்சி ஆசிரியர் ந.விக்னேஸ்வரன் ஆச்சார்யார். (26 வருட அனுபவம்) குபேரன் கட்ட மாடி, பிரான்பற்று வீதி, சங்கானை.
தொடர்பு: 077 675 1649

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பான்சி கடைக்கு வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும். அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை.
(தகுந்த சம்பளம் வழங்கப்படும்)
தொடர்புக்கு: 077 132 4319

## நல்லூரில் காணி விற்பனைக்கு

**நல்லூர் நாவலர்** வீதியில் (Temple Road) க்கு அருகில் 1.1/2 பரப்பு காணி விற்பனைக்கு. மற்றும் Colombo **வெள்ளவத்தையில்** 640, 1150, 1350 Sqft Apartments. பம்பலபிட்டியில் 1170 Sqft Apt. தெஹிவளையில் 1180 Sqft 3BR. கல்கிசையில் 3p இல் தனிவீடு. 11p இல் 4 Unit மாடிவீடு Galle Rd க்கு அருகில் 400m. 02BR, 02BathR for Rent in Wellawatte.
தொடர்புக்கு: 077 1153 715

## மேற்பார்வையாளர் தேவை

யாழ்பாணத்தில் இயங்கும் வெளிநாடுகளுக்கு உணவு பொருட்களை ஏற்றுமதி செய்யும் நிறுவனமொன்றிக்கு மேற்பார்வையாளர் பதவி வெற்றிடமுள்ளது. தகைமையுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். மோட்டார் சைகிள் இருக்கவேண்டும். வயதெல்லை 30-55 வயதிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.
தொடர்பு: 077 711 1999
(CS 1473) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# காத்திருக்கும் அபாயம்

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டது. அது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர வேறு யார் ஆட்சிக்கு வந்தாலும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, புதியவர்கள் தமக்கான அரசாங்கத்தை உருவாக்க முயல்வார்கள். அதற்கு அமைவாக அநுரகுமார திஸாநாயக்க, நாடாளுமன்றத்தின் ஆயுள்காலம் 11 மாதங்கள் இருக்கையில் தேர்தலை நடத்துவதற்கு அறிவிப்பு விடுத்திருக்கின்றார். ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்த் தரப்புகள் சின்னாபின்னமாகி நின்றன. ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து வரும் நாடாளுமன்றத் தேர்தலை எப்படி எதிர்கொள்வது என்ற எந்தவொரு திட்டமிடலும் இல்லாமல் செயற்பட்டன. இப்போது எப்படி வாக்கைச் சுருட்டலாம் என்ற எண்ணத்துடன் ஒவ்வொரு கட்சிகளும் செயற்படத் தொடங்கியிருக்கின்றன.

இதேவேளை, தெற்கில் ஏற்பட்ட மாற்றத்தின் அலையின் தாக்கம் வடக்கு-கிழக்கில் எதிரொலிக்கத் தொடங்கியிருக்கின்றது. தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற இரு தரப்பிலும் உள்ள பாரம்பரிய அரசியல்வாதிகளுக்கு எதிரான அலை இரு சமூகங்கள் மத்தியிலும் வெளிப்படையாகப் பேசப்படக்கூடிய அளவுக்கு வளர்ந்திருக்கின்றது. இளையவர்களுக்கு புதியவர்களுக்கு வழிவிடவேண்டும் என்ற கருத்து மேலோங்கத் தொடங்கியிருக்கின்றது.. இதன் வெளிப்பாடாகவே பாரம்பரிய அரசியல்வாதிகளுக்கு எதிரான கருத்துகள் வெளிப்படத் தொடங்கியிருக்கின்றன. அதேநேரம் தெற்கில் நாடாளுமன்றத் தேர்தலிலும் மாற்றம் தொடரும் என்பதால், பாரம்பரிய அரசியலை முன்னெடுத்து கடந்த நாடாளுமன்றத்தில் இடம்பிடித்த பலரும் தற்போது தமது ஓய்வை அறிவிக்கத் தொடங்கியிருக்கின்றனர். இந்த வரிசையில் வடக்கிலிருந்தும் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் இருவரும் பகிரங்கமாக தங்கள் ஓய்வை அறிவித்துள்ளனர்.

ஆனால் தமிழ் பேசும் சமூகத்தினர் எதிர்பார்க்கும் மாற்றத்தை பாரம்பரிய அரசியல் கட்சிகளோ அல்லது பாரம்பரிய அரசியல்வாதிகளோ கொடுப்பார்களா என்பது சந்தேகமே. ஏனெனில் எந்தவொரு பிரதான பாரம்பரிய அரசியல்வாதிகளும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஒதுங்கியிருக்கப் போவதாகச் சொல்லவில்லை. அதேவேளை, தமிழ்பேசும் சமூகம் எதிர்பார்க்கும் மாற்றத்தை கொடுக்காமல், ஏமாற்றத்தைக் கொடுப்பதற்காகவும் சில நடவடிக்கைகளை இந்தப் பாரம்பரிய அரசியல்வாதிகள் முன்னெடுக்கத் தொடங்கியுள்ளனர். கடந்த காலங்களில் தங்களுக்கு 'கூஜா' தூக்கிய இளையோரை அங்கொன்றும் இங்கொன்றுமாக களமிறக்க தீர்மானித்திருக்கின்றனர். அவ்வாறு களமிறக்கி, மக்களின் காதில் பூச்சுற்றலாம் என கருதுகின்றனர். அது அவர்களின் இருப்புக்கே ஆப்பாகத்தான் அமையும்.

உண்மையில் தமிழ் பேசும் சமூகம் எதிர் பார்க்கும் மாற்றத்தை பாரம்பரிய அரசியல் கட்சிகளும் - பாரம்பரிய அரசியல்வாதிகளும் வழங்காவிட்டால், மாற்றத்தை முன்வைக்கும் தேசியக் கட்சிகளின் பின்னால் தமிழ்ப் பேசும் சமூகம் அணிதிரளும் அபாயம் இருக்கின்றது. ஒவ்வொரு பாரம்பரிய அரசியல்கட்சிகளும், அந்தச் சமூகத்தின் உரிமைக் கோரிக்கையை முன்னிறுத்தி உருவானவை. அதற்காக கடந்த காலங்களில் அவை அர்ப்பணிப்புடன் செயற்படவில்லை என்பதால், அவை உருவாக்கப்பட்ட நோக்கத்தை சிதைப்பதை ஏற்கமுடியாது. எனவே, இதைக்கருத்திலெடுத்து பாரம்பரிய அரசியல் கட்சிகளும், பாரம்பரிய அரசியல்வாதிகளும் செயற்படாவிட்டால், மாற்றமென்ற முலாம் பூசிய சிங்களக் கட்சிகளின் பின்னால் தமிழ் பேசும் சமூகம் அள்ளுண்டுபோகும் அபாயம் நிச்சயம்.




# புதுமுகங்களை கண்டறியுங்கள்

*தமிழர் சம உரிமை இயக்கம் தமிழ் மக்களிடம் கோரிக்கை*

**யாழ்ப்பாணம், செப். 29**

**எதிர்வரும் பொதுத் தேர்தலில் வடகிழக்குத் தழுவிய தூய தமிழ்த் தேசிய முகங்களைத் தொகுதி வாரியாக அனைத்துச் சமத்துவப் பிரதிபலிப்புகளுடன் கண்டறிய உதவுமாறு தமிழர் சம உரிமை இயக்கம் அனைத்துத் தமிழ்மக்களிற்கும் அறைகூவல் விடுத்துள்ளது.**

கட்சி அரசியலைத் தாண்டித் தமிழ்த் தேசியக் கொள்கை அரசியல்த் தளமே முன்னெடுக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கின்றனர். முதிர்ந்த அரசியல் தலைவர்கள் வழிகாட்ட நிபுணத்துவமும், பல் பரிணாம ஆளுமையும், தமிழ்த் தேசியப் பற்றுறுதியும் கொண்ட தமிழ்த்தேசியச் செயற்பாட்டாளர்கள் அணி வடகிழக்கில் களம் காணவேண்டும் என்பது இன்று தமிழர்கள் அனைவரதும் வேணவா. தூயதமிழ் தேசிய முகங்களைப் பரிந்துரை செய்யுமாறு வேண்டுகின்றோம். அவர்கள் மக்கள் மன்றில் வெளிப்படுத்தப்பட்டு தமிழ்ச் சிவில் கட்டமைப்புக்களின் ஒப்புதலுடன் பட்டியல் இறுதியாக்கப்படும். கட்சி அரசியலைக் கடந்த இந்தத் திட்ட முன்மொழிவுக்கு அனைத்துத் தமிழர்களது ஆதரவையும், பங்குபற்றுதலையும் வேண்டி நிற்கின்றோம். இதுதொடர்பான தொடர்புகளுக்கு 0773060564 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றுள்ளது. (ஒ-66)

## மத்திய குழுவை உடன் கூட்டுக!

*ரெலோ அமைப்பிடம் கோரிக்கை*

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தேர்தல் தொகுதிகளில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் சார்பில் போட்டியிட விரும்பும் கட்சி உறுப்பினர்களுக்குள் வெற்றி பெறத் தகுதி உடைய வேட்பாளர்களை கட்சியின் முழுமையான ஒத்துழைப்புடன் இனங்கண்டு தெரிவு செய்து நிறுத்த கட்சியின் மத்திய குழுவினை உடனடியாக கூட்டும்படி கட்சியின் செயலாளர் நாயகம் கோ.கருணாகரத்திடம் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் நிர்வாகச் செயலாளர் என். கெல்வின் விந்தன் கனகரட்ணம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-25,20, 9)

## மதுபான உற்பத்தி அனுமதி இரத்து

வரிப்பணத்தை செலுத்தாத மதுபான உற்பத்தி நிறுவனங்களின் அனுமதிப்பத்திரங்களை இரத்துச்செய்வதற்கு மதுவரித்திணைக்களம் தீர்மானித்துள்ளது. 2023ஆம் ஆண்டுக்குரிய நிலுவையை நவம்பர் 30ஆம் திகதிக்கு முன்னரும், 2024ஆம் ஆண்டுக்குரிய நிலுவையை டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னதாகவும் செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளது. (ஒ–6)

## புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானது

கொழும்பு , செப் . 29

நாடாளுமன்ற ஜனநாயக விழுமியங்களை மேம்படுத்துவதும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற ஊழியர்களிடையே அறிவுபூர்வமான நடவடிக்கைகளின் மூலம் சட்டமன்ற நடைமுறைக்ளை வலுப்படுத்தும் நோக்குடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த 19 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. (ஒ-22,6)

## ஹிருணிகாவுக்கு பதில் நடிகை தமிதா?

பொதுத் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் பட்டியலிலே இந்த முறை ஜனாதிபதித் தேர்தலுக்காக அவுஸ்திரேலியாவிருந்து அழைக்கப்பட்டிருந்த டி.எம். டில்சான் மற்றும் பிரபல்யமான நடிகை தமிதா அபேரத்ன ஆகியோரை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சஜித் பிரேமதாஸவின் வலதுகரமான லக்ஸ்மன் பொன்சேகா என்பவரின் கோரிக்கைக்கமைய இந்த ஏற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கட்சி வட்டாரம் கூறுகிறது. (ச)

## நாளை

30.09.2024

திங்கட்கிழமை - புரட்டாதி - 14

சுபநேரம் : 12.02 - 01.32

ராகுகாலம் : 07.32 - 09.02

## நாளொரு நல்வார்த்தை

ஒன்றுக்கும் பயனற்றவர் என்று தள்ளி விடும்படியாக எவரும் இல்லை. சமயம் வரும் போது வேறு ஏதாவது ஒரு வகையில் எவரும் பயன்படக்கூடும்.

- ஹென்றி போர்ட் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ஜின்சோமினுடன் மகிழ்ச்சி நிறைந்த மற்றும் ஆரோக்கியமா-னவாழ்க்கையை வாழ்ந்திடுங்கள்**

**இந்த சர்வதேச இருதய தினத்தில் நீரிழிவு நோயை வென்று உங்கள் இதயத்தை பாதுகாத்திடுங்கள்**

சர்வதேச இருதய தினத்தை அனுஷ்டிக்க உள்ள நிலையில், நீரிழிவு நோய்க்கும் இருதய நோய்க்கும் இடையே உள்ள வலுவான தொடர்பை எடுத்துரைக்க இது ஒரு சிறந்த சந்தர்ப்பமாக அமைகிறது. நீரிழிவு நோயை நிர்வகிப்பதும் இதயத்தை ஆரோக் கியமாக வைத்திருப் பதற்கு முக்கியமானது என்பது பலருக்குத் தெரியாது. இந்த முயற்சியின் முன்னணியில், 19 அத்தியாவசிய விற்றமின்கள் மற்றும் கனியுப் புக்களால் செறிவூட்டப்பட்ட, இலங்கையின் முதல் மற்றும் முன்னணி Korean panax ginseng தயாரிப்பான ஜின்சோமின் விளங்குகிறது.

**நீரிழிவு மற்றும் இருதயநோய் : அபாயகரமான இணையர்கள்.**

நீரிழிவு நோயற்றவர்களுடன் ஒப்பிடுகையில் 2 தொடக்கம் .4 மடங்கான நீரிழிவு நோயாளிகளுக்கு இதய நோய் ஏற்படுபடுவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது. உயர்வடையும் குருதி சர ்க்கரை மட்டமானது காலப்போக்கில் இதயத்தைக் கட்டுப்படுத்தும் குருதி நாளங்கள் மற்றும் நரம்புகளை சேதப்படுத்தும் முக்கியமாக இதய ஆரோக்கியத்திற்கு சிக்கல்களை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும் உயர் இரத்த அழுத்தம் என்பது நீரிழிவு நோயாளிகளிடையே ஒரு பொதுவான நிலையாகும். இது ஆபத்தை அதிகரிக்கச் செய்கிறது. நீரிழிவு நோயாளிகள் பெரும்பாலும் கொலஸ்ட்ரோல் அளவுகளில் ஏற்றத்தாழ்வுகளை அனுபவிக்கிறார்கள். அதிக LDL (குறை அடர்த்தி கொழுப்புப்புரதம்) மற்றும் குறைந்த HDL (அடர் கொழுப்புப்புரதம்) - இது நாடி அடைப்புகளுக்கு வழிவகுக்கிறது. இன்னும் ஆபத்தான விடயம் என்னவென்றால், நீரிழிவு நோயாளிகள் "அமைதியான முறையிலான" .வெளிப்படையான அறிகுறிகளற்ற நிலையில் மாரடைப்பால் பாதிக்கப்படலாம். வழக ்கமான மருத்துவப் பரிசோதனைகளிலிருந்து முற்றிலும் இன்றியமையாத விடயமாகும்.

**ஜின்சோமின் : ஒரு இயற்கை தீர்வாகும்.**

அதிர்ஷ்டவசமாக, GINSOMIN இந்த அபாயங்களை எதிர்த்துப் போராட இயற்கையான வழியை வழங்குகிறது. அசல் Korean panax ginseng இன் மூலம் இயக்கப்படுகின்ற இந்த தனித்துவமான உருவாக்கம் குருதி சர்க்கரை மட்டத்தை இயல்புக்குள்ளாக்கி ஒட்டுமொத்த ஆற்றலையும் மேம்படுத்துகிறது. ஜின்சோமின் பல வழிமுறைகள் மூலம் இதனை மேம்படுத்துகிறது:

**குளுக்கோஸ் உற்பத்தியைக் குறைக்கிறது:** கல்லீரலில் குளுக்கோஸ் உற்பத்தியைக் கட்டுப்படுத்துகிறது மற்றும் குடலில் இருந்து குளுக்கோஸ் உறிஞ்சப்படுவதைக் குறைக்கிறது.

**இன்சுலின் உற்பத்தியை அதிகரிக்கிறது:** இன்சுலின் உற்பத் தியில் கணையத்தை ஆதரிப்பதன் மூலம், கலங்கள், இழைங்கள் மற்றும் தசைகளில் குளுக்கோஸின் சரியான இயக்கத்திற்கு ஜின்சோமின் உதவுகிறது. மற்றும் இது குருதி சர்க்கரை அளவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும்.

விளைவாக....

இரத்த குளுக்கோஸ் மட்டத்தை பேணுகிறது. இது இரத்தச் சர்க்கரைக் குறைவு மற்றும் இதய நோய் உள்ளிட்ட நீரிழிவு தொடர்பான சிக்கல் களின் அபாயத்தைக் குறைக்கிறது.

**அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களுடன் உங்கள் இதயத்தைப் பாதுகாக்கவும்**

ஜின்சோமின் அத்துடன் நின்றுவிடவில்லை. ஜின்ஸெங்குடன், இது இதய ஆரோக்கியத்தை ஆதரிக்கும் முக்கிய விற்றமின்கள் மற்றும் கனியுப்பு களை வழங்குகிறது:

B விற்றமின்கள்: ஜின்சோமின் விற்றமின்கள் B6, B12 மற்றும் ஃபோலிக் அமிலம் ஆகியவற்றால் நிரம்பியுள்ளது.

இது ஹோமோசைஸ்டீன் அளவைக் குறைக்க உதவுகிறது - இதய நோய்க்கான ஆபத்து காரணி. இந்த B விற்றமின்கள் நரம்பு கடத்துதலை மேம்படுத்தி. இதயத்தின் மின் அமைப்பை சீராகச் செயல்பட வைக்கிறது.

**உயிரகந்தடுப்பிகள் :** விற்றமின் B, C, E மற்றும் செலினியம் சக்திவாய்ந்த ஒட்சியேற்றிகளாக செயல்படுகின்றன, உங்கள் இதயம் மற்றும் இரத்த நாளங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஃப்ரீ ரேடிக்கல்களிலிருந்து பாதுகாக்கிறது. இந்த ஊட்டச்சத்துக்கள் உங்கள் இருதய அமைப்பை இளமையாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவுகிறது.

**கனியுப்புக்கள்:** ஜின்சோமினில் உள்ள நாகம், பொட்டாசியம், மெக்னீசியம் மற்றும் செப்பு போன்ற கனியுப்புக்கள் இன்சுலின் உணர்திறனை மேம்படுத்துவதுடன் மற்றும் இதய சுருக்கத்தையும் மேம்படுத்துகிறது. நீரிழிவு நோய் முகாமைத்துவம் மற்றும் இதய ஆரோக்கியம் ஆகிய இரண்டிற்கும் இரட்டை நன்மைகளை வழங்குகிறது.

**ஆரோக்கியமான வாழ்க்கைக்கான ஒரு சிறந்த அணுகுமுறை**

இதன் மூலம் தெளிவுபடுத்தப்படுவது. நீரிழிவு நோயிலிருந்து அவதானமாக செயற்படுவது என்பது இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவைப் பற்றியது மட்டுமல்ல - இது உங்கள் இதயத்தையும் பற்றியதுமாகும். GINSOMIN .ன் பன்முக அணுகுமுறையுடன், குருதி சர்க்கரை அளவை மேம்படுத்தும் திறன், இன்சுலின் உணர்திறனை மேம்படுத்துதல் மற்றும் இதயத்திற்கான பாதுகாப்பை வழங்குதல் ஆகியவை உட்பட, நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை நோக்கி ஒரு முழுமுயற்சியை எடுக்கலாம்.

இந்த உலக இருதய தினத்தில், ஜின்சோமின் நீரிழிவு நோயை வென்று உங்கள் இதயத்தைப் பாதுகாப்பதில் உங்கள் பங்குதாரராக இருக்கட்டும். வழக்கமான உடல் செயல்பாடு, சீரான உணவு பழக்கவழக்கம் மற்றும் ஜின்சோமினை தொடர்ந்து பயன்படுத்துதல் ஆகியவை இதய நோய் மற்றும் நீரிழிவு தொடர்பான பிற சிக்கல்களின் அபாயத்தைக் கணிசமாகக் குறைக்கும்.

**ஜின்சோமினுடன் சிறப்பாக இருந்திடுங்கள், ஏனென்றால்**
**ஆரோக்கியமான இதயம்துடிப்பான வாழ்க்கைக்கு முக்கியமானதாகும்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AIA இன்சூரன்ஸ் நிறுவனத்தின் நட்சத்திரம் திரு. க பிரான்

AIA இன்சூரன்ஸ் என்பது 100 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன் உலகின் முன்னணி பல்தேசிய காப்பீட்டு நிறுவனமாக விளங்குகின்றது. AIA ஆனது 18 நாடுகளில் செயல்பட்டு வருவதுடன், இலங்கையில் தனது தரமான சேவைகள் மூலம் மக்கள் நலனுக்கான முன்னணி காப்பீட்டு நிதித்தீர்வு நிறுவனமாக விளங்குகின்றது. AIA வணிக நாம வாக்குறுதிக்கு அமைவாக, ஆரோக்கியமான, நீண்ட கால மற்றும் சிறந்த வாழ்க்கை என்பது மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

திரு.க பிரான், AIA யின் முக்கிய அங்கமாக உள்ளார். 22 வது வயதில் AIA காப்புறுதி நிறுவனத்தில் இணைந்த இவர், தற்போது 14 ஆண்டு காலமாக பணியாற்றி வருகின்றார். கடந்த 8 ஆண்டுகளாக MDRT (Million Dollar Round Table) விருதைப் பெற்றுள்ள இவர் COT (Court of the Table) விருதையும் ஒரு முறை வென்றுள்ளார். தேசிய ரீதியில் கடந்த ஆண்டு சிறந்த ஆயுட்காப்புறுதி ஆலோசகராக இரண்டாம் இடத்தை பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. மேலும் MDRT MCC (Million Dollar Round Table Membership Communication Committee) வடக்கு மாகாணத்தின் இணைப்பாளராக 2 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து AIA President's Club விருதினை வென்ற முதலாவது உறுப்பினராகவும் திரு.க பிரான் உள்ளார். IQA (International Quality Award) மற்றும் IAP (International Award for Productivity) மற்றும் அமெரிக்கா, ஐரோப்பா உட்பட 15 க்கு மேற்பட்ட வெளிநாட்டு சுற்றுலா பயணங்களை தொடர்ச்சியாக வெற்றி பெற்றிருப்பதும், அவருடைய திறமையை வெளிப்படுத்துகின்றது.

ஆரோக்கியமான வாழ்க்கை என்பது திரு.க பிரானின் அன்றாட செயல்பாடுகளில் ஒன்றாக காணப்படுகின்றது. அவர் தினசரி உடற்பயிற்சியில் ஈடுபட்டு, ஆரோக்கிய வாழ்க்கையை பேணுவதில் கவனம் கொண்டுள்ளார். ஆரோக்கியமே செல்வத்தை விடவும் முக்கியமானது என்பதாக பிரான் கருகின்றார். அவரது சமூக ஊடகங்களில், ஆரோக்கியமான வாழ்க்கையைப் பற்றி பல வலுப்படுத்தும் தகவல்களைப் பகிர்ந்து வருகின்றார். இவர் நிறுவனத்தின் வணிகநாம வாக்குறுதிக்கு ஒரு வாழும் உதாரணமாக இருக்கின்றார்.

திரு.க பிரான், வடக்கு கிழக்கில் வாழும் இளம் தலைமுறையினருக்கு ஒரு உதாரணமாக இருக்கின்றார். காப்புறுதிதுறை பற்றி அவர் கூறுகையில் "இது தன்னுடைய முக்கியமான கடமை" என அவர் நம்புகின்றார். அவரது குடும்பத்துடன் அனுபவித்த கஷ்டங்கள், இன்று நேர்மறையான முறையில் மாறியுள்ளது. "தன்னால் இவ்வாறான வெற்றிகளை அடைய முடியுமென்றால், இன்றைய இளம் தலைமுறையினர் இதனை விட அதிகம் அடைய முடியும்" என்று அவர் கூறுகின்றார். இலங்கையில் காப்புறுதிக்கென ஒரு விரிவான சந்தை உள்ளது, எனவே நாங்கள் நம்பகமான முறையில் தொடர்ச்சியாக வேலையினைச் செய்யலாம் என தெரிவிக்கின்றார்.

மேலும் இன்றைய தொழில்நுட்பம் மூலம், அலுவலகத்திற்கு வராமல் வேலையினை இலகுவாக செய்ய முடிகின்றது. இன்றைய நாளில் உள்ள அறிவும் வசதிகளும் தற்போதுள்ள வடக்கு கிழக்கில் உள்ள இளம் தலைமுறையினருக்கு இலகுவாக அணுக முடிவதனால் அவர்களால் என்னை விட அதிகமான வெற்றிகளை அடைய முடியும் என அவர் நம்புகின்றார். பொறியியல் பட்டதாரியான அவரின் துணைவியாரும் முகாமையாளராக இவருடன் இணைந்து வெற்றிகரமாக பணியாற்றி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திரு. பிரான் தனது வேலை குறித்து கூறும் போது, "இது எனக்கு எனது சுயதொழிலை போன்று உள்ளது. நான் இந்த சுயதொழிலுக்கு முழு உரிமையாளராக இருக்கின்றேன். எனது சந்தைப்படுத்தல் ஆரம்பத்தில் இலகுவானதாக இருக்கவில்லை. ஆனால் நிறுவனத்தில் பெற்ற பயிற்சி மற்றும் அனுபவத்தின் மூலம் எனது தனித்துவத்தை வளர்த்துள்ளேன். மேலும் நான் தற்போது பல சர்வதேச தொடர்புகளைப் பெற்றுள்ளேன்" என தெரிவித்தார்.

அவர் காப்பீட்டு பற்றிய அறிவுறுத்தல் சமூக பொறுப்பானது என்று கருதுகின்றார். "நாம் ஆயுட் காப்பீட்டின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை மக்கள் அனைவருக்கும் வழங்க வேண்டும்" என அவர் கூறுகின்றார். "இதை பல்வேறு வழிகளில் செய்கின்றேன். நான் காப்புறுதி துறையில் எல்லா எல்லைகளையும் அடைய நினைக்கின்றேன், மேலும் AIA யினை மேலும் பலப்படுத்த வேலை செய்ய விரும்புகிறேன்" என அவர் வலியுறுத்துகின்றார்.

AIA நிறுவனமானது சமூக நலனுக்கு பல திட்டங்களை செயல்படுத்தி, மக்கள் மற்றும் குடும்பங்களுக்கு நல்ல வாழ்க்கையை உருவாக்க உதவுகின்றது. AIA மற்றும் திரு. க பிரான் ஆகியோரின் உறுதிமொழியுடன், AIA தன்னுடைய வாடிக்கையாளர்களுக்கு நிதி நலனை முன்னிலைப்படுத்தி, நம்பகமான மற்றும் தரமான சேவைகளை வழங்குவதில் உறுதியாக உள்ளது.


























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45 ஆவது நாள் நினைவஞ்சலியும்
## நன்றி நவிலலும்



## அமரர் சாந்தினி திருவாதவூரன்

கடந்த 09.08.2024 இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் சாந்தினி திருவாதவூரன் அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவரை அன்புடனும் பாசத்துடனும் நேசித்தவர்களுக்கும் அவர் நோய்வாய்ப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ICU இல் இருந்த போது அவரை காப்பாற்ற போராடிய டாக்டர் தங்கராசா பிரமாவிற்கும் அவரது குழுவினருக்கும் அதி தீவிர சிமிச்சைப் பிரிவில் அவருக்கு சிகிச்சையளித்த வைத்தியர்கள் தாதிகள் சிற்றூழியர்களுக்கும் இன்னும் யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் T. சத்தியமூர்த்திக்கும் எமது நன்றிகள்.

இன்னும் எமது அன்புத் தெய்வம் அமரர் சாந்தினி திருவாதவூரன் சிறுநீரக செயலிழப்பு காரணமாக சிவபதமடைந்த செய்தி கேள்விப்பட்டவுடனேயே நேரில் போதனா வைத்தியசாலைக்கு வந்து எமக்கு உதவி புரிந்தோருக்கும் மேலும் எமது வீட்டுக்கு வந்து ஆறாத்துயரில் இருந்த எமக்கு ஆறுதல் கூறியதுடன் மட்டுமல்லாது வேண்டிய உதவிகள் ஒத்தாசைகள் புரிந்தும் அலைபேசி சமூக வலைத்தளங்கள், தொலைபன்னி போன்றவற்றினூடாக தொடர்பு கொண்டும் குறுஞ்செய்தி மூலமும் அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் மலர்வளையங்கள், மாலைகள், பதாகைகள் மூலம் அவருக்கு தமது அஞ்சலியைச் செலுத்தியவர்களுக்கும் தங்கள் சமூக வலைத்தளங்களில் அவர்கள் நினைவுகள் பகிர்ந்து அனுதாபங்கள் தெரிவித்துக் கொண்டவர்கள். சிவபதமடைந்த நாளில் இருந்து இறுதியாத்திரை நடக்கும் நாள் வரை தொடர்ச்சியாக எமது இல்லத்தில் தங்கி நின்று உதவியவர்களுக்கும் அமரத்துவம் அடைந்த விபரங்கள் பகிர்ந்த வலைத்தளங்கள் பத்திரிகை களுக்கும் இறுதி யாத்திரைக்கு முன்னர் அஞ்சலியுரை நிகழ்த்திய பெரியார்களுக்கும் இறுதியாத்திரை நிகழ்வுகள் இறுதிவரை நேரலையாக வழங்கிய Ytube சமூகவலைத்தளத்தினருக்கும் தங்கள் அனுதாபங்கள் பிரசாரங்களாக வெளியிட்டவர்களுக்கும் எம் துயரத்தில் பங்கேற்று உணவு, தேநீர் என்பவற்றை வழங்கி உபசரித்த உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் இறுதிக் கிரியை நிகழ்வுகளில் பங்கேற்றவர்கள் தேவார திருவாசங்களை பாடியவர்கள் கிரியை வழிபாடுகள் செய்த சைவக்குருக்கள் மற்றும் இறுதிக் கிரியைகளுக்கு ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்கேற்றவர்கள் உதவிகள் புரிந்தவர்களுக்கும் வீட்டுக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது குடும்பம் சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**

**தோற்றம்**
**12.03.1962**

**மறைவு**
**09.08.2024**

**மார்க்கண்டு திருவாதவூரன்,**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## அந்தோனிப்பிள்ளை சவரிமுத்து பற்றிக் செவேந்திரன்



**பிறப்பு**
**05.02.1949**

**இறப்பு**
**26.09.2024**

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பற்றிக் செவேந்திரன் அவர்கள் 26.09.2024 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து- சவிராசி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஜோசப் - ஜெசி ஆகியோரின் மருமகனும் லிண்டாவின் அன்புக் கணவரும் பிறிந்தா (U.K), பிரதீனா (Qatar), காலஞ்சென்ற அனோஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான அன்ரனிபிள்ளை (அன்ரோ எலக்றிகல்ஸ்), பஸ்ரியன் ஆகியோரின் சகோதரரும் தயாவதி, குஞ்சு, ஐடா (U.K.), அன்ரன், கில்டா, ரவி (France), வேதநாயகம் (U.K.), சாரதா, காலஞ்சென்ற இக்னேசியஸ் ஆகியோரின் மைத்துனரும் றிச்சட் நியூமன் (U.K.), விஜயாளன் (Qatar), ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஷனன், ஒலிவர், ஷேர்லின், அவ்லின் ஆகியோரின் அன்புப் பேரனும் கவிதா, பிரியா, மயிலினி, யதுசனா, இஷாலினி, கென்னத் ஆகியோரின் நேசமிகு சித்தப்பாவும் இந்து, சுகி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (30.09.2024) திங்கட்கிழமை நடைபெற்று காலை 10.00 மணிக்கு சுண்டுக்குளி புனித திருமுழுக்கு, யோவான் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**செட்டியார்வளவு,**
**அம்மன் கோவில் வீதி,**
**உடுவில்.**

**லிண்டா- மனைவி**
**074 0308903, 0776181515**

**றிச்சட் நியூமன் - மருமகன்**
**00447873974118**

**விஜயாளன் - மருமகன்**
**0097477662407**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி விலகத் தயார்

கொல்கத்தா பெண் மருத்துவர் ஒருவர் மருத்துவமனைக்குள் வைத்து பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்ட விவகாரத்தில், ஆதாரங்களை மூடிமறைத்ததாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் பதவி விலகத் தயாராக இருப்பதாக மேற்கு வங்கத்தின் முதல்வர் மம்தா அறிவித்துள்ளார். (ம)

**பணியாளர் தேவை**

யாழ். நகரில் இயங்கும் பிரபல நகை வியாபார நிலையத்திற்கு அனுபவம் உள்ள அல்லது பழக விரும்பும் ஆண் பணியாளர்கள் தேவை. தொடர்பு:

**077 3620 969, 070 688 3070**

**பணியாளர் தேவை**

முதியோர் இல்லத்தில் தங்கி நின்று பணியாற்றுவதற்கு பெண் பணியாளர் தேவை.

தொடர்பு: 077 5644 303
076 8835 915

**வேலைவாய்ப்பு**

நாவலர் வீதியில் இயங்கி வரும் சுப்பர் மாக்கட் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- Computer Billing + Cashier
- Sales Assistant (உதவியாளர்)
- Driver வாகன சாரதி

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

விபரங்களுக்கு:- **077 419 5209**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் -நல்லூர் குறுக்குத்தெருவில் இரண்டு நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய 10 3/4 பரப்புக்காணி (வெற்றுக்காணி) விற்பனைக்கு உண்டு.

விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

**076 7561236**

ஓம் விராட் விஸ்வ பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம்
07 . 12 . 1975

மறைவு
28 . 09 . 2024

### குமரன் சூரியஜெயந்தி (ராணி)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட குமரன் சூரியஜெயந்தி (ராணி) நேற்று (28.09.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் - செல்வராணி தம்பதியரின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், குமரன் அவர்களின் பாசமிகு மனைவியும், லக்ஸ்மன், லக்சனா, கிருஷ்ணவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சந்திரஜெயந்தி, சந்திரகுமார், காலஞ்சென்றவர்களான இந்திரகுமார், ஜெயகுமார், சாந்தகுமார் மற்றும் இந்திரஜெயந்தி, இராசகுமார் ஆகியோரின் சகோதரியும், நவரெட்ணம், பத்மநாதன், சீதா, சுபத்திரா, கிரியா, வதுரிதா, வாசுகி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 95 சீனியர் ஒழுங்கை,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
(மகன்) - 077 109 1136
(கணவன்) - 077 918 4026

(CS/56315) J-1

## கண்ணீர் அஞ்சலி



26.09.2024 அன்று அகால மரணமடைந்த
மட்டுவில் தெற்கைச் சேர்ந்த
**கதிர்காமச்சந்திரன் வினோத்**
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

விநாயகர் களஞ்சியம், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி



**ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்**
இந்தியாவில் ஆன்மீகத்துறையில்
10 வருடங்களாக புகழ்பெற்ற
**அம்மன் அருள் வாக்கு**

தினமும் காலை : 9.00 - 12.00 மணிவரை
மாலை : 3.00 - 05.00 மணிவரை

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?
- கால் வீக்கம், நாட்பட்ட ஆறாத புண்.

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
**திருமதி வே. மோகனதாஸ்**
**இல.77, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**
வெளிநாட்டவர்களும் அருள்வாக்கு பெற தொடர்பு கொள்ளவும்

தொடர்பு: 071 241 1234, 021 221 1239

(CS/1342 B) J-1

**உடல் எடை குறைய வேண்டுமா?**

- எடை கூடுகிறதா?
- வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

பால்மா குளிசை - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

**தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?**

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

CS 36443

**உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா**

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

**விற்பனை பிரதிநிதிகள்**



நாம் முன்னனி உருக்கு கம்பி தயாரிக்கும் நிறுவனமாகும். உள்நாட்டு சந்தைப்படுத்தும் நோக்குடன் மேற்குறிப்பிட்ட வெற்றிடத்தை நிரப்ப ஆற்றல்மிக்க விற்பனை பிரதிநிதிகள் தேவை

எமது தயாரிப்பு
கட்டிட நிர்மானத்திற்காக அதிக வலிமை கொண்ட TMT உருக்கு கம்பிகள்

கொடுப்பனவுகள்
சம்பளத்துடன் விற்பனை கமிஷன்

நாம் எதிர்பார்ப்பது
- எங்கள் தரமான தயாரிப்புகளின் விற்பனையை அதிகரித்தல்
- முன்னனி நிறுவனங்களில் இத்துறையில் 03 வருட அனுபவம்.
- வயதெல்லை: 35 வயதிற்குட்பட்டவர்கள்
- இலக்கு ஊக்கம், தகவல் தொடர்பு திறன் மற்றும் வாடிக்கையாளர்களுடன் சிறந்த உறவு.
- உறவினர் அல்லாத இருவரின் சிபாரிசு.
- மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதி பத்திரம்
- தயாரிப்புகளை விற்பனை செய்யும் இடம்: வடக்கு மாகாணம், இலங்கை.
- வடக்கு மாகாணத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

Administration Manager
**Ashok Steel Industries (Pvt) Ltd.,**
8th Floor, IBM Building, Nawam Mawatha, Colombo 02.
Tel: 0117 388 940-3 | Fax: 0117 314 970
Email: ashoksteel_ipl@yahoo.com | ashoksteel_ipl@sltnet.lk

**மலிவு விற்பனை**

வீட்டுத் தளபாடங்கள்
விற்பனைக்கு உண்டு.
0777 24 24 27
0777 41 27 13

**மணமகன் தேவை**

1991, இந்து, பூரட்டாதி, DOCTOR,
பூர்வீகம் - சாவகச்சேரி ,வதியுமிடம் - கொழும்பு
மணமகள் பதிவு இல: 11035.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401

**மணமகள் தேவை**

1992, இந்து, ஆயிலியம், CIVIL ENGINEER,
பூர்வீகம் - மிருசுவில் ,வதியுமிடம்- Australia
மணமகன் பதிவு இல: 11048.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401

**மணமகன் தேவை**

1994, இந்து, பூசம், HR,
பூர்வீகம் - யாழ்ப்பாணம் ,வதியுமிடம் - Canada
மணமகள் பதிவு இல: 11001.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401

**மணமகள் தேவை**

1992, இந்து, ஆயிலியம், CIVIL ENGINEER,
பூர்வீகம் - உடுவில் ,வதியுமிடம்- கொழும்பு
மணமகன் பதிவு இல: 11048.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள மோட்டார் சைக்கிள் மற்றும் உதிரிகள் விற்பனை நிலையத்திற்கு பணியாளர்கள் தேவை.

077 772 7784, 076 772 7784

**வீடு காணி விற்பனைக்கு**

166/3, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இரண்டு வீடுகளுடன் கூடிய 2 1/2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. இரு வீடுகளும் ஒன்றாகவும், தனித்தனியாகவும் பிரித்து கொடுக்கப்படும்.

076 65 65 006

**இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை**

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்புகொண்டு உங்கள் துணையை தெரிவு செய்யமுடியும்.

பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

Ts&Cs apply
Www.inaipa.com

**விற்பனைக்கு**

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கை, பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்தான், ஏலக்காய், சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு,
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில் 077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் அணியில் பெரும் உடைவு

கொழும்பு, செப். 29
ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்திருந்த பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் பொதுஜன பெரமுனவில் இணைவதற்குத் தீர்மானித்துள்ளனர்.
எனினும் ரணிலுக்கு ஆதரவளித்த ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் இணைவதற்குத் தீர்மானித்துள்ளனர்.
ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்பினருக்கும் பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் அடங்கிய தரப்பினருக்கும் இடையே எதிர்கால அரசியல் செயற்பாடு தொடர்பில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.
கொழும்பில் உள்ள முன்னாள் ஜனாதிபதி ரணிலின் தேர்தல் அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பை அடுத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த முன்னாள் ஆளுநர் நவீன் திஸாநாயக்க, எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைய வேண்டும் எனத் தெரிவித்தார். அவ்வாறு கூட்டணி ஒன்று உருவாக்கப்படுமாயின் பிரதமர் வேட்பாளராக சஜித் பிரேமதாஸவே இருப்பார், என்றார்.
அதேநேரம், இந்தச் சந்திப்பை அடுத்து ஊடகங்களுக்கு கருத்துரைத்த முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, இரு தரப்பினரும் இணைய வேண்டும் என விரும்புகின்றோம். தற்போது பேச்சுகள் முன்னெடுக்கப்படுகின்றன- என்றார்.
இதேவேளை, குறித்த சந்திப்பை அடுத்து ஊடகங்களுக்கு கருத்துரைத்த பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் சிலர், தங்களது தரப்பு மீண்டும் மஹிந்த ராஜபக்ச தரப்பினருடன் இணையவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.
இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துரைத்த கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு ஆதரவளித்த பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க, தங்களது தரப்பு வலதுசாரி கூட்டணி ஒன்றை உருவாக்கவுள்ளதாகத் தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள தரப்பினரும் பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி ரணிலுக்கு ஆதரவளித்த தரப்பினரும் இணைந்து கூட்டணியை உருவாக்குவது தொடர்பில் கவனம் செலுத்துகின்றோம். அதேநேரம் பொதுஜன பெரமுனவும் வலதுசாரிக் கொள்கையை உடைய கட்சியாகும். எனவே அவர்களுடன் இணைவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை, என்றார். (ஒ-இ)




# புதிய சின்னத்தில் திலித் களமிறக்கம்



கொழும்பு, செப். 29
பொதுத்தேர்தலில் புதிய சின்னத்தில் போட்டியிடுவேன். பலமான அரசியல் கூட்டணியை தோற்றுவிப்பேன். சுயாதீனமாகச் செயற்படுவதாகக் குறிப்பிட்டுக் கொள்பவர்கள் எம்முடன் கைகோர்க்கலாம் என மவ்பிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
ஜனாதிபதித் தேர்தலில் கணிசமான அளவு வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளேன்.
இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடுவேன். அதேபோல் 22 தேர்தல் மாவட்டங்களிலும் மவ்பிம ஜனதாக் கட்சியின் உறுப்பினர்களை களமிறக்குவேன். பொதுத்தேர்தலில் புதிய சின்னத்தில் போட்டியிடுவேன்.
சுயாதீனமாக செயற்படுவதாகக் குறிப்பிட்டுக் கொள்பவர்கள் எம்முடன் கைகோர்க்கலாம்.
பலமாக அரசியல் கூட்டணியை ஸ்தாபிப்போம். பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்சக்களைப் போன்று முன்னாள் ஜனாதிபதி ரணிலும் பொறுப்புக் கூற வேண்டும்.
தேசியத்தை பேசிக் கொண்டு ராஜபக்சக்களால் இனி ஆட்சிக்கு வர முடியாது. இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் மக்கள் சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளுக்கு தகுந்த பாடம் புகட்ட வேண்டும் - என்றார். (ஒ-இ)

ஈஸ்டர் தாக்குதல்

# 246 மில்லியன் ரூபா இழப்பீடு கிடைப்பு

கொழும்பு, செப். 29
ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் 246 மில்லியன் ரூபா நட்டஈடு பெறப்பட்டுள்ளதாகவும், அதில் 62 மில்லியன் ரூபா உயிரிழந்தவர்களுக்காக வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலிப பீரிஸ் தெரிவித்துள்ளார். உயர்நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் இதை குறிப்பிட்டார்.
மேலும், பாதிக்கப்பட்டவர்களின் பட்டியலை சமர்ப்பித்தால், தற்போது மாவட்ட நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள நட்டஈடு வழக்குகளை திரும்பப் பெறமுடியும் என பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ஷமில் பெரேரா நீதிமன்றத்தில் தெரிவித்தார்.
இதேவேளை, பாதிக்கப்பட்டவர்களால் தாக்கல் செய்யப்பட்ட சுமார் 300 நஷ்டஈடு வழக்குகள் நீர்கொழும்பு மற்றும் கொழும்பு மாவட்ட நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. (ஒ-இ)

# கஜமுத்துகளுடன் ஒருவர் கைது

வவுனியா,செப்.29
விற்பனைக்காகத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 5 கஜமுத்துக்களுடன் சந்தேகநபர் ஒருவரை நீர்கொழும்பு பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர். இந்த கஜமுத்துக்களின் பெறுமதி சுமார் ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபா என பொலிஸார் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# சிரமதானப் பணி!

மன்னார், செப்.29
பொலித்தீன் இல்லாத சூழல் எனும் கருப்பொருளுக்கு அமைவாக மன்னார் ரோட்டரிக் கழக அங்கத்தவர்களால் மன்னார் - தலைமன்னார் வீதி ஐ.ஒ.சி. பெற்றோல் நிலையத்துக்கு அருகாமையில் உள்ள வாய்க்காலில் காணப்படும் பொலித்தீன் பைகள், பிளாஸ்ரிக் கழிவுகள் மற்றும் கண்ணாடிப் போத்தல்கள் போன்றவை அகற்றப்பட்டு நேற்று சனிக்கிழமை சுத்தம் செய்யப்பட்டன. நிகழ்வில் மன்னார் ரோட்டரிக் கழக அங்கத்தவர்களுடன், பாடசாலை மாணவர்களைக் கொண்ட ரோட்டரிக் மற்றும் இன்டிரக்ட் அங்கத்தவர்களும், மன்னார் நகரசபையின் ஊழியர்களும் கலந்து கொண்டனர். (ஒ-45-213)

# மரண அறிவித்தல்

தோற்றம்
11 . 10 . 1956



மறைவு
28 . 09 . 2024

## தம்பிஜயா ஜெயபாலன்

உடுவில் சிங்கம் வீதியை பிறப்பிடமாகவும் வயாவிளான் மற்றும் இல. 225, K.K.S. வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா ஜெயபாலன் நேற்று (28.09.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா - புஸ்பராணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - சர்வலக்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், சர்வலிங்கேஸ்வரி (றெஜி-ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர் - வலி வடக்கு பிரதேசசபை) அவர்களின் அன்புக் கணவரும், ஜெயந்தன் (லண்டன்), ஜெசிந்தன் (ஆசிரியர், ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, மானிப்பாய்), கௌசிகன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுரேக்கா (லண்டன்), நிலூஜா (ஆசிரியர் - ஏஞ்சல் சர்வதேச பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், அமரர் ஜெயசீலன், ஜெயமோகன் மற்றும் உதயகுமார், ஜெயமாலினி, யசோதரா (ஜேர்மனி), சுகந்தினி, செல்வக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமரர் கனகலிங்கம், யோக லிங்கம் மற்றும் கனகலிங்கேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், வேதசிரோன்மணி, சந்திராதேவி, தனபாலசுந்தரம் ஆகியோரின் சகலனும், ஜெசாராவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.09.2024) திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வயாவிளான் பூனையன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.225, K.K.S.வீதி,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P:077 1622 770

(CS 1465) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
07 . 09 . 1953



மறைவு
27 . 09 . 2024

## சிவசுப்பிரமணியம் சத்தியவதி

பத்தமேணி அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் சத்தியவதி கடந்த 2024.09.27 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி-தாங்கமா தம்பதியரின் அன்பு மகளும், பொன்னையா சிவசுப்பிரமணியம் (தம்பிப்பிள்ளை) அவர்களின் அன்பு மனைவியும், புஸ்பவதி, ஜெகதீஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு சகோதரியும், ஜனகன் (பிரதேச செயலகம் - கோப்பாய்), நிரோசன், ஆகியோரின் அன்பு தாயாரும், ஜனகன் நிசந்தாவின் அன்பு மாமியாரும், கேசபவன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் யாழ் பல்கலைக் கழகம்), தேனுகா, கோபிநிசா (சுவிஸ்), அபிஷா (சுவிஸ்), கோகுலன் (சுவிஸ்) ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2024) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தீர்த்தாங்குளம் உள்ளிவிராயர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பத்தமேனி
அச்சுவேலி

தகவல்:
குடும்பத்தினர்.
077 576 1713

(CS 894) V-1

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
01 . 07 . 1952



மறைவு
27 . 09 . 2024

## திருமதி இராமலிங்கம் இராசபூபதி

நுணாவில் மேற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் இராசபூபதி 27.09.2024 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகளும் இராமலிங்கத்தின் அன்பு மனைவியும் சசிதரன் (பிரான்ஸ்), வதனி (லண்டன்), கோகுலகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் மயூரா (பிரான்ஸ்), பவதீஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அஸ்வின், ஆதியன், ஆகாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பரஞ்சோதிநாதன், தனபாலசிங்கம் மற்றும் தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், அமரரின் ஆன்மா சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தகவல்:
Sanjeya Food Land
Sanjeya Cake Land
New Sanjeya Cake Land

(CS 1466) V-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 07 . 1952



மறைவு
27 . 09 . 2024

## திருமதி இராமலிங்கம் இராசபூபதி

நுணாவில் மேற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் இராசபூபதி கடந்த 27.09.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், சசிதரன் (பிரான்ஸ்), வதனி (லண்டன்), கோகுலகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், மயூரா (பிரான்ஸ்), பவதீஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அஸ்வின், ஆதியன், ஆகாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற பரஞ்சோதி நாதன், காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 1465) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைபலம் இன்றி அநுர நடமாட்டம்

கொழும்பு, செப்.29

இலக்கிய மாதத்தை முன்னிட்டு, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 25ஆவது தடவையாக நடைபெற்றுவரும் 'கொழும்பு சர்வதேச புத்தக கண்காட்சியை' ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்றுச் சனிக்கிழமை பார்வையிட்டுள்ளார்.

அங்கு அவர் மிகக் குறைந்த பாதுகாப்புடனேயே வருகை தந்துள்ளார். ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை பலராலும் வரவேற்கப்பட்டுள்ளது. (ம-25-சி)

## பிரிந்தோரே...

தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக்கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. இதன் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான விடயங்கள் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் இன்று கலந்துரையாடப்பட்டுள்ளன. சில தீர்மானங்கள் இன்று எடுக்கப்பட்டிருக்கின்றன. பல விடயங்கள் தொடர்பில் ஆலோசிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் கட்சி எடுத்த முடிவுக்கு மாறாகச் செயற்பட்டவர்களிடம் விளக்கம் கோருவது என்று இன்றையதினம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் தீர்மானத்துக்கு முரணாகச் செயற்பட்ட பா.அரியநேந்திரனை கட்சியில் இருந்து விலக்குமாறு பலரும் வலியுறுத்தினார்கள். எனினும் அவரிடம் விளக்கம் கேட்ட பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் முடிவெடுப்பதாக தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களுடைய பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக நாங்கள் இன்று (நேற்று) விசேடமான அறிவிப்பு ஒன்றை மனம் உவந்து விடுக்கின்றோம். தமிழ்த் தேசியப் பரப்பிலே இருக்கின்ற விசேடமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்து வெவ்வேறு காலகட்டங்களில் விலகிச்சென்ற கட்சிகளை மீண்டும் எங்களுடன் இணைந்து தேர்தலுக்கு முகம் கொடுக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றோம்.

அவர்கள் எமது அழைப்பை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில், கடந்த காலங்களைப்போலவே தமிழரசுக் கட்சியின் பெயரிலும் சின்னத்திலும் தேர்தலில் போட்டியிடலாம். அடுத்துவரும் ஒருசில நாட்களில் அவர்களின் பதிலை எதிர்பார்க்கின்றோம். இல்லையேல் தமிழரசுக்கட்சி தனித்துப் போட்டியிடும்.

அத்துடன் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் விசேட கரிசனை ஒன்று வெளிப்படுத்தப்பட்டது. ஒரு உறுப்பினரே அங்கு தெரிவுசெய்யப்படும் சூழ்நிலை இருப்பதால் அந்த விடயங்களை அந்தந்த மாவட்டக் கிளைகளோடு பேசி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரலாம் என்று தீர்மானித்திருக்கின்றோம்.

அத்துடன் இந்தத் தேர்தலில் வடக்கு - கிழக்குக்கு வெளியே தலைநகர் உட்பட தமிழர்கள் வாழ்கின்ற ஏனைய சில மாவட்டங்களிலும் போட்டியிடுவது தொடர்பாகவும் பரிசீலனை செய்வதாகத் தீர்மானித்திருக்கின்றோம்.

வேட்பாளர்களை நிறுத்துவது தொடர்பாக சரியான அணுகலை நாங்கள் மேற்கொள்வோம் என்ற நம்பிக்கை இருக்கின்றது. மக்களிடத்தில் பெரும் எதிர்பார்ப்பு இருக்கின்றது. தேசியமக்கள் சக்தியின் வெற்றிக்குப் பின்னர் பல்வேறு எண்ணப்பாடுகள் கூடியிருக்கின்றன. அது நல்ல விடயம். எனவே இளைஞர்கள், ஆற்றல் உள்ளவர்கள், படித்தவர்கள், பெண்கள் என்று அனைவருக்குமான பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்யும் வகையிலேயே வேட்பாளர் தெரிவு இடம்பெறும். அதனை ஆராய்வதற்காக குழு ஒன்றும் நியமிக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் குழு இறுதி முடிவுகளை எடுக்கும். மாவட்ட ரீதியாக கலந்தாலோசித்து அந்த முடிவுகளை எடுப்போம் - என்றார். (அ-ம-110-26)

## விரிவுரையாளர்கள்...

யில் நடைபெற்றது. இதன்போது, முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் வணிகவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரையும், விஞ்ஞான பீடத்தின் பௌதிகவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரையும் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை நேற்றுச் சனிக்கிழமை ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய, திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் வணிகவியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சிவபாலன் அச்சுதன் மற்றும் விஞ்ஞான பீடத்தின் பௌதிகவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி முருகதாஸ் தணிகைச் செல்வன் ஆகியோரின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் என்பன இன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், வணிகவியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சிவபாலன் அச்சுதன் வணிகவியலில் பேராசிரியராகவும், பௌதிகவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி முருகதாஸ் தணிகைச்செல்வன் இலத்திரனியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (அ-ம-66)

## நிறுத்தப்பட்டது...

போதைப்பொருளைக் கட்டுப்படுத்துவதற்கான சிறப்புச் சுற்றிவளைப்பு நடவடிக்கையாக யுக்திய சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. எனினும், இந்தத் திட்டம் அதன் நோக்கத்தை நிறைவேற்றவில்லை என்றும், யுக்திய நடவடிக்கைகளில் மனித உரிமை மீறல்கள் இடம் பெறுகின்றன [illegible] சர்வதேசத்திலும் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

அத்துடன், போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய பிரதான குற்றவாளிகளைத் தப்பிக்கவைத்துவிட்டு, சிறு குற்றவாளிகளே இந்த நடவடிக்கையால் கைதுசெய்யப்படுகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. இதையடுத்தே யுக்திய நடவடிக்கைகள் உடன் நடைமுறைக்கு வரும்வகையில் நிறுத்தப்பட்டுள்ளதுடன், இந்தத் திட்டத்துக்காக விசேட கடமையாற்றிய பொலிஸார் அனைவரையும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கடமைகளில் இருந்து விடுவிக்குமாறு பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய உத்தரவிட்டுள்ளார். (அ-ம-26)

## மேம்படும்...

துக்கும் மேற்பட்ட சுற்றுலாவிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். இந்த வருடத்தில் இதுவரை 14 இலட்சத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாவிகள் வந்துள்ள நிலையில், அவர்களில் பெருமளவானவர்கள் இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ளனர். பிரிட்டனில் இருந்து இரண்டாவது அதிகபட்ச சுற்றுலாவிகளும், ஜேர்மனியில் இருந்து மூன்றாவது அதிகபட்ச சுற்றுலாவிகளும் வருகை தந்துள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## பெற்றோரிடமிருந்து...

அனைத்து மாகாணங்களின் கல்விச் செயலாளர்கள், வலயக் கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட தரப்பினருக்கே இந்த அறிவுறுத்தல் விடுக்கபட்டுள்ளது.

பாடசாலைகளில் இடம்பெறும் சிறுவர் தினம், ஆசிரியர் தினம் போன்ற விசேட நிகழ்வுகளுக்காகப் பெற்றோரிடமிருந்து பணம் அறவிடுவது தொடர்பாகக் கல்வி அமைச்சுக்கு முறைப்பாடு கிடைக்கப் பெறுவதால் குறித்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

## அரச...

காணாமற்போயுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ள நான்காயிரத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் தொடர்பான விடயங்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரியப்படுத்தப்படும். தொடர்ச்சியான விசாரணைகளின் அடிப்படையில் இந்த வாகனங்கள் எந்தத் திணைக்களங்களுக்கு ஒப்படைக்கப்பட்டன? அவற்றைப் பயன்படுத்தியது யார்? என்ற தகவல்கள் வெளிப்படுத்தப்படும் - என்றார். (அ-ம-சி)

## காணாமலாக்கப்...

நீதியை வலியுறுத்தி வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களால் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவது வழமை. இந்த மாதத்துக்கான போராட்டத்தை 30ஆம் திகதி (நாளை) முன்னெடுக்காமல் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதியன்று மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் தினமான அன்று, 'காணாமலாக்கப்பட்ட எங்கள் குழந்தைகள் எங்கே' என்ற தொனிப் பொருளின் கீழ் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. (அ-ம-113)

## ஹிஸ்புல்லா...

பெய்ரூட்டின் புறநகர்ப் பகுதியில் உள்ள நான்கு மாடிக் கட்டடம் ஹிஸ்புல்லாவின் தலைமையகமாகச் செயற்பட்டு வருகின்றது என்றும், அதிலேயே நஸ்ரல்லா பதுங்கியுள்ளார் என்றும் இஸ்ரேலின் உளவுப் பிரிவான மொசாட்டுக்குக் கிடைத்த தகவல்களையடுத்து மேற்கொள்ளப்பட்ட தீவிரமான வான் தாக்குதலிலேயே அவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நஸ்ரல்லா கொல்லப்பட்டுள்ளார் என்று இஸ்ரேல் விடுத்த அறிவித்தலை ஆரம்பத்தில் ஹிஸ்புல்லா அமைப்பு திட்டவட்டமாக மறுத்தபோதிலும், சில மணிநேரத்தின் பின்னர் தமது தலைவரின் இழப்பை ஹிஸ்புல்லா உறுதிப்படுத்தியது.

ஹிஸ்புல்லாக்களுக்கு எதிரான முற்று முழுதான போர் அறிவிப்பை விடுத்த 72 மணித்தியாலங்களில், 32 ஆண்டுகளாக ஹிஸ்புல்லாவின் உயர் தலைவராக இருந்தவரை இஸ்ரேல் படுகொலை செய்துள்ளமையானது உலக நாடுகளைத் திரும்பிப்பார்க்க வைக்கும் செயலாகவும், மொசாட்டின் வலிமையை பறைசாற்றும் நடவடிக்கையாகவும் அமைந்துள்ளது.

நஸ்ரல்லா கொல்லப்பட்டாலும் இஸ்ரேலுக்கு எதிரான தமது தாக்குதல்களை ஒருபோதும் நிறுத்தப்போவதில்லை என்று ஹிஸ்புல்லா அறைகூவல் விடுத்துள்ளது. (அ-ம)

## தவறான...

உயிரிழந்துள்ளார். இருபாலை கிழக்கைச் சேர்ந்த 58 வயதுடைய நபரே இவ்வாறு தவறான முடிவெடுத்து உயிரிழந்தவராவார். தனது மனைவியைப் பிரிந்து வாழ்ந்த அவர் கடந்த சில நாள்களாக கடும் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருந்தார் என்று மரண விசாரணைகளின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## வினாத்தாள்...

சுயாதீன விசாரணைக்குழுவொன்று கல்வியமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தரவால் நியமிக்கப்பட்டுள்ளது.

சுயாதீன விசாரணை அதிகாரிகளும், சுயாதீன கண்காணிப்பு அதிகாரிகள் குழாமும் இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். குறித்த குழுவின் விசாரணை அறிக்கையை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய பணிப்புரை விடுத்துள்ளார். (அ-ம-66)

# மயங்கிச் சரிந்து ஒருவர் சாவு

கடற்றொழில் நடவடிக்கைக்காகச் சென்ற குடும்பத் தலைவர் நேற்றையதினம் மயங்கிச் சரிந்து உயிரிழந்தார்.

காக்கைதீவு ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த கனகராசா சுரேஷ்குமார் (வயது-39) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

உடனடியாக அவரை கரைக்குக் கொண்டு வந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்தபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். மாரடைப்பால் மரணம் சம்பவித்ததாக உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலின் கரங்கள் ஈரானில் ஊடுருவும்!

டெல்அவிவ், செப். 29
இஸ்ரேலின் நீண்டகரங்கள் செல்லமுடியாத இடமென்று ஈரானில் எந்தவொரு இடமும் இல்லை என்று இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு தெரிவித்துள்ளார்.
பெய்ரூட்டில் இஸ்ரேல் மேற்கொண்ட தீவிரமான வான் தாக்குதல்களில் ஹிஸ்புல்லாவின் தலைவர் நஸ்ரல்லா படுகொலை செய்யப்பட்டுள்ள நிலையிலேயே, 'ஈரானின் எந்தவொரு இடத்திலும் தம்மால் தாக்குதல் நடத்த முடியும்' என்ற எச்சரிக்கையை பிரதமர் பென்யமின் நேதன்யாகு விடுத்துள்ளார்.
'நான் ஈரானுக்கு ஒன்றைச் சொல்லுகிறேன். நீங்கள் எங்களைத் தாக்கினால் நாங்களும் உங்களைத் தாக்குவோம். இஸ்ரேலின் நீண்ட கரம் செல்ல முடியாத இடம் என ஈரானில் ஒன்றுமே இல்லை. இது முழு மத்திய கிழக்கு நாடுகளுக்கும் பொருந்தும்' என்றும் நேதன்யாகு மேலும் தெரிவித்துள்ளார்.
பென்யமின் நேதன்யாகுவின் இந்த எச்சரிக்கையைத் தொடர்ந்து, ஈரானின் உயர் தலைவர் அயதுல்லா அல் கொமேனி பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் தங்கவைக்கப்பட்டுள்ளார். அத்துடன், ஈரானின் தேசியப் பாதுகாப்பும் பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. (ம)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** திடீர் செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். மகிழ்ச்சி தரும் செய்தி வந்து சேரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம்.

**இடபம்:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியங்கள் சாதகமாக முடியும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். இலாபம் வழக்கம் போல் இருக்கும்.

**மிதுனம்:** பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது. பேசும்போது வார்த்தைகளில் நிதானம் தேவை. மனஸ்தாபம் நீங்கும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகும். புதிய முயற்சி எடுப்பதற்கு சாதகமான நாள். செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் இருக்காது. மகிழ்ச்சி உண்டு. அலைச்சல் ஏற்படக்கூடும். விற்பனையும் இலாபமும் வழக்கம் போலவே இருக்கும்.

**சிம்மம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். கையிருப்பு கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கும் சூழ்நிலை ஏற்படும். பிணக்குகள் நீங்கும். ஆதாயம் உண்டாகும். சூரியபகவானை வழிபடுவது நன்று. பணியாளர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கன்னி:** பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவுகளை மேற்கொள்வது சாதகமாக முடியும். நல்ல செய்தி வந்து சேரும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். வியாபாரம் வழக்கம்போலவே நடைபெறும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு உறவினர்கள் ஒத்துழைப்பு தருவார்கள். எதிரிகள் வகையில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது கவனமாக காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலையே காணப்படும். உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு.

**மகரம்:** புதிய முயற்சி எதுவும் வேண்டாம். அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். செலவுகளைச் சமாளிக்க கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் சிலருக்கு ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும்.

**கும்பம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சக வியாபாரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். தட்சணாமூர்த்தி வழிபாடு நன்று.

**மீனம்:** பணம் கைக்கு வரும். செலவுகளும் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தவும். சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். மனவருத்தங்கள் நீங்கும். புதிய முயற்சியைத் தொடங்கலாம்.


## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி சங்கத்தானை பொற்தொழிலாளர் வீதியில் 2 பரப்பு, 2 குளி காணி விற்பனைக்குண்டு. கண்டி றோட்டில் இருந்து 500 மீற்றருக்குள் பாடசாலை, புகையிரத நிலையத்திற்கு மிகவும் அண்மையில் உள்ளது.

**தரகர் தேவையில்லை**

தொடர்பு: **077 209 1961**


## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



தோற்றம்
1936 . 03 . 09

மறைவு
2024 . 09 . 13

## அமரர் மங்களம் மகேஸ்வரி

கடந்த 13.09.2024 இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி அமரர் மங்களம் மகேஸ்வரி அவர்களின் ஆன்ம சாந்திப் பிரார்த்தனைகள் நாளை (30.09.2024) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறும். அந்நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆன்மசாந்தி கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு உடன் உதவி செய்த அன்புள்ளங்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், துண்டுப் பிரசுரங்கள், மலரஞ்சலி வைத்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகள், இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்)

**சாத்தாகலட்டி, அளவெட்டி வடக்கு**
**077 7111730**

**தகவல் :**
**குடும்பத்தினர்**


## கடை வாடகைக்கு தேவை

யாழ்நகரில் ஆஸ்பத்திரி வீதி
மற்றும் ஸ்ரான்லி வீதிப் பகுதியில்
இலத்திரனியல் காட்சியறை
ஆரம்பிப்பதற்கு கடை தேவை

தொடர்புகளுக்கு:
**070 410 1358**

## வாடகைக்கு வீடு தேவை

யாழ். நகர், கொக்குவில், கோண்டாவில்,
இணுவில் போன்ற பகுதிகளில்
ஒரு சிறிய குடும்பத்திற்கு
**வீடு வாடகைக்குத் தேவை.**

தொடர்புகளுக்கு:-
**075 322 5621, 076 803 5352**

## வேலைவாய்ப்பு

இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனத்திற்கு யாழ் கிளையில் பணியாற்றக்கூடிய காப்புறுதி விற்பனை முகாமையாளர் மற்றும் காப்புறுதி ஆலோசகர்கள் வேண்டப்படுகின்றனர்.

**ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்**
கீழுள்ள Whatsapp இலக்கத்திற்கு
விபரங்களை அனுப்பவும்.

தொடர்பு: **077 242 5414**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் மென்பான விநியோக நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.
சாரதி மற்றும் உதவியாளர்
(யாழ். மாநகர சபைக்குள் விரும்பத்தக்கது)

தொடர்பு:
**076 561 5492**
**070 511 5335**

## JOB VACANCY / வேலைவாய்ப்பு

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னாரில் இருக்கும்**
**எமது நளின் நிறுவனத்தின் கிளைக்கான வேலைவாய்ப்பு**

- **சாரதி**
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளமாக ரூபா 45,000 அடிப்படை வழங்கப்படும்.

- **பராமரிப்பு பணியாளர்**
பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளமாக ரூபா 40,000 அடிப்படை வழங்கப்படும்.

- **சந்தைப்படுத்தல் முகாமையாளர்**
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
செயற்திறன் அடிப்படையில் ரூபா 150,000 அடிப்படை சம்பளமாக வழங்கப்படும்.

**மேலும் EPF, ETF வழங்கப்படும்.**
**தங்களது விண்ணப்பங்களை 04.10.2024 இற்கு**
**முன்பு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

If you are interested to apply,
Please send your CV to this mail or Whatsapp 077 542 7426

NALIN Information Technologies (Pvt)Ltd
Computers of the North

**Email – career@nit.lk**
**Contact No - 021 222 0808**
**077 542 7426**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

புளுக்கொடியல் சீவல் / புளுக்கொடியல்
வட்டம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு கொள்ளுங்கள்
**072 733 2251**
**Email:rlfoodsprice2@gmail.com**

## SPOKEN ENGLISH & GRAMMAR

A/L, O/L எடுத்தவர்களுக்கு Monday to
Friday காலை நேர தனி வகுப்புகள்
Grade 7 to Graduates
**தொழில் புரிவோர்** Saturday, Sunday
யாழ் இந்து வீதியில்
K.Ganesh B.A **077 766 8725**

## காணி விற்பனைக்கு உண்டு

நல்லூர் கோவிலில் இருந்து 350m
தூரத்தில் 6 பரப்புக் காணி 14 அடி
பாதையுடன் விற்பனைக்கு உண்டு.
1 பரப்பின் விலை -
இரண்டு கோடியே அறுபது லட்சம்.
தொடர்பு:- **077 306 8993**

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஜின்னா வீதியில்
மேல் வீடு ஒன்று வாடகைக்கு
உண்டு.
4 அல்லது 5 நபர்கள் கொண்ட
சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.
தொடர்புக்கு: **077 422 7561**

## பதவி வெற்றிடம்

யாழில் உள்ள பிரபல வைத்திய சாலையானது பின்வரும்
பதவிகளுக்காக தகுந்த பெண் ஊழியர்களை எதிர்பார்க்கின்றது.

- **வரவேற்பாளர்கள்**
- **காசாளர்**
- **பிரதி மனிதவள முகாமையாளர்**

குறிப்பு :- யாழ் நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் உங்களது சுயவிபரக்கோவையினை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு 04.10.2024 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

**மேலும் தொடர்புகளுக்கு - 074 202 7318, 077 413 2012**
அலுவலக நேரத்தில் மட்டும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)

## சிறுநீரகம் தேவை

$B^+$ அல்லது $O^+$ குருதிவர்க்கம் உடைய
சிறுநீரகம் தேவை.

தொடர்பு: **077 3749 334**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கொழும்புத்துறை**
**சுவாமியார் வீதியில்**
**3 பரப்புக் காணியுடனான வீடு**
**விற்பனைக்கு உண்டு.**
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தொடர்புகொள்ள வேண்டாம்)
தொடர்புக்கு: **077 614 6434**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - காரைநகர் நவாலி வீதி
செல்லும் பாதை 50 M தூரத்தில்
16 அடி பாதையுடன் 20 பரப்புக்காணி
விற்பனைக்குண்டு.

CS/4442

தொடர்பு: **077 6763409**
**077 0781359**

## மருத்துவ பெண் உதவியாளர் தேவை

றோயல் பல்சிகிச்சை
நிலையத்திற்கு மருத்துவ பெண்
உதவியாளர் தேவை

(CS 43300) V-1

தொடர்பு: **076 878 8148**
**074 155 1427**

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு Champian Lane
நந்தாவிலில் புத்தம் புதிய வீடு
விற்பனைக்கு:

- ★2.3/4 பரப்பு
- ★4 அறைகள், 2 குளியலறைகள்
- ★சுற்றுமதில்
- ★காணி பிரிக்கக்கூடிய நிலையில் உள்ளது.
- ★கட்டுக்கிணறும் உண்டு.

தொடர்புகளுக்கு: **076 620 7597**

## காணி விற்பனைக்கு

- யாழ்ப்பாணம் - காடிவளை இளவாலையில் வீட்டுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
- நன்னீர் வசதி உள்ளது. (குழாய்க்கிணறு, பொதுக்கிணறும் உண்டு)
- மின்சார வசதி உண்டு
- சிறந்த சுற்றுச்சூழல்
- போக்குவரத்து, பாடசாலை, வைத்தியசாலை, ஆலயம், கடைகள் அருகில் உள்ளன.
- அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களைக் கொண்டு அளந்து விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**மேலதிக தொடர்புக்கு : 077 7159233**

## காணி விற்பனைக்கு

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் பருத்தித்துறை வீதியில் இருந்து 100 M தூரத்தில் 14 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
(2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரித்து கொடுக்கப்படும்.

தொடர்பு: **077 8363 050**
**075 8895 625**

## கடை வாடகைக்கு


மணிக்கூட்டு வீதி,
வெலிங்டன் சந்திக்கு
அருகாமையில் கடை
வாடகைக்கு உண்டு.

**077 64 30 681**
**021 22 22 691**

# மரண அறிவித்தல்

## சூசைப்பிள்ளை பெனடிக்ற் (சிறில்)

**(உரிமையாளர் - லைடன் றெக்ஸ்றைல் சென்றர், யாழ்ப்பாணம், முன்னாள் உரிமையாளர் - நிகம்பு பார்மசி, முன்னாள் பங்காளர் - சிற்றி ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் நீர்கொழும்பு, Crowns, நீர்கொழும்பு, வயது - 87 )**



**தோற்றம்**
**14.02.1937**

**மறைவு**
**25.09.2024**

யாழ். கரம்பொன் கிழக்கு,ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை பெனடிக்ற் (சிறில்) அவர்கள் கடந்த 25-09-2024 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - ஆரோக்கியம் (இராசம்மா) தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான கிரிஸ்சோஸ்றொம் பொன்ராசா - எலிசபெத் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற யூலியற் ஜெயசீலி அவர்களின் அன்புக் கணவரும், பீற்றர் ஜெயக்குமார் (அவுஸ்திரேலியா), ஜெயந்தினி (லண்டன்), அன்ரனி ஜெயந்திரன் (லண்டன்), ரூபினி டேவிற்(கொழும்பு), வதனி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பியூலா (அவுஸ்திரேலியா), பிலிப் கொன்ஸ்ரன்ரைன் (சுரேஸ்-லண்டன்), ஜெனி (லண்டன்), ஜீவன் (கொழும்பு), தனு ஜோசப் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற வைலட், வீடா (கிளி), சிசிலியா (சாளற்-சுவிஸ்), அருளானந்தம் டொமினிக் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராசா, மரியதாசன், மரியநாயகம், காலஞ்சென்றவர்களான புளோரன்ஸ் விமலா, ஜோசப்அன்ரன், மற்றும் கிளினெற், பிலிப் ஜெயராஜ், அலிஸ்ரன் தேவராஜ் (ஜேர்மனி), இம்மனுவல் அருள்ராஜ் (ஜேர்மனி), ஆன்திருநெற் (லண்டன்), ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜோஸ்சுவா, ஜொகானா, கிறேஸ், கிடியான், பெஞ்ஜமின், ஹனா, வில்லியம், மரியா, ரவின், ரீனா, கவின், கிறிஸ்ரின், மரியன், டானியேல் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (30-09-2024) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் (27, Swartz Lane, Chundikuli, Jaffna) இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை மறுதினம் 01-10-2024 செவ்வாய்க் கிழமை அன்று பி.ப 03.00 மணியளவில் புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் (St.John Baptist's Church- Hospital Road,Jaffna) திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, அதன்பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு (St.Mary's Catholic cemetery Near St Patrick's College) எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**27, சுவாட்ஸ் லேன்,**
**சுண்டுக்குளி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்**
பீற்றர் ஜெயக்குமார்
0061 412 215 286/ 077 148 4540
அன்ரனி ஜெயந்திரன்
0044 795 644 9827 / 076 673 7262
கிளமென்ரைன் கொன்ஸ்ரன்ரைன் ஜெயந்தினி
00447946055157
ரூபினி டேவிட் - 077 531 3203
வதனி ஜோசப் - 0061 413 213442



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

> துக்கத்துள் தூங்கித் துறவின்கண் சேர்கலா
> மக்கள் பிணத்த சுடுகாடு – தொக்க
> விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே புலன்கெட்ட
> புல்லறி வாளர் வயிறு.
>
> *-நாலடியார்*

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2055 | புரட்டாதி 13 | ஞாயிற்றுக்கிழமை (29.09.2024) | சிகரம் :220

# அநுர செய்யக்கூடிய மாற்றம்?



உற்சவி

இரண்டு தடவைகள் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டு நசுக்கப்பட்ட ஓரமைப்பு, அதன் தலைவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைகள் இன்றி என்கவுண்டரில் கொல்லப்பட்டவர். அப்படிப்பட்ட ஓரமைப்பின் தலைவர் இப்பொழுது நாட்டின் தலைவராக வந்திருக்கிறார். ஆயுதப் போராட்டத்தில் தொடங்கி ஜனாதிபதிப் பதவி வரையிலுமான இந்த வளர்ச்சியை ஏற்கனவே ஓர் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களாகிய தமிழ் மக்கள் ஆர்வத்தோடு பார்க்கவேண்டும்.

அதன் பொருள் அநுரவின் மாற்றம் என்ற கோஷத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதோ, அல்லது இனப்பிரச்சினைக்கான அவருடைய தீர்வை நம்ப வேண்டும் என்பதோ அல்ல.

ஆயுதப் போராட்டத்தில் தொடங்கி ஜனாதிபதிப் பதவி வரையிலுமான ஜே.வி.பி.யின் வெற்றிக்குள் இருந்து தமிழ் மக்கள் கற்றுக்கொள்ளப் பல விடயங்கள் உண்டு. குறிப்பாகத் தேசிய மக்கள் சக்தி என்று அழைக்கப்படுகின்ற புதிய கூட்டை தமிழ் மக்கள் விருப்பு வெறுப்பு இன்றிக் கற்க வேண்டும். அரசியல் செயற்பாட்டாளர்களும் புத்திஜீவிகளும் இணைந்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பு அது. ஆயுதப் போராட்ட மரபில் வந்த ஓர் அமைப்பும் புத்திஜீவிகளும் இணைந்து அப்படி ஒரு கட்டமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள். அக்கூட்டின் மையக் கட்டமைப்புக்குள் 73 உறுப்பினர்கள் உண்டு. அதில் ஆறுபேர் மட்டுமே தமிழர்கள். அங்கு இன விகிதாசாரம் பேணப்படவில்லை.

ஆனால் யாழ்ப்பாணத்தில் ஜே.வி.பி.யை ஆதரிக்கும் சில படித்தவர்கள் இம்முறை தேர்தலில் இனவாதம் பின்வாங்கி விட்டது என்று புளகாங்கிதம் அடைகிறார்கள். தமிழ்ப் பொதுவேட்பாளர் இனவாதத்தை முன் வைத்ததாகவும் விமர்சிக்கின்றார்கள். ஆனால் "அரகலிய" போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு தமிழ்ச் செயற்பாட்டாளர் முகநூலில் எழுதியது போல, தேர்தல் பிரசாரங்களில் இனவாதம் பெரிய அளவில் கதைக்கப்படவில்லை என்பதை வைத்து இனவாதம் இல்லை என்ற முடிவுக்கு வரக்கூடாது.

அநுர கூறும் மாற்றம் எனப்படுவது இனவாதம் இல்லாத ஓர் இலங்கை தீவா?

இது தேர்தல் காலம் மட்டுமல்ல, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பொறுப்புக் கூறலுக்கான விவாதங்கள் நடக்கும் ஒரு காலகட்டமும் ஆகும். வரும் ஏழாம் திகதி வரையிலும் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடர் நடைபெறும். இதில் பொறுப்புக் கூறல் தொடர்பில் அநுரவின் நிலைப்பாடு என்ன?

> **தமிழ் மக்கள் அவர் கூறும் மாற்றத்தை அதாவது சிஸ்டத்தில் மாற்றம் என்பதனை சந்தேகத்தோடு பார்க்கின்றார்கள். ஏனெனில், தமிழ் மக்கள் கேட்பது மேலோட்டமான சிஸ்டத்தில் மாற்றத்தை அல்ல. தமிழ் மக்கள் கேட்பது அதைவிட ஆழமான கட்டமைப்பு மாற்றத்தை. ஒற்றையாட்சி அரசுக் கட்டமைப்பில் மாற்றம். அதைச் செய்ய அநுரவால் முடியுமா?**

அசோசியேட்டட் பிரஸ் என்ற ஊடகத்துக்கு அவர் வழங்கிய செவ்வியை இங்கு பார்க்கலாம் "பொறுப்புக் கூறல் தொடர்பான கேள்வியைப் பொறுத்தவரை அது பழிவாங்கலுக்கான ஒரு வழியாக அமையக்கூடாது. யாரையாவது குற்றச்சாட்டுவதாகவும் அமையக்கூடாது. மாறாக உண்மையைக் கண்டுபிடிப்பதாக மட்டும் அமைய வேண்டும்.....பாதிக்கப்பட்ட மக்கள் கூட யாராவது தண்டிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. அவர்கள் என்ன நடந்தது என்பதனை அறிவதற்கு மட்டும்தான் விரும்புகிறார்கள்" என்று அநுர கூறுகிறார்.

அதாவது அவர் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்குத் தயாரில்லை. குற்றங்களை விசாரிப்பது உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு என்று கூறுகிறார். ஆயின் யார் குற்றவாளி என்ற உண்மையை கண்டுபிடித்த பின் அவரை தண்டிக்காமல் விட வேண்டும் என்று அவர் கூற வருகிறாரா? பாதிக்கப்பட்ட மக்களும் அதைத்தான் விரும்புகிறார்கள் என்று அவருக்கு யார் சொன்னது? அதாவது அநுர பொறுப்புக்கூறுவதற்குத் தயார் இல்லை. குற்றவாளிகளைப் பாதுகாப்பது என்பதே இனவாதம்தான். நாட்டின் இனவாதச் சூழலை அநுர மாற்றுவார் என்று தமிழ் மக்களை நம்ப வைப்பதாக இருந்தால் அவர், கடந்த காலங்களில் அவருடைய கட்சி குறிப்பாக அவர் தமிழ் மக்களுக்கு எதிராக எடுத்த இரண்டு பிரதான நிலைப்பாடுகளுக்கு பொறுப்புக் கூறுவாரா? மன்னிப்புக் கேட்பாரா?

தமிழ் மக்களின் தாயகத்தை அதாவது வடக்கையும் கிழக்கையும் சட்ட ரீதியாகப் பிரித்தது ஜே.வி.பி. தான். இது முதலாவது. இரண்டாவது, சுனா மிக்குப் பின்னரான சுனாமிப் பொதுக் கட்டமைப்பை எதிர்த்து அநுர தனது அமைச்சுப் பதவியைத் துறந்தார். சுனாமிப் பொதுக்கட்டமைப்பு எனப்படுவது மனிதாபிமான நோக்கங்களுக்கானது. இயற்கைப் பேரழிவு ஒன்றுக்குப் பின் உருவாக்கப்பட இருந்த மனிதாபிமானக் கட்டமைப்பு அது. அதைக் கூட எதிர்த்த ஒருவர் இப்பொழுது அதற்குப் பொறுப்பு கூறுவாரா? தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்பாரா? அவரிடம் இனவாதம் இல்லை என்று கூறி அவருக்கு வாக்களிக்குமாறு மறைமுகமாகக் கேட்ட யாழ்ப்பாணத்தில் உள்ள படித்தவர்கள் இதற்குப் பதில் கூறுவார்களா?

02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னேஸ்வரா விருட்சமாகிட விதைபோட்ட செம்மல்

சுந்தரலிங்கம் தியாகலிங்கம்



**தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாசாலையின் 94 ஆண்டு நிறைவுதினம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இடம்பெறுவதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

அமரர் முருகேசு கனகசபை இம்மண்ணில் வாழ்ந்ததன் ஞாபகச்சின்னமாக கல்வியின் கலங்கரைவிளக்கமாக மிளிர்கின்றது தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாசாலை. இந்தப் பாடசாலையின் முன்றலில் அவரின் உருவச்சிலை என்றென்றும் அவரை நினைவுபடுத்திக் கொண்டிருக்கும்.

மாட்டு வண்டிலே போக்குவரத்துக்குரிய சாதனமாக இருந்த காலம். குழந்தைகள் மண்ணளைந்து விளையாடி வந்த காலம். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலக் கல்விக்கே வாய்ப்பிருந்தது. பள்ளிக்கூடத்துக்கும் கல்லூரிகளுக்கும் கால்நடையாகவே மாணாக்கர் சென்று கல்வி கற்கவேண்டும். இதனால் வசதி,வாய்ப்பில்லாத பிள்ளைகள் பள்ளிக்கூடப் பக்கமே போகாதவர்களாக இருந்தனர். தொல்புரம் கிழக்கு கிராமத்தில் ஒரு சைவப்பாடசாலை இல்லாத குறையை உணர்ந்த தொல்புரம் வாழ் மக்கள், 1930 ஆம் ஆண்டு தை மாதம் துரையன் வளவுப் பிள்ளையார் மண்டபத்தில் கூடி விக்னேஸ்வரா வித்தியாசாலை என்ற பெயரில் ஒரு சைவப்பாடசாலையை நிறுவி நடத்தத் தீர்மானித்தனர்.

இந்தப் பாடசாலையை நிறுவி நடத்த வேண்டும் என்பதில் முன்னின்று உழைத்தவர் அமரர் முருகேசு கனகசபை (ஓவசியர்) ஆவார். இவருக்கு வேண்டிய ஒத்துழைப்பையும், உதவியையும் வழங்கியோரில் த. பே. வைத்திலிங்கம், அ. கந்தையா, சு. முத்துக்குமாரு, கி.நவரெட்ணம் (புரொக்டர்) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

1928 இல் இந்தப் பாடசாலையை திண்ணைப்பள்ளியாக அமரர் முருகேசு கனகசபை தனது இல்லத்தில் தொடங்கி நடத்தி வந்தார். முருகேசு உபாத்தியாயர் ஆசிரியராகக் கடமையாற்றினார். இந்தத் திண்ணைப்பள்ளியின் முதல் மாணவர் இராமலிங்கம் வேலுப்பிள்ளை (கண்ணா றொபி).

தற்போதைய இடத்தில் அமரர் முருகேசு கனகசபையால் 4 பரப்புக் காணியில் நிரந்தரக்கட்டடம் கட்டப்பட்டு தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாசாலை என்ற பெயருடன் 1930 ஆம் ஆண்டு ஐப்பசி மாதர் முதலாம் திகதி சைவ வித்தியாவிருத்திச் சங்கத் தலைவர் சு.சிவபாதசுந்தரம்பிள்ளையால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்போதும் பாடசாலையின் முதலாவது ஆசிரியர் முருகேசு உபாத்தியாயர் ஆவார்.

அமரர் முருகேசு கனகசபையின் மறைவைத் தொடர்ந்து பாடசாலை முகாமை 1931ஆம் ஆண்டு சைவவித்தியாவிருத்திச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டது. 1931 ஆம் ஆண்டு இலகுப்பிள்ளை இராமலிங்கம் அதிபராகக் பொறுப்பேற்றார். அவரின் காலம் பொற்காலமாகத் திகழ்ந்தது.

164 மாணவர்களும் 4 ஆசிரியர்களோடு எஸ்.எஸ். சி. வரை வகுப்புகள் நடைபெற்றன. தற்போதைய பாடசாலையின் வடக்குப் புறக் கட்டடம் அமைக்கப்பட்டதுடன் அம் மண்டபம் அமைக்கப்பட்ட காணியும் பாடசாலைக்காக வாங்கப்பட்டது. 1960 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலையில் 275 மாணவர்கள் கல்வி கற்றனர். 28.02.1962 ஆம் திகதிய இலக்கம் 12943 வர்த்தமானி அறிவித்தலின் படி அரசு 15.03.1962 ஆம் ஆண்டில் பாடசாலையைச் சுவீகரித்தது.

1972 ஆம் ஆண்டு தொடக்கம் அரசினர் பாடசாலைகளைத் தரம் பிரித்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் விக்னேஸ்வரா வித்தியாசாலை தரம் 1-5 வரையுள்ள ஓர் ஆரம்பப் பாடசாலையாக மாற்றப்பட்டது. 1988ஆம் ஆண்டு தொடக்கம் தரம் 1-8 வரையுள்ள கனிஷ்ட இடைநிலைப் பாடசாலையாக மாற்றப்பட்டது. 1995 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 30 ஆம் திகதி வலிகாமம் பிரதேசத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக பாடசாலை 1996.04.01 வரை தென்மராட்சியில் உள்ள அல்லாரை தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் தற்காலிகமாக இ.ராஜா ஆசிரியையை பதில் அதிபராகக் கொண்டு இயங்கியது. மீண்டும் 1996.05.06 தொடக்கம் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியது.

1998 ஆம் ஆண்டு முதன்முதலாக யா/தொல்புரம் விக்னேஸ்வராவித்தியாசாலையின் பழைய மாணவர் சங்கம் அமைக்கப்பட்டது.

வித்தியாசாலையின் முன்னேற்றத்திலும் ஆக்கபூர்வமான செயற்பாட்டிலும் அதன் ஸ்தாபகர் அமரர் முருகேசு கனகசபையின் பிள்ளைகளின் வழிப் பேரர்கள் எப்போதும் ஈடுபாடு காட்டியே வந்திருக்கிறார்கள். தற்போதைய அதிபர் அலுவலகம் வித்தியாலய ஸ்தாபகர் அமரர் முருகேசு கனகசபை (ஓவசியர்) ஞாபகார்த்தமாக அவரின் பேர்த்தி திருமதி கிருஷ்ணானந்ததேவி பரமேஸ்வரனால் அமைத்து வழங்கப்பட்டது.

ஓவசியராக சேவையாற்றிய அமரர் முருகேசு கனகசபையின் பணியானது பாடசாலை அமைத்தமையுடன் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. பல நற்பணிகளில் ஈடுபட்டுவந்தார். அவர் கீரிமலைச் சிவன் கோவிலுக்கு அருகில் கிருஷ்ணபிள்ளை மடம் ஒன்றையும் நடத்திவந்தார். அங்கு ஆடி அமாவாசை தீர்த்த உற்சவத்தில் அன்னதானம் வழங்கிவந்தார். மடத்தைப் பராமரிப்பதற்காக புலோப்பளையில் 231 பரப்புக் காணியை

**அமரர் முருகேசு கனகசபை இம்மண்ணில் வாழ்ந்ததன் ஞாபகச்சின்னமாக கல்வியின் கலங்கரைவிளக்கமாக மிளிர்கின்றது தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாசாலை.**

வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இந்தக் காணி 2011 இல் 52 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டமை இத்தருணம் நினைவுகூரத்தக்கது. உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்து கீரிமலை விடுவிக்கப்பட்டு மீள்குடியேற்றம் நிகழ்ந்ததன் பின்னர் அவரது பேர்த்தியான திருமதி கிருஷ்ணானந்ததேவி பரமேஸ்வரனின் நிதிப்பங்களிப்பில் முழுமையாக கெடுபிடிகளுக்கு மத்தியில் மீட்டு சிவபூமி இல்லத்திற்கு தருமசாதனமாக வழங்கப்பட்டது. தற்போது சிவபூமி முதியோர் இல்லத்தில் கிருஷ்ணபிள்ளையின் நாமம் பொறிக்கப்பட்டுள்ளது. அவரது சிலை பாடசாலையின் முகப்பிலே அமையவேண்டும் என்ற எண்ணம் பள்ளிக்கூடத்தின் 90வது ஆண்டுநிறைவில்செயலுருவம்பெற்றது. வித்தியாசாலையின் முற்றத்தில் பூங்காவின் மத்தியில் அமைந்த சிலையானது அவரே நேரில் வந்து பள்ளிக்கூடத்தை நடத்துவதான அகவுணர்வை ஏற்படுத்துகின்றது.

அவரது ஆத்மார்த்தமான மரபின் தொடர்ச்சி பூட்டப்பிள்ளைகள் வழியில் தொடர்ந்து இன்னும் இன்னும் இந்த பள்ளிக்கூடம் சிறப்புற்று சிறந்தவர்களாக்கவும் உருவாக்க வேண்டும் என்பதே எல்லோரதும் வேணவாவாகும்.

(தொடர்ச்சி)

## அநுர...

அதுமட்டுமல்ல தமிழ்ப் பொதுவேட்பாளரோடு அநுர பேச முற்படவில்லை. ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாஸவும் தமிழ்ப் பொதுவேட்பாளரோடு உரையாடத் தயாராக இருந்தார்கள். ஆனால் அநுர உரையாடத் தயாராக இருக்கவில்லை. யாழ்ப்பாணம் வணிகர் கழகத்திடம் ஜே.வி.பி. அதுதொடர்பான கோரிக்கைகளை முன்வைத்ததாகத் தெரிகிறது. எனினும் தமிழ்ப் பொதுவேட்பாளரை முன்னிறுத்திய தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பிடம் அவர் உத்தியோகபூர்வமான கோரிக்கைகள் எவற்றையும் முன் வைத்திருக்கவில்லை. தமிழ்ப் பொதுவேட்பாளரை அவர் பொருட்படுத்தவில்லை. அதாவது தமிழ் வாக்குகளை அவர் பொருட்படுத்தவில்லை ?


அவர் பதவியேற்றபோது தேசிய கீதம் இசைக்கப்படுகையில் ஒரு பகுதி பிக்குகள் எழுந்து நின்றமையை சில தமிழர்கள் பெரிய மாற்றமாகச் கருதுகிறார்கள். ஆனால் பதவியேற்ற போது பிக்குகளின் முன் அவர் மண்டியிட்டு அமர்ந்து ஆசீர்வாதம் பெறுவதை அவர்கள் பார்க்கவில்லையா? அவர் இடதுசாரி மரபில் வந்த ஒரு தலைவர் என்று கூறப்படுகிறது. ஆனால் அவரால் சிங்கள - பௌத்த அரசுக் கட்டமைப்பின் வழமைகளை மீறிச் செயற்பட முடியவில்லை என்பதைத்தான் அந்த ஆசீர்வாதம் பெறும் நிகழ்ச்சி நமக்கு உணர்த்தியது. அந்த மத ரீதியான சிஸ்டத்தை அவரால் மாற்ற முடியவில்லை. அவரும் அந்த சிஸ்டத்தின் கைதிதான்.

அதனால்தான் தமிழ் மக்கள் அவர் கூறும் மாற்றத்தை அதாவது சிஸ்டத்தில் மாற்றம் என்பதனை சந்தேகத்தோடு பார்க்கின்றார்கள். ஏனெனில், தமிழ் மக்கள் கேட்பது மேலோட்டமான சிஸ்டத்தில் மாற்றத்தை அல்ல. தமிழ் மக்கள் கேட்பது அதைவிட ஆழமான கட்டமைப்பு மாற்றத்தை. ஒற்றையாட்சி அரசுக் கட்டமைப்பில் மாற்றம். அதைச் செய்ய அநுரவால் முடியுமா?

பதவியேற்ற பின் அவர் ஆற்றிய உரையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் பின்வருமாறு கூறுகிறார்.. "சிங்களவராக இருந்தாலும், தமிழராக இருந்தாலும், முஸ்லிமாக இருந்தாலும், பேர்கராக இருந்தாலும், மலேயராக இருந்தாலும், இவர்கள் அனைவருக்கும் நாம் இலங்கைப் பிரஜைகள்" என்று பெருமையுடன் வாழக்கூடிய நடைமுறைச்சாத்தியமான ஒரு நாடு உருவாகும் வரை, இந்த நாடு தோல்வியடையுமே தவிர வெற்றியடையாது. அதற்காக அரசியலமைப்பு ரீதியான,பொருளாதார. அரசியல் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள ஒருபோதும் நாம் பின்வாங்க மாட்டோம். தனது இனம், தனது மதம், தனது வர்க்கம், தனது சாதி என இந்த நாடு பிரிந்திருந்த காலத்தை முழுமையாக முடிவுக்குக் கொண்டு வந்து, பன்முகத்தன்மையை மதிக்கும் இலங்கை தேசமாக இந்நாட்டைக் கட்டியெழுப்பும் நிலையான, நிரந்தரமான வேலைத்திட்டத்தை நாம் ஆரம்பிப்போம்."


இது அரசியல் அடர்த்தி குறைந்த வார்த்தைகளால் வழங்கப்படும் கவர்ச்சியான ஆனால் மேலோட்டமான வாக்குறுதி. இப்படிப்பட்ட லிபரல் வாக்குறுதிகள் பலவற்றை தமிழ் மக்கள் ஏற்கனவே கடந்து வந்து விட்டார்கள். தமிழ் மக்கள் கேட்பது அடிப்படையான கட்டமைப்பு மாற்றத்தை. இலங்கைத் தீவின் பல்லினத் தன்மையை உறுதிப்படுத்தும் கட்டமைப்பு மாற்றத்தை. இலங்கைத் தீவில் ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள், தேசங்கள் உண்டு என்பதனை ஏற்றுக் கொள்ளும் மாற்றத்தை. அந்த அடிப்படையில் வழங்கப்படும் ஒரு தீர்வை. தமிழ் மக்களை இறைமையும் சுயநிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கும் ஒரு தீர்வை. அப்படிப்பட்ட ஒரு மாற்றத்தை ஏற்படுத்த அநுரவால் முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனாதிபதி அநுரவுக்கு....

## அவசரமா ஒரு கடதாசி



வணக்கம்.

ஒரு மாதிரி ஜனாதிபதித் தேர்தலும் முடிஞ்சு போச்சு. தாங்கள்தான் வருவம் எண்டு எதிர்பார்த்துக் காத்திருக்க எல்லாற்றை எதிர்பார்ப்பிலையும் மண்ணைத் தூவிப் போட்டு நீங்கள் வந்திட்டியள். சாதாரண பொதுமக்கள் எண்டு சொல்லப்படுகிறவைக்குப் பரம சந்தோசம். அது மட்டுமில்லை வந்த உடனை உங்கடை அதிரடி நடவடிக்கைகளாலை கனபேர் கதிகலங்கிப் போயிருக்கிறதைக் கண்டும் எங்களுக்கு சந்தோசமா இருக்கு. என்னத்தைச் சொன்னாலும்இப்ப பலபேற்றை 'உள்ளங்கவர் கள்ளன்' நீங்கள் எண்டு பேரெடுத்துப் போட்டியள்.

ஒரு நாட்டிலை இருக்கிற சாதாரண குடிமகனுக்கு எது பிடிக்கும்? எது பிடிக்காது எண்டதை சாத்திரம் பாத்துக் கணக்கா வேலையைக் குடுக்கிறியள். அது தான் உங்கடை பலம். காலப்போக்கிலை அது உங்கடை பலவீனமாகவும் வரலாம். கவனமாகப் பார்த்துக் காயை நகர்த்த வேணும். இது அடியேன்ரை அட்வைஸ்.

நான் நினைக்கிறன் துவக்கத்திலேயே சிலதைக் கிளியர் பண்ணிக் கொள்ளவேணும். அதுதான் ஜென்ரில்மேனுக்கு அழகு. ஜே.வி.பி. போராடத் தொடங்கின காலத்திலை நான் சின்னப் பெடியன். சாதாரண தரத்துக்குக்கூட நான் வரேல்லை. றேடியோ சிலோன் ஒரு சாதாரண கிளர்ச்சி எண்ட மாதிரித்தான் முதலிலை அறிவிச்சவை. பிறகு உங்கடை ஆக்கள் சிலரைப் பிடிச்சு அடிச்சுச் சித்திரவதை பண்ணினாப் போலைதான் அரசாங்கத்துக்கு இது ஒரு புரட்சி எண்டு தெரியும். பிறகு சேகுவேராப் புரட்சி எண்டு பேர் வைச்சு அதையே சொல்லத் துவங்கிவிட்டினம்.

ஆனால் அந்தப் புரட்சிக் காலத்திலை உங்கடை தலைவரை ஒரு கட்டத்திலை உங்கட ஆக்கள் யாழ்ப்பாணம் - சுன்னாகத்திலை- கொண்டு வந்து ஒளிச்சு வைச்சிருந்தவை எண்டு ஒரு கதை இருக்கு. அது உங்களுக்கும் தெரிஞ்சிருக்க வாய்ப்பில்லை, ஏனெண்டால் அப்ப நீங்கள் பால்குடியா இருந்திருப்பியள்.

அப்ப கொழும்பிலை நான் இருந்தனான். பார்த்துப் பார்த்து சிங்களப் பெடிபெட்டையளைத்தான் ரார்கெற் பண்ணி அடிச்சது போக பிடிச்சுக் கொண்டும் போனவை. அதிலை ஆகலும் கொடுமை என்னெண்டால் கதிர்காமத்திலை ஜே.வி.பி.யிலை இருந்த பிரேமாவதி மனம்பெரிக்கு நடந்த சித்திரவதையும் கொடுமையும் கொலையும் எண்டு தான் நான் நினைக்கிறன். அவவைப் பல தடவை கற்பழிச்சதாகவும் சொன்னவை. அவவை வாகனத்திலை கட்டி றோட்டு றோட்டாக இழுத்துத் திரிஞ்சவை எண்டும் ஆக்கள் கதைச்சவை. பிறகு தண்ணீக்குள்ளை போட்டு அவவின்ரை கதையையும் முடிச்சுப்போட்டினமாம். இதையும் நீங்கள் பாத்திருக்க மாட்டியள் எண்டு நினைக்கிறன்.

இதே விளையாட்டை 2009 இலை அப்ப அரசாங்கத்திலை இருந்த கூலிக்கு மாரடிக்கிறவையும் செய்திருக்கினம். இசைப்பிரியா எண்ட ஊடகவியலாளரையும் நிர்வாணமாக்கி கற்பழிச்சு சேத்துக்கை போட்டுச் சுட்டவை. அதோடை ஒண்டும் அறியாத பாலகனை விசுக்கோத்துத் தின்னச் சொல்லிப் போட்டு சுட்டுப் பொசுக்கினவங்கள். அவன் செய்த பிழை என்ன வெண்டால் பிரபாகரனுக்குப் பிள்ளையாப் பிறந்தது மட்டும்தான். .

இந்த அநியாயத்தை எல்லாம் "சனல் - 4" ரீவியில காட்சிப்படுத்தினவை. அதைப் பொய் பித்தலாட்டம் எண்டு சொல்லி ராஜபக்ச குடும்பம் சடைஞ்சு போட்டினம். இலங்கையில் நடந்தது இனப்படுகொலை இல்லை எண்டும் இரண்டு ஊருக்கு இடையிலை நடந்த ஊர்ச்சண்டை எண்ட மாதிரிக் கதையை முடிக்கப் பல தடவை "றை" பண்ணினவை. அவைக்குச் சப்போட் பண்ணினவையின்ரை அனுசரனையோடை அது இன்னும் கிடப்பிலை கிடக்கு.

இதையெல்லாம் ஏன் ஞாபகப்படுத்திறன் எண்டால் எங்களைப் போலை நீங்களும் போராடிக் களைச்சுப்போனவை. எங்கடை போராட்டம் ஏனெண்டதை விளங்கிக் கொள்ளுகிற பக்குவம் உங்களுக்கு இருக்கிறதா நான் உணருகிறன். பாம்பின்ரை காலைப் பாம்புதான் அறியும் எண்டு எங்கடை ஊரிலை ஒரு பழமொழியும் இருக்கு.

நீங்கள் ஏன் போராடினியள் எண்டு உங்களுக்குத் தெரியும். அது போல நாங்கள் ஏன் போராடினாங்கள் எண்டு எங்களுக்குத்தான் தெரியும். சிங்கள முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின்ரை அடக்குமுறை தாங்கேலாமைத்தான் துவக்கைக் கையிலை எடுத்தனாங்கள். உலகம் அழியிறவரைக்கும் "எங்கடை போராட்டத்திலை ஞாயம் இருக்கு" எண்டதை உரத்துச் சொல்லுவன். அதைப் போலை நீங்களும் உங்கடை போராட்டத்தை ஞாயப்படுத்தி வந்திருக்கிறியள். சிங்கள மக்களைச் சாந்தப்படுத்தி அவையின்ரை மனதுகளையும் வெல்ல எண்டும் பல முன்னெடுப்புகளையும் செய்தனியள். அதிலை ஒண்டு தான் வடக்குகு - கிழக்கு மாகாணங்களைத் துண்டாடின விசயம். அரசியல் சூழலுக்கேற்ற மாதிரி இடைக்கிடை தாளத்தையும், இராகத்தையும் சுருதியையும் மாத்தி மாத்திக் கொண்டாலும் அரசாட்சியைக் கைப்பற்றுற இலக்கை நீங்கள் ஒருக்காலும் கைவிடாததுதான் இண்டைய உங்கடை வெற்றிக்குக் காரணம் எண்டு நான் சொல்லுவன்.

அடுத்தது உங்களுக்குள்ளை இருக்கிற ஒழுக்கம். கட்சி ஒருமைப்பாடு. கம்யூனிஸக் கொள்கை எண்டு பலதைச் சொல்லலாம். ஏறத்தாழ ஐம்பது வருசத்திலை நீங்கள் கண்ட கனவின்ரை வெளிபாடுதான் இப்ப எடுக்கிற முடிவுகளும் அவை சார்ந்த நடவடிக்கைகளும் எண்டது பலர் அறிய வாய்ப்பில்லை. இதுவரை இலங்கைத் தீவிலை நீங்கள் கண்ட "லைவ்" காட்சியளும், அது தொடர்பான நடவடிக்கைளும், திடீர் பண்காரர்களின்ரை உதயமும் அவையளின்ரை கொட்டமும் கொண்டாட்டங்களும் தான் உங்களை உடனடியாக அதிரடிக்குள்ள இறக்கியிருக்கு.

இந்த இடத்திலை ஒரு விசயத்தையும் நான் சொல்ல வேணும். வட மாகாண ஆளுநராக வேதநாயகனைத் தேடிப் பிடிச்சிருக்கிறியள். அதாலை நீங்கள் தமிழ் உலகத்துக்கு ஒரு செய்தியைச் சொல்லி இருக்கிறியள்.

தமிழ் மக்களை நம்புங்கோ. அரசியல்வாதியளை நம்பிறதைப் பாத்துச் செய்யுங்கோ. ஏனெண்டால் எங்களுக்குள்ளை பச்சோந்தியள் இருக்கு. மந்திக் கூட்டம் இருக்கு. புல்லுருவியள் இருக்கு. அவையள் தங்கடை வாசி வசதிக்கேற்றமாதிரி மக்களிலை ஏறிச் சவாரி செய்திட்டுப் போய்விடுவினம். போன ஜனாதிபதித் தேர்தல் காலத்திலை நீங்கள் எல்லாத்தையும் கண்டிருப்பியள்தானே!

இந்த இடத்திலை "கடமையைச் செய். பலனை எதிர்பாராதே" எண்ட கீதைவரிகளை நான் ஞாபகப்படுத்த விரும்புறன். அதோடை அரசியலிலையும் அரசாட்சியிலையும் அறம் சாட்சியாக இருக்க வேணும்.


நீங்கள் தொடங்கி இருக்கிற வேட்டைக்கு என்ரையும் என்ரை மக்களின்ரை ஆதரவும் எப்பவும் இருக்கும் வாழ்த்துகள். பெஸ்ற் ஒவ் லக்.

– அப்பாவி அன்னமுத்து

## தியாக தீபம்

ஈழத் தமிழரின் இடரது துலங்கிட
ஈன்ற நாடதில் இயல்பது விளங்கிட
இனமொன்றின் ஒன்றித்த குரலதுவாய்
இலங்கைத் தமிழரின் விடுதலைக்காய்
ஊரெழு எனும் ஊரதில் அன்று
உரிமைக்காய் உதித்த உவமையில் தமிழர்
தியாகத் தீபம் திலீபன் அவர்கள்
மருத்துவக் கல்விதனை முழுதாய் துறந்து
மண்ணின் நலனதை மனதில் விதைத்து
நிலைமாறா நிலம் வேண்டி நிராயுதபாணியாய்
நிலையாக நல்லையில் நோன்பது நோற்று
அன்ன ஆகாரம் அடியோடு அற்று
அறமெனும் நெறியதை அகத்தினில் கொண்டு
பன்னிரு நாளாய் பகலிரவு பாரா
பார்ப்போர் நெஞ்சை பதறச் செய்த
உண்ணா நோன்பும் உதிர்வது கண்டது
உற்ற தனயனின் உயிரது பிரிந்ததும்
உதிரம் உருக்கிய தியாகமது கண்டு
உலகத் தமிழினம் உறைந்து போனது
கண்ணீரில் முடிந்திட்ட காவியமே ஆயினும்
காலம் கடந்தும் கரையாமல் என்றும்
தமிழரின் நெஞ்சமதில் நிறைந்திருக்கும்
தாயகத் தமிழினம் வாழும் வரை

- துவர்னிகா பாலகிருஷ்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிச்சம்



○ ம.நிரேஸ்குமார்

அ "உன்னைக் கட்டினதுக்கு கலியாணம் கட்டாமல் இருந்திருக்கலாம்"
"ஏன் கட்டினனியள்? கட்டாமல் இருந்திருக்கலாம்"
"வாய்க்கு வாய் காட்டப் போறியே? அப்பவும் அவன் கதிரமலை சொன்னவன். ரீச்சர்மாரைக் கட்டாதயடா எண்டு. நான் கேட்டனே?"
"அதுதான் அவன் உப்பிடிச் சீர் கெட்டுத் திரியிறான். அவன்ர கதை என்னோட கதைக்க வேண்டாம். அவன மாதிரிப் போறதெண்டா நீங்களும் போங்கோ"
"உன்னப் போல பொம்பிளயளக் கட்டினா அப்பிடித்தான் போகவேணும்"
" ரண்டு பிள்ளயளோட உங்களுக்கு அவிச்சுக் கொட்டிக் கொண்டு, நானும் வேலைக்குப் போய்க்கொண்டு, நான் படுற கஷ்டம் எனக்குத்தான் தெரியும். ஆம்பிளையளே உப்பிடித்தான். தங்கட காரியங்கள் எல்லாம் சரிவர நிறைவேறாட்டி என்னத்தையும் சாட்டிக்கொண்டு துடங்கி விடுவியள்"
"எல்லாத்துக்கும் உந்தக் கதையை எடுத்துப் போடு. கொக்காவும்தான் ரண்டு பிள்ளயளோட வேலைக்குப் போறா. புருஷனுக்கு சாப்பாடு போட்டுக் குடுக்கிறா, தேத்தண்ணி போட்டுக் குடுக்கிறா. உடுப்புத் தோய்ச்சுக் குடுக்கிறா. இலங்கையில ரண்டு லச்சம் ரீச்சர்மாருக்கும் ஏலுற விசயம் உனக்கு மட்டும் ஏலாது"

◈◈◈ ◈◈◈

"சௌமியா ரீச்சர். சௌமியா ரீச்சர்."
யாரோ அழைக்கும் குரல்
சௌமியா சிந்தனையிலிருந்து விடுபட்டு நிமிர்ந்தாள்.
"என்ன சௌமியா கடுமையான யோசனை? அவரோட ஏதும்?" மாலதி நமட்டுச் சிரிப்புச் சிரித்தாள்.
"ஒண்டுமில்ல. சும்மாதான் இருக்கிறன்"
"சும்மா சொல்லாத. காலமை அவரோட ஏதும் புடுங்குப்பாடே?"
மாலதி கண்ணடித்துச் சிரித்தாள்.
"சும்மா இருங்கோ ரீச்சர். "
சௌமியா சலித்துக் கொண்டாள்.
"காலம அவரோட பெரிய சண்டையாப் போச்சு. அதுதான் யோசிச்சுக் கொண்டிருந்தனான்"
"ஏன்? என்ன பிரச்சினை?"
"நேற்றிரவு வேலையெல்லாம் முடிச்சுப் படுக்கேக்க 11 மணியாச்சு. தேவையில்லாத கதையளத் துவக்கி மனிஷன் தான் சண்டையைத் துவக்கினது"
"என்ன செய்யுறது சௌமியா? வீட்டுக்கு வீடு வாசல்படி. நாங்கள்தான் கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிப் போக வேணும்"
"பொம்பிளயளும் மனிசர்தானே! மெஷின் மாதிரி வேலை செய்யேலுமே. நாங்களும்தான் வேலைக்குப் போறம். வேலையால வந்து சமைக்க வேணும். பிள்ளயளின்ர உடுப்புத் தோய்க்க வேணும். ஆம்பிளயள் மட்டும் வீட்ட வந்து காலுக்கு மேல கால் போட்டுக் கொண்டு இருக்கவேணும்"
"அப்பிடிச் சொல்லேலாது ரீச்சர். ஆம்பிளயளுக்கெண்டும் சில எதிர்பார்ப்புகள் இருக்கும் தானே!"
"நிப்பாட்டுங்கோ ரீச்சர். உப்பிடியே கதைக்க விட்டால் பொம்பிளயளிலதான் பிழை. ஆம்பிளயள் செய்யுறதெல்லாம் சரியெண்டு சொல்லிப் போடுவியள்"
இருவரும் சேர்ந்து சத்தமாகச் சிரிக்க பாடம் முடிந்து மணி அடித்தது.

◈◈◈ ◈◈◈

"குட் மோனிங் ரீச்சர்"
"குட் மோனிங் இருங்கோ"
சௌமியா அட்டெண்டன்ட் ரெஜிஸ்ரரை எடுத்து பிள்ளைகளின் வரவுப் பதிவைச் சரி பார்த்தாள். ஆசிரியர் வகுப்பறையில் இருப்பதையும் பொருட்படுத்தாமல் பிள்ளைகள் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள்.
"எருமை மாடுகள். என்னத்துக்குச் சத்தம் போடுறியள்? எல்லாரும் கோம்வேக் செய்தந்தனியளே. மொனிற்றர் எல்லாற்ற கொப்பியையும் சேரும்"
"ஆரூரன் உமக்கு என்ன சொன்னனான்? கொப்பியளச் சேர்க்கச் சொன்னனான் எல்லோ"
"கொப்பியளத் தாறாங்கள் இல்லை ரீச்சர்"
"கோம்வேர்க் செய்யாதவங்கள் எல்லாம் எழும்பு"
ஒருவரும் எழுந்திருக்கவில்லை.
"கோம்வேர்க் செய்தவங்கள் எல்லாம் எழும்பு"
அதற்கும் எவரும் எழுந்திருக்கவில்லை.
"ஏதாவது ஒண்டுக்கு எழும்புங்கோவன். மாடுகள். உங்களுக்கு எதுக்குப் படிப்பு? எங்கட உயிரை எடுக்கிறதுக்கெண்டே வாறியள்" சௌமியா சட்டென்று சுதாரித்துக் கொண்டாள். இடம்மாறு வன்முறைக் கோட்பாடு. ஒருவரிடத்தில் உள்ள கோபத்தை இன்னொருவரிடத்தில் காட்டுவது. அல்லது ஏதேனுமொரு கோபத்தை இன்னோரிடத்தில் காட்டுவது.
"உங்கட பிரச்சினையள பள்ளிக்கூட கேற்றடியில விட்டுட்டு வர வேணும்" எப்போதோ கேட்ட ஞாபகம் அவளது சிந்தனையைக் கீறிச் சென்றது.
"சௌமியா ரீச்சர் உங்களப் பிரின்சிப்பல் வரட்டாம்"
பீயோன் கந்தசாமி உரப்பும் குரலில் சொல்லி விட்டுச் சென்றான்.

◈◈◈ ◈◈◈

"குட் மோனிங் சேர்"
"குட் மோனிங். இருங்கோ ரீச்சர்"
சௌமியா நுனிக் கதிரையில் அமர்ந்திருந்தாள். சில நிமிடங்கள் கரைந்தோடின.
'பாட நேரம். வகுப்பில பிள்ளையள் 38, 39 பேர் இருக்கிறாங்கள். இந்தாள் என்னை வரச் சொல்லிப் போட்டு தான் ஏதோ எழுதிக் கொண்டிருக்குது' சௌமியா மனதுக்குள் சபித்துக்கொண்டு அமர்ந்திருந்தாள்.
"ஆ. சொல்லுங்கோ ரீச்சர்"
"நீங்கள்தான் சேர் வரச் சொன்னனீங்கள்"
"ஓம். ஓம்.விஞ்ஞான ஆய்வு கூடப் பொறுப்பு எடுத்திட்டீங்களே ரீச்சர்? "
"ஓம் சேர். போன கிழமைதான் எடுத்தனான். லாப் ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கிறன்"
"விஞ்ஞானக் கழகப் பொறுப்பு? "
"ஓம் சேர்.அதுவும் எடுத்துப் போட்டன்"
"சரி. சுகாதாரக் கழகப் பொறுப்பையும் நீங்கள்தான் எடுக்க வேணும்"
"எனக்குப் பாடம் கூட சேர். ஏற்கனவே 33 பாடவேளை. விஞ்ஞானக் கழகப் பொறுப்பும் என்னட்டத்தான் கிடக்கு"
சௌமியா விழுங்கிக் கக்கினாள்.
"நான் சொல்லுறதச் செய்யுங்கோ ரீச்சர். இப்பத்தய ஆக்களுக்கு வேலை செய்யுறத விட வேலையைத் தட்டிக் கழிக்கிறது எப்பிடியெண்டு நல்லாத் தெரியுது"
"இல்ல சேர். எனக்கு பாடம் கூட. பாடம் குறைஞ்ச கனபேர் இருக்கினம். அவேற்றக் குடுங்கோ சேர்"
"விஞ்ஞான ரீச்சர்தான் விஞ்ஞான ஆய்வு கூடத்தையும் விஞ்ஞானக் கழகத்தையும் பொறுப்பெடுக்க வேணும். சுகாதார ரீச்சர் இல்லாத படியாத்தான் உங்களைக் கேக்கிறன் ரீச்சர்"
"வேற கன ரீச்சர்மார் சும்மா இருக்கினம் சேர். அவ ஆரிற்றயும் குடுங்கோ"
"அப்பிடியோ! அப்ப சுகாதாரக் கழகத்தை பொறுப்பெடுக்க முடியாது எண்டு கடிதம் தாங்கோ"
"வீட்டில மட்டும்தான் வாய். வெளியில திறக்க வேண்டிய இடத்தில கூடத் திறக்கிறேல" கணவன் மனக் கண்ணில் தோன்றிச் சிரித்தான்.
"கடிதம் தரமாட்டன் சேர். நீங்கள் வேணுமெண்டா சயன்ஸ் ஏ.டி.க்கு அறிவியுங்கோ"
"எனக்குக் கோபம் வர வைக்காதையுங்கோ ரீச்சர்"
"உங்கட கோபத்தை வீட்டில உங்கட........."
சௌமியா சட்டென்று பேச்சை நிறுத்திக் கொண்டாள்.
"கடமைகள் அளவுக்கதிகமாக வரும்போது அவற்றை சுமையாக எடுக்காமல் சவாலாக எடுத்துக் கொள்ள வேண்டும்"
"சரி சேர் சுகாதாரக் கழகத்தையும் நான் பொறுப்பெடுக்கிறன்" சௌமியா விருட்டென்று வெளியேறினாள்.
"இண்டைக்கு தர வட்ட மீற்றிங் இருக்கு. நீங்கள்தான் போக வேணும்" என்ற அதிபரின் குரல் தெளிவாகக் கேட்டது.

சஞ்சீவ
சிறுக


◈◈◈ ◈◈◈

பிற்பகல் 2 மணிக்குத் தர வட்ட மீற்றிங் இருந்தது. பள்ளிக்கூடம் 1.30 க்கு விட்டதும் பிள்ளைகளை ஏற்றி இறக்கி 'திண்டது பாதி தின்னாதது' பாதியாக குழம்பிய தலையுடன் வலயக் கல்விப் பணிமனையை அடைந்தாள்.
"பாருங்கோ வாற நேரத்தை. ரண்டு மணிக்கு கூட்டத்துக்கு ரண்டு பதினஞ்சுக்கு வாறா"
சௌமியா கண்கள் கலங்கியதை வெளிக்காட்டாமல் தனக்காக ஓதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள்.
"ஒவ்வொருத்தரும் உங்கட அஞ்சு வருஷப் பேசென்ரேஜை வாசியுங்கோ. முதலில சௌமியா ரீச்சர்"


"2012 32 வீதம்
2013 28 வீதம்
2014 27 வீதம்
2015 25 வீதம்
2016 30 வீதம்"

"பாருங்கோவன் பேர்சென்ரேஜை. ஒவ்வொரு வருஷமும் குறைஞ்சு கொண்டு போகுது"
"நான் போன ஜனவரில தான் ரான்சரில வந்தனான். அதுக்கு முந்தி சுப்பிரமணியம் ரீச்சர்தான் படிப்பிச்சவா"
"அப்பிடியே. அப்ப அதுக்கு முதல் நீங்கள் இருந்த ஸ்கூல் பேசென்ரேஜை சொல்லுங்கோ பாப்பம்"

> புரிந்துணர்வு இல்லாத கணவன், பொறுப்பற்ற பிள்ளைகள். சொந்தப் பிள்ளைகள்தான் அப்படியென்றால் பாடசாலையில்..? , எல்லா வேலைகளையும் என் தலையில் சுமத்தும் அதிபர், குறை கண்டு பிடிப்பதிலேயே குறியாக இருக்கும் மேலதிகாரிகள் இவர்களுக்கிடையில் அகப்பட்டு உடலாலும் உள்ளத்தாலும் வருந்தி. யாரிடமும் நல்ல பெயர் எடுக்கவும் முடியவில்லை. மங்கையராகப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டுமாம்! சௌமியா சிந்தனைச் சூறாவளிக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞ்சீவி
ுகதை

"2012 22 வீதம்
2013 40 வீதம்
2014 47 வீதம்
2015 63 வீதம்
2016 32 வீதம்"

"ம் விளக்கத்தையும் நீங்களே சொல்லுங்கோ"

"சேர் 2012 ஏப்ரல் மாதந்தான் நான் அங்க ரான்ஸ்பரில போனனான். அந்த 'பட்ஜை' என்னால சரியா இறுக்கிப் பிடிக்கேலாமல் போட்டுது. அதுக்குப் பிறகு பேசென்ரேஜ் கூடிக்கொண்டுதான் போனது. திரும்பவும் 2016 இல"

"ம். சொல்லுங்கோ"

"அதுக்கு நான் மட்டும் காரணம் இல்ல சேர். எனக்கு ரான்ஸ்பர் வரப் போகுதெண்டு ஓ.எல். ரைம் ரேபிள் தரேல சேர்"

"எல்லாத்துக்கும் மறுமொழி சொல்லத் தயாரா இருக்கிறியள். உங்கட கடமையளையும் கொஞ்சம் செய்யுங்கோ. படிக்கிற பிள்ளயளையும் உங்கட பிள்ளயள் மாதிரிப் பாருங்கோ"

மேலதிகாரி "தான்தான் மேலதிகாரி" என்பதை நிரூபிப்பதில் குறியாக இருப்பதைப் புரிந்து சௌமியா மௌனமாக அமர்ந்திருந்தாள். அதன் பின்னர் ஏதேதோ விடயங்கள் எல்லாம் விவாதிக்கப்பட்டன. அவை எதுவுமே சௌமியாவின் காதுகளில் ஏறவில்லை.

'சீ என்ன வாழ்க்கை இது?'

புரிந்துணர்வு இல்லாத கணவன், பொறுப்பற்ற பிள்ளைகள். சொந்தப் பிள்ளைகள்தான் அப்படியென்றால் பாடசாலையில்..? , எல்லா வேலைகளையும் என் தலையில் சுமத்தும் அதிபர், குறை கண்டு பிடிப்பதிலேயே குறியாக இருக்கும் மேலதிகாரிகள் இவர்களுக்கிடையில் அகப்பட்டு உடலாலும் உள்ளத்தாலும் வருந்தி. யாரிடமும் நல்ல பெயர் எடுக்கவும் முடியவில்லை. மங்கையராகப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டுமாம்! சௌமியா சிந்தனைச் சூறாவளிக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தாள்.

கூட்டம் நிறைவடைந்தது கூட அவளுக்குத் தெரியவில்லை.

"என்னம்மா கடுமையான யோசனை?"

"ம்"

சௌமியா சுயநினைவு வந்து நிமிர்ந்து பார்த்தாள். லட்சுமிகரமான தோற்றத்துக்கு வரைவிலக்கணமாக சுமார் 55,60 வயது மதிக்கத்தக்க ஆசிரியை ஒருவர் அவளருகில் நின்று கொண்டிருந்தார்.

சௌமியாவுக்கு ஏனோ தன் தாயின் ஞாபகம் வந்தது.

"ஒண்டுமில்ல ரீச்சர். சும்மாதான்"

"சும்மா என்று நீ சும்மா சொல்கிறாய் என்பதை உன் முகமே காட்டுகிறதம்மா"

சௌமியா மௌனமாயிருந்தாள். அந்த மௌனத்தை அந்த ஆசிரியையே மீண்டும் கலைத்தார்.

"குடும்பச் சுமை, பாடசாலைச் சுமை, மேய்ப்பவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய சுமை. இத்தனை சுமைகளுக்கிடையில் ஒரு பெண்ணாப் பிறந்தவள் படுகின்றபாடு எனக்கும் தெரியும் அம்மா"



வார்த்தைக்கு வார்த்தை அம்மா என்னும் அந்த அன்பு சௌமியாவை உடையச் செய்தது. அவளது அழுகையை சில நிமிடங்கள் அனுமதித்த பின்னர் அந்த ஆசிரியையே மீண்டும் பேசினார்.

"சொல்லம்மா உனக்கு என்ன பிரச்சினை?"

மௌனம்.

"நம்பிக்கை இருந்தால் சொல்லு. இல்லாவிட்டால் வேண்டாம்"

"இல்லை ரீச்சர்"

சௌமியா அவசரமாய் மறுத்தாள்.

அவளுக்கும் தனது மனச் சுமைகளைக் கொட்டித் தீர்ப்பதற்கு ஒரு நம்பிக்கையான ஆள் தேவைப் பட்டது.

"கஷ்டப்பட்டு வேலை செய்யுறன் ரீச்சர். இரவு பதினொரு மணிக்குப் படுத்து காலமை நாலு மணிக்கு எழும்புறன். பிள்ளயளின்ர உடுப்பு, என்ர உடுப்பு தோய்க்க வேணும், மூண்டு நேரமும் சமைக்க வேணும், வீடு வளவு கூட்ட வேணும், பிள்ளயள ஏத்தி இறக்க வேணும். பள்ளிக் கூடத்துக்கு போக வேணும், அங்கயும் முப்பது, முப்பத்தைஞ்சு பாடவேளை படிப்பிக்க வேணும், அதிபர் சொல்லுற வேலயள செய்ய வேணும், மேலதிகாரிகளுக்கு பதில் சொல்ல வேணும். ஒருத்தரும் புரிஞ்சு கொள்ளேல ரீச்சர்"

"யார் உன்னப் புரிஞ்சு கொள்ளேல. சரியாச் சொல்லு பாப்பம்"

"கணவன், பிள்ளைகள், மாணவர்கள், அதிபர், மேலதிகாரிகள்"

சரி. நீ சொன்ன வேலைகளில எந்த வேலை உன்ர கடமைக்கு அல்லது கடமைப் பட்டியலுக்குப் புறம்பானது?"

சௌமியா மௌனமாய் இருந்தாள்.

"வேலைக்குப் போகவெண்டு நாங்கள்தான் வெளிக்கிட்டனாங்கள். ஒருத்தரும் கட்டாயப்படுத்தேல. சமைக்கத்தான் வேணும். சாப்பிடத்தான் வேணும். உடுப்புகளைத் தோய்க்கத்தான் வேணும். கடமையளைச் செய்யத்தான் வேணும்"

"அது சரி ரீச்சர். ஆம்பிளயளும் அதைக் கொஞ்சம் புரிஞ்சு கொண்டு நடக்கவெல்லோ வேணும். பொம்பிளயளெண்டா வேலை செய்யுற மெசினெண்டு நினைக்கக் கூடாதெல்லே"

"சௌமியா நீர் இளம் பிள்ளை. கெட்டிக்காரி. அஞ்சு வருசம் முந்தி நீர் இங்கு வசயளெகநச இல வந்து பள்ளிக் கூடத்தில சாதிச்சுக் காட்டினனீர். ஒரு நாளும் யு வராத பள்ளிக் கூடத்தில விஞ்ஞானத்துக்கு மூண்டு யு வரச் செய்தனீர். பேசென்ரேஜை 67 வீதத்துக்கு இற்கு உயர்தினனீர்" சௌமியாவிற்கு ஆச்சரியமாக இருந்தது. "இத்தனை விபரம் இவருக்கு எப்படித் தெரிந்தது?" என்ற ஆச்சரியத்துடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள். "மற்றவயளில பிழை பிடிக்க முயற்சி செய்யாமல் மற்றவை பிழை பிடிக்க முடியாமல் எப்பிடி வேலை செய்யுறதெண்டு ஆறுதலா யோசியும்"

"நான் என்ன செய்ய வேணும் ரீச்சர்?"

"நீர் என்ன செய்ய வேணும் எண்டு நான் சொல்லக் கூடாது. நீர்தான் யோசிச்சுக் கண்டு பிடிக்க வேணும்"

"முயற்சி செய்யுறன் ரீச்சர்"

◈◈◈ ◈◈◈

அன்றிரவு சௌமியாவால் உறங்க முடியவில்லை. திடீரென்று வந்த அந்த வயதான ஆசிரியை யார்? என்னில்தான் தவறு இருப்பது போலச் சொல்லி விட்டாரே! உண்மையில் தவறு என்னிலும் இருக்கிறதா? அல்லது.. அல்லது என்னில்தான் தவறா? நான் எப்படி என்னை மாற்றிக் கொள்ள வேண்டும்? "இரண்டு லட்சம் ரீச்சர் இலங்கையில இருக்கினம். ஆனா நீதான் எனக்கு ஒரேயொரு மனிசி"

"எங்கட அம்மா நீங்கள்தான்"

"குழப்படி செய்தாத்தான் பிள்ளையள். இல்லாட்டி "அப்நோர்மல்?"

"அதுக்காகத்தான் ரீச்சர்ஸ் அரசாங்கத்தால நியமிக்கப்பட்டிருக்கிறாங்கள். இல்லாட்டிப் பிள்ளயள தானாப் படியுங்கோ எண்டு விட்டிருக்கலாம் தானே!"

"விஞ்ஞான ரீச்சர்தான் விஞ்ஞான ஆய்வு கூடத்தையும் விஞ்ஞானக் கழகத்தையும் பொறுப்பெடுக்க வேணும். சுகாதார ரீச்சர் இல்லாத படியாத்தான் உங்களைக் கேக்கிறன்"

"பேர்சன்டேஜ் தொடர்ந்து உயர வேணும் ரீச்சர்" அனைத்தும் சரிதானே! யாரும் தப்பாகச் சொல்லவில்லையே! சௌமியா குழப்பிக் குழம்பி ஒரு முடிவுக்கு வந்தவளாக உறங்கிப் போனாள்.

மறுநாள் தொடக்கம் சௌமியாவில் பல மாற்றங்கள் வெளிப்படையாகத் தெரியத் தொடங்கின. கணவனின் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றும் மனைவியாக, பிள்ளைகளுக்கு அன்பான அம்மாவாக, மாணவர்களால் விரும்பப்படும் ஆசிரியையாக, வேலைகளைப் பொறுப்பெடுத்துச் செய்யும் ஆசிரியையாக, பாடசாலைப் பெறுபேற்றை கணிசமாக உயர்த்திக் காட்டிய ஒரு ஆசிரியையாக எப்படி அவளால் மாற முடிந்தது? திட்டமிடல்!

ஆம். சௌமியா திட்டமிட்டு செயற்படத் தொடங்கி விட்டாள். அடுத்த நாள் சமையலுக்குத் தேவையான ஆயத்தங்களை முதல் நாளே செய்து வைத்து விடுகிறாள். குளிர்சாதனப் பெட்டி மாத்திரமன்றி அவளது கணவனும் அதற்கு உறுதுணையாக இருக்கிறான். பிள்ளைகளின் உடுப்புகளை வார இறுதி வரை காத்திருக்காமல் ஒன்றுவிட்ட நாளே தோய்த்து விடுகிறாள். புதிதாக வாங்கிய சலவை இயந்திரமும் அவ்வப்போது கை கொடுக்கிறது. வீடு, வளவு கூட்டும் வேலையைப் பகிர்ந்தளித்து விட்டாள். ஒருநாள் தான், இன்னொரு நாள் கணவன், மற்றைய நாள் மகன். அடுத்தநாள் மகள்.

வகுப்பறையில் படிப்பிக்க வேண்டிய விடயங்களை முன்பே தயார்படுத்திக் கொள்கிறாள். மாணவர்களுக்கு அறிவை மாத்திரமன்றி பண்பையும் போதிக்கின்றாள்.

நேரம் மீதமாக பாடசாலையில் பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்கிறாள். அதிபரிடம் நல்ல பெயர் சக ஆசிரியர்களிடம் நல்ல பெயர் மேலதிகாரிகளிடம் நல்ல பெயர்.

அவள் சாதித்து விட்டாள். மெழுகுவர்த்தியாக தன்னை எரித்து உலகுக்கு ஒளி கொடுக்கத் தொடங்கி விட்டாள். அந்த வெளிச்சத்தில் அவளது பிள்ளைகள் மாத்திரமன்றி மாணவர்களும் பிரகாசிக்கப் போகிறார்கள். எதிர்காலம் அவளுக்கு இன்னும் பல வெற்றிகளைத் தரப்போகின்றது.

*(யாவும் கற்பனையல்ல!)*

# ஊர்ப்புதினம்

○ இராகவன்

பாகம் 2

பெரியாம்பியண்ணை மறுநாள் 'ஷாலுடீன் ஹெலியில வந்து இறங்கப்போறானே ? என்ன செய்யப்போறன்?' எண்டு யோசிச்சுக் கொண்டிருக்கேக்குள்ளதான் இன்னொரு பெரிய அசம்பாவிதம் நடந்திச்சுது. அண்டைக்கிரவுதான் நெல்லியடி சென்ரல் ஸ்கூல் ஆமிக்காம்பை மில்லர் குறூப் அற்றாக் பண்ணிச்சுது, அற்றாக் பண்ணின நேரம்தான் ஆமிக்காறர் இரவுச்சாப்பாட்டுக்கு ரெடியாயிருந்தவங்கள். அப்ப அவங்கட சாப்பாட்டில சீஸ் முக்கியமாயிருக்கும். அதுவொரு உள்ளங்கையளவு நீலக்கலர் ரின்னிலவரும், அதோடகிறீம் கிறோக்கர் பிஸ்கற்றுமிருக்கும் . அற்றாக் நடந்த நேரம் ஆமிக்காறரெல்லாம் மேசையில போயிருந்து சீஸ் ரின்னுகளை உடைச்சிருக்கிறாங்கள். உடைச்சநிலையிலையே ஆக்களின்ர கதை முடிஞ்சுதெண்டு பிறகுதகவல் கிடைச்சுது.

இந்தத் தாக்குதல் நடக்கேக்குள்ள நான் அம்மா, நவண்ணா, அவன்ர தாய் நாலுபேரும் எங்கட வீட்டிலதான் நிண்டனாங்கள். அது வளர்பிறைக் காலம், இராச்சாப்பாட்ட வேளைக்கே முடிச்சிட்டம். நானும்நவண்ணாவும்வீட்டுவிறாந்தயிலயிருந்த கட்டில்லயிருந்து கதைச்சுக்கொண்டிருந்தம் நவண்ணா ஒரு நல்ல கதைசொல்லி. நயமாக் கதைசொல்லுவான். அவனிட்டகனக்க புத்தகங்களிருந்ததெண்டு ஏற்கனவே ஊர்ப்புதினத்தில் சொல்லியிருக்கிறன். அவ்வளவு புத்தகங்களையும் அவன் கரைச்சுக்குடிச்சவன். சைவ சமயப் பாடத்தில அவனொரு புலியெண்டு எல்லோரும் சொல்லுவினம். க.சி. குலரத்தினம் எண்டொரு சைவ சித்தாந்தப் பேரறிஞர் யாழ்ப்பாணத்திலயிருந்தவர். சின்னப்பொடியளுக்கும் விளங்கக் கூடிய எளிமையான தமிழில இந்து நாகரிகம், இந்து சமயம் தொடர்பாகக் கனக்கப் புத்தகங்கள் அவர் எழுதியிருக்கிறார். அவரை எனக்கு அறிமுகப்படுத்தியவனே நவண்ணாதான். அவரைப் பற்றியும் நவண்ணா எனக்கு நிறையச்சொல்லி இருக்கிறான்.

59


அப்பிடித்தான் அண்டிரவும் தீவிரமாய் ஏதோ வொண்டைப்பற்றிச் சீரியஸாக எனக்குச் சொல்லிக்கொண்டிருந்தான். அம்மாவும் அவன்ர தாய்க்காரியும் வீட்டுவாசல்படியிலயிருந்து தங்களுக்குள்ள ஏதோ தீவிரமா டிஸ்கஸ் பண்ணிக் கொண்டிருந்தினம். அப்ப நேரம் ஒரு ஏழரையிருக்கும். எங்க வீட்டுக்கு வடமேற்குத் திசையில "ஜியும்" எண்டு செவிப்பறையெல்லாம் அதிருற மாதிரியொரு சத்தம் கேட்டிச்சுது. வீட்டுமுத்தத்து மாமரத்திலயிருந்த குருவியளெல்லாம் நிலத்தில விழுந்து அவலக்குரல் எழுப்பிக்கொண்டு பறந்திச்சுது. வெளியில் வந்துபாத்தா வடமேற்கு வானமெல்லாம் செவ்வானமாத் தெரிஞ்சது. ஒருபத்து நிமிஷம் மயான அமைதி. ஆமிக்காறரின்ரை இராச் சாப்பாட்டு நேரத்த 'ஏய்ம்'பண்ணி அற்றாக் நடந்ததால எதிர்த்தாக்குதல் எதுவும் நடக்கேலை. பிறகு உயிர் தப்பின ஆமிக்காறர் தகவல் குடுத்தாப்போலதான் ஹெலியொண்டு கமறிக் கொண்டு வந்திச்சுது. அதைச் ஷாலுடீன்தான் ஓடிக்கொண்டு வந்தானோ ஆருக்குத் தெரியும்? ஹெலி வரேக்குள்ளயே சுட்டுக்கொண்டு தான் வந்திச்சுது.

நாங்கள் நாலுபேரும் சின்னறைக்குள்ள ஓடிப் போய் மெத்தைக் கட்டிலுக்குக் கீழ புகுந்திட்டம். நவண்ணா எனக்குப் பக்கத்தில தான் முகங்குப்பறக் கிடந்தான். நான் ஆளத்தொட்டுப்பாத்தன். மேல் நடுங்கிக் கொண்டிருந்தது. நல்ல காய்ச்சலுமடிக்கத்தொடங்கிட்டுது. எனக்கு ஒண்டுமில்லை. நோர்மலாத்தானிருந்தன். 'நெல்லியடிப்பக்கம் ஏதோ மோசமா நடந்திருக்குது' எண்டு அம்மா சொன்னா.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய வெளிவிவகார அமைச்சின் முழுமையான அனுசரணையுடன் ஐரெக் திட்டத்தில் ஹைதராபாத்தில் உள்ள தெலுங்கான அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் டொக்டர் எம்.சி.ஆர். எச்.ஆர்.டி. நிறுவனத்தில் இலங்கை ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்களுக்கான ஊடக முகாமைத்துவம் தொடர்பான இருவார காலப் பயிற்சி 24.06.2024 தொடக்கம் 07.07.204 வரை இடம்பெற்றது. இந்தப் பயிற்சியில் இலங்கையிலிருந்து 29பேர் பங்குபற்றினோம். அது தொடர்பான தனது அனுபவங்களை உதயன் சஞ்சீவி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார் கட்டுரையாளர்.


சாமினார்

# அயல் தேசத்தில் சில நாள்கள்... 4

○ டிலீப் அமுதன்

## மூன்றாம் நாள்

அன்றைய தினம் காலை பேராசிரியர் ஸ்ரீவன்சன், ஊடகங்களில் அரசாங்கங்களின் முதலீடு தொடர்பாகவும், ஊடகவியலாளர்கள் அன்பளிப்புகள், பணத்தைப் பெற்றுக்கொள்வதால் எழும் சிக்கல் நிலைமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார். தேநீர் இடைவேளையைத் தொடர்ந்து 'டேட்டா ஜேர்னலிசம்' தரவு ஊடகத்துறை தொடர்பாக 'த இந்து' நாளிதழின் மூத்த இணையாசிரியரான சென்னையைச் சேர்ந்த சிறினிவாசன் ரமணி பயிற்சிகளை வழங்கினார். 'த இந்து' நாளிதழில் தான் எழுதிய கட்டுரைகளை அடிப்படையாக வைத்து அவரது விளக்கங்கள் அமைந்திருந்தன. குறிப்பாக இந்தியாவின் காஷ்மீருக்கு வழங்கப்பட்டிருந்த சிறப்பு அந்தஸ்தை பா.ஜ.க. அரசாங்கம் நீக்கியது. அதை நீக்கும்போது உள்துறை அமைச்சராக இருந்த அமித்ஷா, காஷ்மீரை கல்வி முதலான சகல துறைகளிலும் பின் தங்கி இருப்பதாலேயே இந்தச் சிறப்பு அந்தஸ்தை நீக்குகின்றோம் என்று கூறியிருந்தார்.

அவரது கூற்றை எடுத்து, இந்தியாவின் ஒவ்வொரு மாநிலங்களும் அந்தத் துறைகளில் எந்த இடத்தில் இருக்கின்றன, காஷ்மீர் எந்த இடத்தில் இருக்கின்றது என்பதை தரவு ஊடகத்துறை ஊடாக பத்திரிகையில் வெளிப்படுத்தியதை காண்பித்தார். இதன் மூலம் அமித்ஷா தெரிவித்த கருத்து தவறானது என்பதை நேரடியாகச் சொல்லாமல் தரவுகள் மூலம் நிரூபித்திருந்தார்கள். தரவு ஊடகத்துறையின் பலம் அதுவே என்று கூறினார்.

அவரது பயிற்சி வகுப்பு நிறைவடைந்த பின்னர் எங்கள் 4 பேருடன் தமிழ்மொழியில் சந்தோசமாக உரையாடினார். யாழ்ப்பாணத்திலுள்ள பொருளியல் ஆய்வாளர் அகிலன் கதிர்காமர் தனது நண்பர் என்றும் அவருடன் தொடர்பில் இருப்பதாகவும் சிறினிவாசன் ரமணி குறிப்பிட்டார்.


சௌமஹலா பலஸிலுள்ள மன்னர் காலத்து கத்திகள், வாள்கள்

மதிய உணவை விரைவாக முடித்துக் கொண்டு எமது முதலாவது வெளிக்களப் பயணத்துக்காக பேருந்தில் புறப்பட்டோம்.

ஹைதராபாத் நகரத்தை பகல் வேளையில் காணும் வாய்ப்பு முதன்முதலில் கிடைத்தது. பெரும்பாலான கட்டடங்களின் மேல் 'சோலர் பனல்' இருந்தது. அது மாத்திரமல்லாது பிரதான வீதியின் அருகில், துவிச்சக்கரவண்டி அல்லது முச்சக்கர வண்டியில் செல்பவர்களுக்கான பாதையின் மேலே கூரையாகவும் 'சோலர் பனல்' அமைக்கப்பட்டிருந்தது. அங்கு மின்தடை என்பதை நாங்கள் நின்றிருந்த நாள்களில் உணரவில்லை. சூரியமின்படலம் ஊடான மின்சாரப் பாவனை அங்கு பெருமளவு ஊக்குவிக்கப்பட்டிருக்கின்றது என்பதை பல்வேறு இடங்களிலும் பரந்த அளவில் பொருத்தப்பட்டுள்ள சூரியமின்படலத்தின் ஊடாக உணர முடிந்தது.

நெருக்கமான மாடிக் கட்டடங்கள் என்று தலைநகர் கொழும்பைப்போல பல மடங்கு அடுக்குமாடிக் குடியிருப்புகளுடன் ஹைதரபாத் நகரம் காணப்பட்டாலும் அந்த இடத்தில் பசுமைக்கு குறைவில்லை. இங்கே சூழல் நேயம் என்ற அடிப்படையில் கட்டடங்களில் பூந்தொட்டிகளில் மரங்களை வளர்க்கின்றார்கள். ஆனால் அங்கு கட்டடங்களில் மரங்களைக் காணவில்லை. ஆனால் பிரதான வீதிகளின் நடுவேயும், கட்டடங்கள் இல்லாத இடங்களில் எல்லாமும் மரங்களால் நிரம்பியிருக்கின்றன. ஒட்டுமொத்த நகரத்தின் சூழல் சமநிலையும் பேணப்படுகின்றது. மேலிருந்து நகரத்தை நோக்கினால் பச்சைப்பசேலுக்கு குறைவிருக்காது. இவ்வளவு கட்டடங்களுக்கு நடுவேயும் மரங்கள் வளர்க்கப்பட்டிருப்பது சிறப்பு. இன்னொரு வகையில் பார்க்கப்போனால், மலைக்குன்றுகளில் இயற்கையாக வளர்ந்த காடுகளை அழித்துத்தான் கட்டடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் காடுகளை முழுமையாக அவர்கள் அழிக்கவில்லை. கட்டடங்களுக்கு தேவையான இடங்கள்போக எஞ்சிய இடங்களில் காடுகளை அப்படியே விட்டிருக்கின்றார்கள்.

நாங்கள் தங்கியிருந்த எம்.சி.ஆர். எச்.ஆர்.டி. நிறுவனத்திலும் 36 ஏக்கரில் அரைவாசி நிலப்பரப்பு இன்னமும் காடாகவே இருந்தது. நாங்கள் காலையில் யோகாவுக்குச் செல்லும் பாதையின் ஒரு மருங்கில் காடுகள்தான் உள்ளன. அங்கிருந்து மயில்கள் எழுப்பும் ஓசை இனிமையாக கேட்கும்.

வாகன நெரிசல்களுக்கும், இரைச்சல்களுக்கும் குறைவில்லை. வீதிச் சமிக்ஞைகள் இருந்தாலும் பெரும்பாலானோர் அவற்றை மதிப்பதாகத் தெரியவில்லை. மோட்டார் சைக்கிள்களில் ஹெல்மட் அணியாமல் சாதாரணமாக நடமாடுகின்றனர். ஒரு மோட்டார் சைக்கிளில் 'ரிபிள்ஸ்' கூடச் செல்கின்றனர். போக்குவரத்து விதி மீறல் என்பது அங்கு சர்வசாதாரணம்.

ஹைதராபாத்தின் பல இடங்களிலும், நாம் தங்கியிருந்த நிறுவனத்தினுள்ளும் பல இடங்களில் வைக்கப்பட்டுள்ள உருவங்கள் அதாவது சிலைகள் எல்லாம் பழைய இரும்புக் கம்பிகளைப் பயன்படுத்தியே செய்யப்பட்டிருந்தன. எந்தஇடத்திலும் சிமெந்திலோ அல்லது பிளாஸ்ரிக் வேறு பொருள்களைப் பயன்படுத்தி செய்ததைக் காணவில்லை.

எங்களது முதலாவது வெளியகப் பயணம் என்பதால், ஹைதராபாத்தின் அழகை கூடுதலாகவே ரசித்தோம். நாங்கள் பி.ப. 3 மணிக்கு எமது நிறுவனத்திலிருந்து புறப்பட்டு பி.ப. 5 மணிக்கு ஹைதரபாத்தின் பழமையான நகரத்தை வந்தடைந்தோம்.

அங்கு முதலில் சௌமஹலாபலஸை சென்றோம்.

தெலுங்கானவை முஸ்லிம் மன்னர்கள் ஆட்சி செய்திருந்தார்கள். அவர்களில் நிஷாம் யங் காலத்தில் இது 19ஆம் நூற்றாண்டில் கட்டி முடிக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் சென்று பார்வையிடமுடியும். மு.ப. 10 மணியிலிருந்து பி.ப. 5 மணி வரையில் திறந்திருப்பார்கள்.

பழைய காலத்து அரண்மனையாக இருந்தது. அரண்மனையினுள்ளே மன்னர்கள் பயன்படுத்திய வாள்கள், துப்பாக்கிகள் என்பனவும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அவர்களின் காலத்தில் பயன்படுத்தப்பட்ட பெட்டகங்கள் இப்போதும் உள்ளன. அவற்றை இன்றும் திறக்க முடியாது. அவை பூட்டப்பட்டே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. காலத்துக்கு காலம் அவர்கள் பயன்படுத்திய கார்கள், குதிரை வண்டில்கள் என்பன இருந்தன. விவேக் மன்னராக ஒரு படத்தில் குதிரை வண்டிலில் வருவார். அதைப்போலவும் அங்கு சில வண்டில்கள் இருந்தன. அங்கு ஒரு பழைய கட்டடத்தினுள்ளே சென்றோம். நிலம் பளிங்கு போன்றிருந்தது. அங்கிருந்த சிற்ப வேலைப்பாடுகள் மிக அழகாகவும், ஆச்சரியமாகவும் இருந்தன. அத்துடன் அந்த மண்டபத்தினுள்ளே முன்னர் அரசவையாக இயங்கிய இடத்தில், மன்னனின் சமாதி வைக்கப்பட்டிருக்கின்றது.

அதைப்பார்வையிட்டு முடித்து விட்டு முக்கியமான இடத்துக்குச் சென்றோம். அதுதான் சாமினார். ஹைதராபாத்தின் அடையாளமாகச் சொல்லப்படுகின்றது. யாழ்ப்பாணத்தின் அடையாளமாக எப்படி நல்லூர் முருகன் கோவிலைச் சொல்கின்றார்களோ அதைப்போல தெலுங்கானா குறிப்பாக ஹைதராபாத்தின் அடையாளமாக சாமினாரைச் சொல்கின்றார்கள்.


சாமினார் வீதியிலுள்ள நடைபாதைக் கடைகள்

நான்கு உயரமான தூண்கள். அவற்றை இணைத்து நுழைவாயில் வரவேற்பு மாதிரி அமைத்திருக்கின்றார்கள். அதை எந்தப் பக்கத்துக்கு வீதியிலிருந்து பார்த்தாலும் ஒரே மாதிரியாகவே தெரியும். அதைச் சுற்றிக் கடைகள். நல்லூர்த் திருவிழாக் காலத்தில் குறிப்பாக தேர்த் திருவிழாவில் பின்வீதிகளில் எப்படி கடைகளும், நடமாடும் வியாபாரம் செய்பவர்களும் இருப்பார்களோ அதைப்போல அங்கும் நிறையக் கடைகள். சாமினார் 1591 ஆம் ஆண்டு சுல்தான் முகமட் குலி குராப் ஷாவினால் கட்டப்பட்டது. இது இந்தோ - இஸ்லாமிய முறைமையில் கட்டப்பட்டது. இதன் உயரம் 49 மீற்றர். அதில் ஏறி சுற்றிப் பார்வையிட்டால், அந்த நகரத்தின் அழகைப் பார்க்கலாம். துரதிர்ஷ்டவசமாக நாங்கள் அங்கு செல்லும்போது பார்வையிடும் நேரம் முடிந்து விட்டதால், ஏற முடியவில்லை.

(பயணம் தொடரும்)


சௌமஹலா பலஸ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நினைவுகளில் தமிழறிஞர்: 11

# க. உமாமகேசுவரம்பிள்ளை

## (05.05.1934 - 20.04.2024)

**நீரிலே தெரியும் நார்சிசஸின் முக அழகும் எழுத்திலே தோன்றும் உமாமகேசுவரனது மொழி அழகும்**




○ பா.துவாரகன்

### விலைமதிப்பற்ற பொக்கிஷம் உள்ள இடம்

கடந்த அத்தியாயத்தில் கதிர்காம யாத்திரையின் ஓர் அனுபவக் குறிப்புடன் இரசவாதி என்ற நாவலில் வரும் ஒரு விடயத்தைப் பற்றியும் எழுதினேன். இரசவாதி (O Alquimista The Alchemsit) என்ற நாவல் வாசகர்களின் வாழ்க்கையையே மாற்றக்கூடிய புத்தகம். படிக்குந்தோறும் பரவசமூட்டும் இந்நாவலை பாலோ கொயலா (Paulo Coelho) என்ற பிரேசில் நாட்டு எழுத்தாளர் போர்த்துக்கேய மொழியில் எழுதி 1988 இல் வெளியிட்டார்.

தனது கனவைப் பின்தொடரும் சந்தியாகோ என்ற ஆடு மேய்க்கும் சிறுவன், தான் கனவில் கண்ட புதையலைத் தேடி ஸ்பெயினிலிருந்து புறப்பட்டு எகிப்திலுள்ள பாலைவனங்களூடாகப் பயணம் செய்யும்போது வழியிலே இரசவாதியைச் சந்திக்கிறான். பொக்கிஷத்தைத் தேடிப் புறப்படும் சிறுவனது சவால்கள் நிறைந்த பயணத்தில் எதிர்ப்படும் போர்கள், திகிலூட்டும் அனுபவங்கள், ஆபத்துகள் சூழ்ந்தபோது உதவ வரும் பிரபஞ்சத்தின் வழிகாட்டிகள் வாசிப்பவர்களை வசப்படுத்தும்.

வாழ்விலே நாம் தேடிச் செல்லும் பொக்கிஷம் எங்கிருக்கிறது? சந்தியாகோ தனது ஆபத்து நிறைந்த பயண முடிவில் தான் கனவில் கண்ட புதையலை எகிப்திய பிரமிட்டுகளிடையே காண்கின்றபோது அவனால் மகிழ்ச்சியடைய முடியவில்லை. வேறுபலரும் அந்தப் புதையலைத் தேடி அவ்விடம் வந்தனர். அவர்கள் சந்தியாகோவைக் கொன்று அந்தப் புதையலை எடுத்துச் செல்ல முற்படுகிறார்கள்; சந்தியாகோ இறந்துவிட்டதாக எண்ணி, அவனைக் குற்றுயிராக விட்டுச் செல்கிறார்கள்.

சந்தியாகோ வீடு திரும்புகின்றான். வீட்டுக்கு அருகே உள்ள தேவாலயத்தின் மரத்தடியில் அவன் தேடிச் சென்ற புதையல் இருப்பதைக் காண்கின்றான்.

பாலோ கொயலா உண்மையான பொக்கிஷம் எங்கள் இதயத்துள் இருப்பதை உணர்த்துகிறார்! நீங்கள் ஒன்றை உண்மையாகவே விரும்பினால் அந்த இலட்சியத்தை அடைய இந்தப் பிரபஞ்சமே உங்களுக்கு வழிகாட்டும் என்ற செய்தியை வாசகரிடத்தில் இந்நாவலூடாகப் பதியச் செய்கின்றார்.

"உன்னுடைய இதயம் எங்கே இருக்கிறதோ அங்கேதான் உன் புதையலும் இருக்கும்" என்கிறார் இரசவாதி

இந்நூல் இன்றுவரை 83 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 8.5 கோடி பிரதிகள் விற்பனையாகியுள்ளன. தமிழில் இரு மொழிபெயர்ப்புகள் வெளிவந்துள்ளன. சின்னத்தம்பி முருகேசனின் மொழிபெயர்ப்பை 2006 இல் காலச்சுவடு பதிப்பகம் வெளியிட்டது. நாகலட்சுமி சண்முகத்தின் இரண்டாவது தமிழ்மொழி பெயர்ப்பை மஞ்சுள் பதிப்பகம் 2018 இல் வெளியிட்டது. நாகலட்சுமி சண்முகத்தின் மொழிபெயர்ப்பு 2024 இல் 8 ஆவது தடவையாக அச்சாகியுள்ளது.

### பிரபஞ்சத்தின் கண்களில் தன்னையே காணுதல்

நார்சிசஸ் பற்றிய அற்புதமான கதை ஒன்று இரசவாதி என்ற நாவலின் 2 ஆவது தமிழ்மொழிபெயர்ப்பினுள் நுழையுமுன் வருகின்றது. நார்சிசஸ் (Narcissus) என்ற சொல் நார்க்கிசோஸ் (Narkissos) என்ற கிரேக்க மொழிச் சொல்லில் இருந்து தோன்றியது. நார்சிசஸ் என்ற சொல் நீரிலே பிரதிபலிக்கும் தன் அழகை ஆராதிக்கும் இளைஞனைக் குறிக்கிறது. நார்சிசஸ் கிரேக்க புராணக் கதையுடன் தொடர்புடைய ஓர் அழகிய இளைஞன்.


நார்சிசஸ் தினமும் மனிதர்கள் சஞ்சரிக்காத ஒரு வனத்தின் ஏரிக்கரைக்குச் சென்று, மண்டியிட்டு இருந்து நீரிலே பிரதி பலிக்கும் தன்னுடைய அழகைப் பாரத்து இரசித்து வந்தான். இவ்வாறு தன்னழகை இரசித்து வரும்போது ஒருநாள் அந்த ஏரிக்குள் விழுந்து இறந்து போகின்றான். நார்சிசஸ் விழுந்து இறந்த இடத்தில் ஒரு பூ மலர்கிறது. அந்தப் பூ நார்சிசஸ் என்று அழைக்கப்படுகிறது.

நார்சிசஸ் இறந்த பிறகு அந்த ஏரி என்னும் பெண் அழுத கண்ணீரால் அந் நீரேரி உவராகிறது.

நார்சிசஸின் அழகால் கவரப்பட்ட வனதேவதையும் நார்சிசஸ் இறந்த ஏரிக்கரையை வந்தடைகிறது. வனதேவதை அந்த ஏரியைப் பார்த்து "ஏன் அழுகிறாய்" என்று கேட்கிறது. நார்சிசஸ் இறந்த துக்கத்தால் அழுவதாக அந்த ஏரி சொன்னது. அதற்கு அந்த வனதேவதை ஏரியைப் பார்த்துச் சொன்னது: "நான் அவனது அழகிலே மயங்கி காட்டிலே நார்சிசஸை பின்தொடர்ந்த போதிலும் அருகேயிருந்து அவன் அழகைக் காணும் பாக்கியம் பெறவில்லை. நீ மிகவும் கொடுத்து வைத்தவள். தினமும் உன் கரை அருகிலே மண்டியிட்டு இருந்து பார்க்கும் நார்சிசஸின் அழகை அருகேயிருந்து பார்க்கும் பாக்கியம் பெற்றவள்."

இதைக் கேட்ட அந்த ஏரி, "நான் நார்சிசஸுக்காக அழுகிறேன், ஆனால் அவன் அழகாக இருந்ததை நான் ஒருபோதும் கவனித்ததே இல்லை. அவன் என்னுடைய கரையின்மீது மண்டியிட்டு அமர்ந்த ஒவ்வொரு முறையும், அவனுடைய கண்களின் ஆழங்களில் என் சொந்த அழகின் பிரதிபலிப்பைத்தான் நான் கண்டேன். இப்போது அது சாத்தியமில்லை என்பதால்தான் நான் அழுகிறேன்" என்று கூறியது.

உமாமகேசுவரன் தன்னை ஒரு நார்சிசஸ் என்று சொல்வார். தனது எழுத்துகளையே திரும்பத் திரும்பப் படித்து இரசிக்கும்


49.01.25
உமாமகேசுவரன் நாட்குறிப்பு
Narcissus (Gk Narkissos) youth who fell in love with his reflection in water
narcissism (Psych) tendency to self-worship, excessive or erotic interest in one's own personal features

உமாமகேசுவரன், தனது இவ்வியல்பை எண்ணி நார்சிசஸுடன் தன்னை ஒப்பிடுவது வழமை.

### உமாமகேசுவரனது கட்டுரைகளில் பிரதிபலிக்கும் அழகு

பண்டிதர் க. உமாமகேசுவரன் ஊரெழு பர்வதவர்தனி அம்மன் ஆலய கும்பாபிஷேக மலருக்கு எழுதிய கட்டுரையின் தலைப்பு 'தங்குமோ'.

குமரகுருபர சுவாமிகள் வெண்டாமரையில் வீற்றிருக்கும் சரஸ்வதியின் 'செய்ய பொற்பாதங்கள்' தனது நெஞ்சம் என்ற தாமரைத் தடாகத்தில் மலராதோ? என்று ஏங்குவதை உமாமகேசுவரன், 'தங்குமோ' என்ற தனது கட்டுரையில் பர்வதவர்தனி என்ற அம்பிகைக்குப் பொருத்தி, அவளது அருளுக்காக ஏங்குகிறார்.

சிவனது பாகம் பிரியா நாயகியாகிய பர்வதவர்தனி மீது பத்தி மேலிட உமாமகேசுவரன் கவின்மிகு சொற்களால் செதுக்கிய இக்கட்டுரையில் பிரதிபலிப்பது உமாமகேசுவரனது தமிழ்நடையின் வண்ணமோ? அல்லது ஆரியம் போல் வழக்கொழிந்து சிதையாத தமிழணங்கின் சீர் இளமைத் திறமோ? அல்லது தண்டமிழின் மிகுநேயனான முருகேசனது வனப்போ ?......

உமாமகேசுரன் எழுதிய கட்டுரை(முழுமையாக) பின்வருமாறு:

**தங்குமோ?**

சக்தி உபாசகனான பாரதியைத் தாங்கொணா ஏக்கமொன்று பிடித்தாட்டுகிறது. அவன் தன் ஏக்கத்தைப் பராசக்தியின் நாமரூப பேதங்களில் ஒன்றாய் விளங்கும் கலைமகள் பாதங்களிலே சமர்ப்பிக்கிறான். 'அணுக்கள் சுழல்கின்றன. கோள்களும் சுழல்கின்றன. இப்படி இடையீடின்றி ஒரே நிகழ்வினில் ஊன்றி நிலைப்பது உலகில் உள்ள பொருள்களின் இயற்கையாயின், எனதுள்ளமும் சதா நினது அருளிலே சலியாது திளைக்கவேண்டுமே; திளைக்கவில்லையே; திளைக்கலாகாதா?'

***இடையின்றி அணுக்களெலாம் சுழலுமென இயல்நூலார் இசைத்தல் கேட்டோம்
இடையின்றிக் கதிர்களெலாம் சூழலுமென வானூலார் இயம்பு கின்றார்
இடையின்றித் தொழில்புரிதல் உலகினிடைப் பொருட்கெல்லாம் இயற்கை யாயின்
இடையின்றிக் கலைமகளே நினதருளில் எனதுள்ளம் இயங்கொ ணாதோ***

சகலகலாவல்லியைத் துதிக்க ஆரம்பிக்கிறார் குமரகுருபர சுவாமிகள். எடுத்த எடுப்பிலேயே தம்முடைய ஏக்கமொன்றை அவரும் புலப்படுத்திவிடுகிறார். 'வெள்ளைத் தாமரை ஒன்றுக்கு மட்டுந்தானா, சகலகலாவல்லி! நின் திருவடிகளைத் தாங்கும் தகுதியும் பேறும். ஏன் என் வெள்ளை உள்ளத் தாமரைக்கு அதற்கான தகுதி சிறிதும் இல்லையா?'

***வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ***

என்றிப்படிச் சகலகலாவல்லி மாலையின் முதற் பாடலிலேயே தமது ஏக்கத்தைப் புலப்படுத்திய சுவாமிகள் தொடர்ந்து ஐந்தாவது பாடலிலும் அதே ஏக்கத்தை வெளியிடுகிறார்.

'செம்பஞ்சுக் குழம்பு தீட்டி அழகு மிளிரும் நின் பாதங்கள் பங்கேரும்(தாமரை) என்றால் குளம் வேண்டுமே அவை அலர்வதற்கு. என் நெஞ்சாகிய தடம்(குளம்) தான் இருக்கிறதே. ஏனிவை அங்கே அலரவில்லை?'

***பஞ்சப்பி தந்தரு செய்யபொற் பாதபுங் கேருகமென்
[illegible]***

இறைவியினுடைய திருவடிகளைச் சதா தியானிக்க முடியவில்லையே - சிந்தனையை அடக்கிச் சும்மா இருக்கமுடியவில்லையே - என்பதுதான் இவர்களின் தீராத ஏக்கம். கலைமடந்தையின் திருப்பாதங்கள் மென்மையானவை. தேன்வண்டுகள் சூழ்ந்து இன்னிசைபாடும் அன்றலர்ந்த மென்மலர் மீது பட்டாலே அவை கன்றிச் சிவந்துவிடும். அங்ஙனமானால் 'பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்' இயல்பினர் மனத்தே - மெய்யேயிலா வன் மனத்தே - அவை வந்து தங்குமோ?' என்கிறார் இடைப் புகுந்துவிட்ட பெயர்கூற விரும்பாத அருளாளர் ஒருவர்.

**என்னை உடையாள் கலைமடந்தை எவ்வுயிர்க்கும்
அன்னை உடைய அடித்தளிர்கள் இன்னளிசூழ்
மென்மலர்க்கே கன்றும் எனஉரைப்பர் மெய்யிலா
வன்மனத்தே தங்குமோ வந்து.**

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருகித் தூய்மையுறாத வரை இறை சாந்நித்யம் இதயத்திலேற்பட வாய்ப்பேயில்லை என்பதையே இந்த அருளாளரும் வலியுறுத்துகிறார். அப்படியானால் நெஞ்சக் கனகல்லை நெகிழ்த்துவதுதான் எப்படி? அதற்கான மார்க்கம் ஆலய வழிபாடும் திருமுறை ஓதுவதுந்தான் என நாயன்மார் நால்வரும் தமது வாழ்வாலும் வாக்காலும் காட்டியுள்ளார்கள். நாமும் அந்நெறி நிற்க அருளு முகமாகவே உரும்பிராய் பர்வதவர்தனியம்மன் குடமுழுக்குக் கொண்டருளுகின்றார். இனி நிதம்,

பர்வதவர்தனி அம்மையே 'இடையின்றி நினதருளில் எனதுள்ளம் இயங்கொணாதோ?' என்று ஏங்க வேண்டும்.

பர்வதவர்தனி அம்மையே நின் திருப்பாதங்கள் என் 'மெய்யிலா வன்மனத்தே தங்குமோ வந்து?' என்று இரங்க வேண்டும்.

பர்வதவர்தனி அம்மை சந்நிதியில் திருமுறைகளை ஓதுவதோடு சக்தி உபாசகராகிய பட்டரின் வேண்டுதல்களில் ஒன்றையேனும் வழிமொழியவேண்டும்.

**மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே**

என்ற பட்டரின் ஆராமை மிக்க வேண்டுதல் நாடோறும் நம் நாவிலே தவழ்ந்தால் நமதுள்ளம் பர்வதவர்தனி அம்மையும் அப்பனும் குடியிருக்கும் கோயிலாகிவிடும். 'பேறினி இதன்மேல் உண்டோ?'

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருக்கரவீரம் என்ற தலத்தில் எழுந்தருளும் சங்கரன் சந்நிதியில் நின்று துதிக்கிறார்.

**தங்கு மோவினை தாழ்சடை மேலவன்
திங்க ளோடுடன் சூடிய
கங்கை யான்திக ழுங்கர வீரத்தெம்
சங்க ரன்கழல் சாரவே**

'சேர்தல்', 'சார்தல்' என்பவை ஒருபொருட் சொற்கள். 'சேர்தல்' என்றால் 'இடைவிடாது நினைத்தல்' என்று பொருள்(குறள்.3, பரிமேலழகர் உரை). அப்படியானால், 'சார்தல்' என்ற சொற்கும் இங்கே மிகப் பொருத்தமான அப்பொருளைத்தானே கூறவேண்டும். ஞானசம்பந்தப் பெருமான் "தங்குமோ வினை... சங்கரன் கழல் சார?" என்று கேட்கிறார். சங்கரன் பாதங்களை இடைவிடாது நினைக்க - தியானிக்க - தீவினை நம்மிடத்தே வந்து தங்கத் துணியுமோ; தங்குமோ? என்பதுதான் அவர் கேள்வி.

சங்கரன் என்றால் சுகத்தைச் செய்பவன் என்று பொருள். அவன் பாகம் பிரியா நாயகி சங்கரி. எனவே, சங்கரன் பேரிலே சொல்வது சங்கரியாகிய - சுகத்தைச் செய்பவளாகிய - பர்வதவர்தனி அம்மைக்கும் பொருந்தும். இடைவிடாது அவள் கழல் நினைந்தால் 'தங்குமோ வினை?'

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்

மாணவர்களே!

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555




அஸ்வின்,
தரம் - 5A
யா மானிப்பாய் மகளிர் கல்லூரி



ற.அனாகா,
தரம் - 2
ஏஞ்சல் சர்வதேச பாடசாலை




K.பிரவீனா,
தரம் - 9
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி



ர. ஆஜான்
தரம் - 4
யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை



ஆ.சுவேதிஹா,
தரம் - 5F
யா/இந்து ஆரம்பப் பாடசாலை



வி.லக்சன்,
தரம் - 8
K/Ramanathapuram west GTMS

# திறமைகளை வளர்த்தால் வெற்றியே



"நல்ல பசியாக இருக்கிறது. ஏதாவது உணவு கிடைத்தால் சாப்பிடலாம்"
என்ற எண்ணத்துடன் மெல்ல மெல்ல அமைதியாக சென்று கொண்டிருந்தது ஆமை.
எதிரே ஒரு முயல் வந்தது. அது ஆமையைப் பார்த்து,
"நண்பரே..! என்ன..? மெல்ல மெல்ல அமைதியாக எங்கே போகிறீர்கள்..?"
என்று கேட்டது.
"முயலாரே..! உங்களிடம் எதற்காக என்னுடைய தேவைகளைக் கூற வேண்டும்..? உங்கள் வேலையை நீங்கள் பாருங்களேன்." என சற்று கோபமாக பதில் கூறியது ஆமை.
"இல்லை நண்பரே, ஒரு நட்புக்காகக் கேட்டேன்"
என்றது முயல்.
"என்னைக் கேலி செய்வதற்காகவே இப்படிக் கேட்கிறாய்.." ஆமை சொன்னது.
"..சரி.. சரி.. மன்னித்திடு. நான் போகிறேன்"
என்ற முயலிடம்,
"மீண்டும் ஓட்டப் பந்தயத்திற்கு அழைக்கிறாயா..?"
கேட்டது ஆமை.
"இல்லை..இல்லை.. அப்படி ஓடினாலும், இம்முறை நான் தான் முந்துவேன்.."
எனக் கூறியது முயல்.
"அதெப்படி..? பார்க்கத்தான் வேண்டும்.. வா.. ஓடுவோம்.." என்று வம்புக்கு அழைத்தது ஆமை.
"முன்பு போல நான் ஓடிப்போய் ஓரிடத்தில் தூங்கிடுவேன்.. அப்போது வெற்றிபெறலாம் என்று நினைக்கிறாயா..? அந்த தவறை இம்முறை செய்யமாட்டேன்"
என்றது முயல்.
"ஓடிப் பார்ப்போமே.."
எனப் பிடிவாதம் பிடித்தது ஆமை.
முயலும் விருப்பமின்றிச் சம்மதித்தது.
ஓர் இடத்தை அடையாளமாக வைத்து ஓட்டப் பந்தயத்தைத் தொடங்கின.
முயல் தன்னுடைய வேகத்திலும், ஆமை அதனுடைய வேகத்திலும் ஓடின.
முயல் முன்னதாகவே சென்று வெற்றி எல்லையை அடைந்தது. ஆமை சற்று தாமதமாகவே வெற்றி எல்லைக்கு வந்தது.
ஆனாலும் ஆமைக்கு சரியான கவலை. ஆமையால் தோல்வியைப் பொறுக்க முடியவில்லை. இதனைக் கவனித்தது முயல்.
"நண்பரே..! ஏன் கவலை கொள்கிறீர்கள்..? நீங்கள் தோல்வி இல்லையே..? உங்கள் திறமையால் உங்களுக்கான வேகத்தில் தான் நீங்கள் ஓடினீர்கள். இடையில் நிற்கவில்லையே..? வெற்றி எல்லையை அடைந்துவிட்டீர்கள் தானே..
பின்பு ஏன் கவலை..?" என ஆமைக்கு ஆறுதல் கூறியது. "முன்பு ஆமைதானே வென்றது...." என்று இழுத்தது ஆமை. "அப்போதைய பந்தயத்தில், முயல் ஏதோவொரு நினைப்பில் ஓடி ஓரிடத்தில் தூங்கிவிட்டது. இப்போது நான் அதைச் செய்யவில்லை. அதனால் முதலில் வெற்றி எல்லையை அடைந்து விட்டேன். எனது வேகம்தான் காரணம். இருவரின் வேகங்களும் வித்தியாசமானவை. அவரவரின் திறமைக்கு ஏற்ப இருவரும் வெற்றிதான். நான் இன்னும் பல முயல்களோடும், நீங்களும் பல ஆமைகளோடும் ஓடினால்தான் சரியான வெற்றியைக் காண முடியும்.."
என்று தெளிவாகவே கூறியது முயல்.
"அதுவும் சரிதான். நான்தான் தப்புக்கணக்குப் போட்டுவிட்டேன். மன்னித்துவிடு" என்றது ஆமை.
"உண்மையில் அவரவருக்குரிய திறமைகளையும், ஆற்றல்களையும் சரியாக வளர்த்துக் கொண்டால், ஒவ்வொருவருக்கும் வெற்றி கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஏதோவொரு நினைப்பில் நம் தகுதிக்கு மேலான விடயங்களுக்காக வீணாக முயற்சி செய்தால், தோல்விகளையே அதிகம் சந்திக்கவேண்டி வரும். எதிலும் சிந்தனையோடு தான் முயற்சிக்கவேண்டும்..."
என்று கூறிய முயலுக்கு நன்றி கூறி விடை பெற்றது ஆமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org